# வேலையின் கூலி

அல்லது

## கல்வி கலந்த கல்யாணப்பெண்

M. S. கிருஷ்ணஸ்வாமி அய்யர்,

இயற்றியது.



முருகன் துணை.

# முகவுரை.

கடலாடை சூழ்ந்தக் காசினியென்னும் கன்னிகையின் நெற்றியிற் றீற்றிய திலகம்போல விளங்காநின்ற காவிரிநதி பாயப்பெற்று தென்னை வாழை, கமுகு, மா முதலிய பலவளங்களும் நிறைந்து அன்னதான முதலியவைகள் செய்யப்பெற்று தமிழ்நாட்டு மூவேந்தருள் [illegible]வரான சோழ அரசனால் ஆளப்பட்டிருந்த சோழ நாட்டின் ஒரு [illegible]ருந்தூர் என்னும் திவ்வியதலத்து அந்தணர் குலத்துவதரித்[illegible] ரபென. கிருஷ்ணஸாமி ஐயர், அருந்தமிழ் கற்[illegible] அக் காலத்திருந்த புலவர்களின் பெருமையையும் அ[illegible]ங்களின ருமையையும் இக்காலத்தவர் இகழ்கின்றனரே! [illegible]று இகழ்வதற்கு இவர்கள் புத்திக்குறைவோ அல்லது கற்றுக்கொள்ப்பாரின்மையோ அது வுமல்லாமல் முன்னுள்ளவர்கள் பிற்காலத்தவர்க்குச் சாதகமாக வசன நடையில் எழுதாமலிருந்து விட்டனர்; அதுவே பெருங்குறைவாக விருக்கலாமென்பதை உத்தேசித்து இக்காலத்துக் கல்வியில்தேர்ந்த சில வித்துவான்கள் எழுதியச்சிட்டு வருகின்றனர். அவ்வாறே தாமும் ஆடவர் ஸ்திரீகள் சிறுவர் சிறுமியர் யாவரும் விளையாட்டாகப் படித்து வருமாறு ஒருசிறு கதை எளிய நடையில் எழுதியுள்ளார். அதைப்படித்துப் பார்த்தேன்.

அதில் சாம்பசிவய்யருடைய தர்மசிந்தனையைக் குறித்தலால் அறமும் அதனால் பொருள் விருத்தியானதால் பொருளும் அவர் இல்லாள் கணவன் வழியொழுகி அவருக்கு இன்பம் கொடுத்தலால் இன்பமும் இவ்வுலகில் இவ்வளவும் பொருந்தியிருப்பதே மோக்ஷம் என்று ஆன்றோர் கூறியபடி சதுர்வித புருஷார்த்தத்தையும் தரவல்ல இந்நூலானது யாவருக்கும் பயன் படுமென்பதற்கு யாதொரு ஐயமுமில்லை.

மகாதானபுரம்,
ஜுன்மீ —1911.

B. B. சுப்பராயய்யன்,
தமிழ் பண்டிட்,
மதுரை காலேஜ்.

முருகன் துணை.

பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாந் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையு மன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக்கொளற்கு. நாலடி.

ஊழிற்பெருவலியாவுள மற்றொன்று
சூழினுந்தான் முந்துறும். குறள்

ஸுப்ரமண்யாயநம:

# வேலையின் கூலி

## 1. ஒரு பெண்ணின் எண்ணங்கள்.

மாலைப்பொழுது சமீபித்துக்கொண்டிருந்தது. சூரியன் மலைவாயிலில் இறங்கும் தருவாயிலிருந்தான். வீட்டிலுள்ள ஸ்திரீகள் இரவிற்குரிய காரியங்களைச் செய்யத்தொடங்கினார்கள். வாயிற்றிண்ணையில் சீட்டாடிக்கொண்டு இருந்தவர்கள் எல்லோரும் ஆட்டத்தை நிறுத்தித் திண்ணையினின்றும் இறங்கி வம்பு பேசிக்கொண்டே தெருக்கோடியிலுள்ள வாய்க்காலுக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். ஊரிலுள்ள சிறு பள்ளிக்கூடத்தில் வாசித்துக்கொண்டிருந்த பையன்கள் கோலியாட ஆரம்பித்து அரைமணிநேரத்துக்கு மேலாயிற்று. வீட்டின் கூடத்தில் கதைப்புஸ்தகம் வாசித்துக்கொண்டிருந்த இரண்டு பெண்களும் நேரமாயிற்றென்றோ கதையை வாசித்தலுத்தோ கதைப்புஸ்தகத்தைக் கீழே வைத்துவிட்டிருந்தார்கள்.

கதைப்புஸ்தகத்தைப் பக்கத்திலிருந்த அலமாரியில் ஜாக்கிரதையாக வைத்துவிட்டு இருவரும் மாடிக்குச் சென்றார்கள். மாடியில் ஒரு பெரிய அறையும் அதன் எதிரில் திறந்த வெளியும் இருந்தன. அவர்கள் அவ்வறைக்குட் சென்று ஓர் "பெஞ்சு" ஒன்றை எடுத்து வெளியில் போட்டு அதில் உட்கார்ந்தார்கள்.

அவர்கள் இருவரும் சுத்தமான உடையைத் தரித்தவர்கள். இருவரும் பார்ப்பதற்கு இலக்ஷணமுள்ளவர்கள். ஒருத்தி மற்றவளை காட்டிலும் பெரியவள். பெரியவளுக்குச் சுமார் 14 அல்லது 15 வயது இருக்கலாம். சிறியவளுக்கோ 13 வயதுதான் இருக்கும். பெரியவள்

உண்மையில் பெரியவளே. நாலைந்து வருஷங்களுக்குமுன்னால் தன்னை மணந்த கணவன் தன்னைச் சீக்கிரம் அடையுமாறு தவம்புரிந்து நிற்பவள். சிறியவள் சிறியவளே. அவள் தனக்கு ஒரு கணவனை வேண்டி நிற்பவள். அவள் கழுத்தில் மற்ற நகைத்தொகுதியுடன் திருமங்கலியம் என்னும் ஓர் நகையைச் சேர்த்து தனக்கவன் உரிமையானவள் என்று பலர் முன்னிலையில் அவள் கையைப் பிடித்துக்கொள்ள ஏற்கனவே ஒருவன் இப்பெண் பிறப்பதற்குமுன் பிறந்திருப்பினும் இன்னம் அவன் வரவில்லையே என்று வருந்தி நிற்பவள். ஆம், வருந்தி நிற்பவள் தான். தன் வீட்டிற் கருகிலுள்ள பல பெண்களும் கலியாணமாகி தங்கள் கணவருடன் உட்கார்ந்து நலங்கு முதலிய வைபவங்களை அனுபவிப்பதையும் இன்னம் அதிகவயதான பெண்கள் தங்கள் கணவருடன் சந்தோஷமாயிருப்பதையும் கண்டு தான் அவ்விதம் இருக்க இன்னம் நேரவில்லையேயென்று வருந்திநிற்பவள்.

அவையாகினும்போகின்றன. அவற்றைப்பற்றி அவர்களுக்கு அப்பொழுது அவ்வளவாகக்கவலையில்லை. விஷயங்களை உண்மையாகக்கூறி மனத்திற்கு இன்பத்தை விளைவிக்கும்கதைகள் ஏன் எழுதப்படுகின்றன? இப்பெண்மணிகள் போன்றவர்களின் மனோவிசாரத்தையும் ஆசையையும் வருங்காலச் செய்கைகள் தம்மெண்ணம்போன்றிராவாவென்னும் ஆவலையும் அதிகரிக்கச் செய்கின்ற கதைப் புஸ்தகங்கள் ஏன் எழுதப்படுகின்றன? கதையாசிரியர்கள் குற்றம் சாட்டப்படுவார்களா? அல்லது வாசிப்பவர்கள் குற்றம் சாட்டப்படுவார்களா? ஒருவரும் இல்லை. ஆசிரியர்கள் வாசிப்பவர்கள் மனத்தைக் களிப்பிக்கக் கதை எழுதுகிறார்கள். வாசிப்பவர்கள் கதைகளை வாசித்து இன்பம் அடைகிறார்கள். இப்பெண்மணிகள் கதைகளை வாசித்து அவைகளில் நன்மையாக நடந்தவைபோல் தம்முடைய வாழ்நாட்களிலும் நடக்க வேண்டும் என்று எண்ணம் கொண்டிருந்தால் அது அவர்கள் நன்மைக்காகவே. ஆம், அவர்கள் அவ்விதமே எண்ணியிருந்தார்கள்.

நாம் அவர்கள் எண்ணங்களையும் சம்பாஷணையையும் வெளியிடுமுன் அவர்கள் பெயரை வெளியிடுவோம். பெரியவள் பெயர் மீனாக்ஷி. சிறியவள் பெயர் ஞானம்பாள். அவர்கள் இருவரும் சிறிது நேரம் மௌனமாயிருந்தார்கள். பிரகாசமான நீல ஆகாயம் களங்கமற்றிருந்தது. தூரத்தில் கோலியாடுபவர்களினுடைய சத்தம் மெதுவாய்க் கேட்டது. காற்று மெதுவாய் வீசிக்கொண்டிருந்தது. அவர்களைச்சுற்றி எல்லாம் நிச்சப்தமாய் இருந்தது. சிறிது நேரம் பேசாமலிருந்துவிட்டு

ஞானாம்பாள்; "மீனு, கதை வாசிக்க வாசிக்க நேர்த்தியாயிருக்கிறது. உண்மையில் இது நடந்திருக்குமா? அதே மாதிரி நமது வாழ்நாளிலும் நடந்தால் எவ்வளவு இன்பமாயிருக்கும். ஆனால் கதையில் சொல்லப்பட்ட கெடுதல்கள் நமக்கு சம்பவிக்கவேண்டாம். சந்தோஷமான செய்கைகள் நமக்கும் நேர்ந்தால் எப்படியிருக்கும்?" என்றாள்.

"ஆம், அவ்விதம் நேர்ந்தால் நேர்த்தியாகவே இருக்கும். என் கணவருக்கு நான் எழுதப் படிக்கத் தெரியும் என்றுகூடத் தெரியாது; நான் பாடுவேன் என்று நினைக்கவேமாட்டார்; என்று எண்ணுகிறேன். என்னை ஒருதடவையாவது நன்றாய்ப் பார்த்தவரல்ல. இரண்டொரு மாதத்திற்குப் பிறகு இங்கு வந்தாலும் வரலாம். அப்பொழுது ஒரு சமயம் பேசலாம் என்று தோன்றுகிறது. ஆனால் எப்படிப் பேசுகிறது? வெட்கம் மானத்தை விட்டு விட்டா பேசுகிறது?"

"ஏன். உன் அகமுடையான் படித்தவராயிற்றே. நீ பார்த்தால், பார்க்கவேண்டுமென்று பார்த்தால் உன்னையவர் பார்க்கமுடியாதா? அல்லது அவருடன் பேசவேண்டுமென்று பேசினால் பேசமுடியாதா? அவர்தான் கல்லா? இரும்பா? உன்னை எத்தனை தடவை பார்த்திருக்கிறாரோ. "லக்ஷ்மி" கூப்பிட்டதுபோல் ஒருதடவை திண்ணையில் உட்கார்ந்திருக்கும்போது கூப்பிட்டுவிடுகிறதுதானே."

"ஆம். ஏதாவது ஒன்று செய்யத்தான் வேண்டும். என்னவோ அவரைப்பார்க்க வேண்டுமென்று ஓர் ஆசை தோன்றுகின்றது."

"அகமுடையான் பெண்சாதி யென்றால் அவர்களைப் போல் இருக்கவேண்டும். நித்தியம் தன் புருஷனோடு சண்டைப்படுகிறாளே காமாக்ஷி, அவளைப்பார். புருஷன் படித்தவன்; கெட்டிக்காரன்; அவள் மிருத்யுவாய் வந்திருக்கிறாள். என்ன செய்கிறது?"

"அவாத்து ஸீதையைப் பார். அழகுள்ளவள்; படித்தவள்; பாடுவாள்; அவள் புருஷன் நித்தியம் எருமை மாடுபோல காலையில் முழுகி தருப்பையை எடுத்துக்கொண்டு ஊர் ஊராய்த் திரிகிறான். எவ்வளவு குப்பையாயிருந்தாலும் பாதகமில்லை. மேல் வேஷ்டியைக்கூட கீழே போட்டுக்கொள்ளாமல் குப்பையின் மேல் படுத்துக்கொள்கிறான். அவன் மேல் ஒரு அங்குலம் அழுக்குப்படிந்திருக்கிறது." என்றாள் மீனாக்ஷி.

"என்னுடைய ஆசைவேறு. எனக்கு புருஷாக வருபவரை நான் முதலில் பார்த்து எனக்குப் பிடித்தவரா என்று யோசித்துத்தான் கலியாணம் செய்யவேண்டும். நமக்குப் பிடிக்காதவர்களை நாம் எப்படி விரும்புகிறது."

"அப்படிச்சொல்லாதே. நல்லவர், பொல்லாதவர், என்று நாம் எப்படிச்சொல்லுகிறது. அழகுள்ளவர், விகாரமானவர் என்று எப்படி தீர்மானிக்கிறது. என் அகத்துக்கார்—" ஒருதரம் மீனாக்ஷிக்கு மயிர்க்கூச்சலிட்டது. சிறிது நின்றாள். "என்னகத்துக்காரர் எனக்குக் கலியாணம் ஆகும்போது சிறுபையனாகவிருந்தார். அப்பொழுது என்ன அழகு என்று சொல்லுகிறது. சிறுவராயிருந்தார். இப்பொழுது, போன வருஷம் பார்த்தேன். சிவப்பாய் வாட்டசாட்டமாய் உயர்ந்திருக்கிறார். பார்க்கப் பார்க்க ஆசையாயிருக்——"

ஞானம்பாள் சிறிது நேரம் யோசனையாயிருந்தாள். மீனாக்ஷியும், தன் கணவரை மனத்தில் வரவழைத்து அவருடன் பேசிக்கொண்டிருந்தாளோ, அல்லது பேசமுயன்றாளோ, என்னவோ?

"எப்படியும் புருஷனைப் பார்த்தபிறகுதான் கலியாணம் செய்ய வேண்டும். 'அவாத்து' சீதாவுக்கு போன வருஷம் கலியாணமாயிற்று. அவள் அகமுடையானுக்கு 20 வயது இருக்குமென்று என் அம்மா சொன்னாள். உன் அகத்துக்காரருக்கு இப்பொழுது அவ்வளவுதானே இருக்கும். அப்படி ஒரு புருஷனைக் கலியாணம் செய்து கொண்டால் அவரை ஏன் நாம் பார்த்து இஷ்டப்பட்டுக் கலியாணம் செய்யக் கூடாது."

"நல்லவர் பொல்லாதவர் என்று நமக்கு எப்படித் தெரியும்."

"அது தாயார் தகப்பனார் பாடு. அவர்கள் கவனித்துக்கொள்ளுகிறார்கள்."

"எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை."

"உனக்கில்லைதான். எனக்குண்டல்லவா?"

"சிறுவேம்பூர் சாஸ்திரிகள் பிள்ளைக்கு உன்னைக் கொடுப்பதாகப் பேசிக்கொண்டிருந்தார்களே அது என்னவாயிற்று?"

"அவனைப் பார்க்கக்கூடப் பிடிக்கவில்லை. அவருக்கு ஜானகியகமுடையான் நலம். நான் வேண்டாமென்று அம்மாவிடம் சொல்லி விட்டேன். நின்றுபோயிற்று."

அவர்கள் எழுந்து நடந்துகொண்டே கதையில் புருஷனும் ஸ்திரீயும் எப்படியிருந்தார்கள் என்பதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். எவ்வளவு யோக்கியமான சம்பாஷணை! மனத்திலுள்ளவையனைத்தும் வெளிப்படுத்தப்பட்டன. தாயாரிடமும் தந்தையிடமும் தமையனிடமும் இவ்வளவு வெளிப்படையாகக் கூறப்படுவதில்லை. சிநேகத்தின் அற்புதமான சக்தி இதுவே. இருவர் மனத்தையும் ஒன்றாகக்கட்டும் மனத்திற் கெட்டாத நூற்கயிறு.

மீனாக்ஷி பக்கத்து வீட்டுப்பெண். நினைவு தெரிந்ததுமுதல் ஞானம்பாள் ஒருத்தியிடமே உண்மையான ஸ்நேகங்கொண்டவள். அவளிடமே தன் எண்ணங்களை ஒளிக்காமல் வெளிப்படுத்தியவள். ஞானம்பாளும் அவ்விதமே மீனாக்ஷியினிடம் உண்மையான அன்பு பூண்டவள். அவளும் தன் எண்ணங்களை மீனாக்ஷியினிடம் கூறுவாள். இன்று இருவரும் தங்கள் எண்ணங்களை வெளியிட்டனரன்றோ?

இரண்டொரு நிமிஷம் பேசிப் பின்பு மௌனமாய் இருந்தார்கள். மீனாக்ஷி பெஞ்சியில் உட்கார்ந்து யோஜனையாய் இருந்தாள். ஞானம்பாள் மாடியின் சுவர்மேல் சாய்ந்து தன் கையைக் கன்னத்தில் வைத்துக் கொண்டிருந்தாள். ஒரு கைதேர்ந்த சித்திரவேலைக்காரன் அவளைப் பார்த்தால் அந்நிலையில் அவள் படம் ஒன்று எழுதாமலிரான். அவள் அவ்வளவு அழகுடன் சாய்ந்து கொண்டிருந்தாள். சிவந்த உதடு, நன்றாய் அமைந்த நெற்றி, நடுவில் ஒரு சிறு சாந்துப்பொட்டு. எல்லாவற்றையும் கூறி வாசிப்பவர்களுக்குச் சிரமத்தைக் கொடுப்பானேன், மனத்தில் பாவியுங்கள். ஓர் அழகுள்ள பெண்——அழகு, எவ்வளவு அதிக அழகாயிருந்தாலும் உங்கள் மனத்திற்கு இன்பம் கொடுக்கக் கூடியதே.——ஓர் அழகுள்ள பெண் மாடியின் சுவரில் சாய்ந்து ஒரு கையை மடித்து தன் உடம்புடன் சேர்த்து மற்றொரு கையால் தன் கன்னத்தைத் தாங்கிக்கொண்டு உங்களைப் பார்ப்பதுபோல் தோன்றினால்,——

கீழே வீதியில் போய்க்கொண்டிருந்த ஒரு வாலிபன்——கெட்ட வாலிபன்—(அங்குமிங்கும் பார்ப்பானேன். நிற்பவர்களையும் உட்கார்ந்திருப்பவர்களையும் பேசுகிறவர்களையும் பார்ப்பானேன) அவளைப் பார்த்தான். அழகுள்ளவள் என்று எண்ணினானோ? ஏன் அவ்விதம் பார்ப்பவரெல்லாம் அவளைப் பார்த்து விரும்ப நின்று கொண்டிருந்தாள் என்று எண்ணினானோ? அல்லது தானே அவளை விரும்பினானோ? ஆயினும் எதையும் பார்ப்பது போலவே அவளையும் பார்த்துவிட்டு தன் பாட்டில் போய்விட்டான்.

அவள் சாய்ந்துகொண்டிருந்தாள். அவள் தன்னை யாவரேனும் பார்த்து தன்னைமணம் செய்ய விருப்பம் கொண்டு தன் கரத்தை——இன்னம் விவாகமாகவில்லையன்றோ)——அடைய முயலலாம் என்றோ, அல்லது போவார் வருவாரை வீணில் பார்த்து நிற்பவரைப் போலவோ, அல்லது (உண்மையைக் கூறுமிடத்து) தான் நிற்பது இத்தனை அபிப்பிராயங்களுக்கு இடமாகும் என்பதை யுணராமல் யோசனையில் ஆழ்ந்தவளாகவோ, நின்றுகொண்டிருந்தாள்.

கீழே வீட்டிற்குள் ஒருபலத்தசத்தம் உண்டாயிற்று. உடனே அவள் திரும்பினாள். "அதென்ன சத்தம்." அவளுடைய எண்ணமெல்லாம் பறந்து போயின. என்ன நேர்த்தியான எண்ணங்களோ? என்ன ஸந்தோஷமான விழிப்புச் சொப்பனத்திலிருந்தாளோ? "ஏதேனும் ஒரு சத்தம் எப்பொழுதும் உண்டாகிறது." அவள் முகக்குறிப்பினால் இச்சத்தம் அவள் யோசனையை,— சந்தோஷமான யோஜனையைக் கெடுத்து விட்டது என்றறியலாம். மீனாக்ஷியும் தன் யோஜனையை—அவளுக்கும் இன்பகரமாயிருந்திருக்கும்,— யோஜனையைவிட்டு ஞானம்பாளுடன் அச்சத்தம் என்னவென்று அறியக்கீழே வசன்றாள்.

ஏதோ ஒரு பாத்திரம் உயர இருந்த ஓர் பலகையின் ஓரத்தில் வைக்கப்பட்டிருந்ததால் எலியால் தள்ளப்பட்டு அப்பாத்திரமும் பலகையும் அதன் மேலிருந்த சாமான்களும் தரையில் விழுந்ததால் உண்டான ஒரு சத்தம். எப்படியும் அது நலல சத்தமல்ல. இருவருடைய சந்தோஷமான மனோநிலைமையைக் கெடுத்துவிட்டது. அதே நிலைமையில்— சத்தத்தால் தடைபடுமுன் இருந்த நிலைமையில் தம்மனத்தைக் கொண்டு வந்து நிறுத்த எவ்வளவு சிரமம் உண்டாகும்?

மீனாக்ஷி தன் அருமைத்தோழியிடம் விடைபெற்றுத்தன் வீட்டுக்குச் சென்றாள். ஞானம்பாள் தன் வீட்டில் தான் செய்யவேண்டிய காரியங்களைச் செய்யலானாள்.

## II. பெண்ணைப் பெற்றோர் படும் துன்பம்.

வெள்ளிக்குடி என்னும் கிராமம் காவேரிப் பாய்ச்சலுள்ளது. அது காவேரியினின்றும் பிரிந்து ஓடும் ஓர் சிற்றாற்றுக்கும் காவேரிக்கும் இடையில் இருக்கிறது. கண்ணுக்கெட்டியவரை பசுமையான வயல்களும தென்னஞ் சோலைகளும் மா-பலா முதலிய கனிமரங்கள் நிரம்பிய தோப்புகளும் சூழ்ந்திருக்கின்றன. நல்ல கோடையிலும் வெயிலின் தாபம் அவ்வூரில் வசிக்கும் ஜனங்கள் அறியாதபடி குளிர்ச்சியுள்ள கிராமம். அது ஒரு சிறிய கிராமம். இரண்டு வரிசையிலும் 50 அல்லது 60 பிராமண வீடுகள் கொண்டது. பிராமணர்களன்றி ஏனைய வகுப்பாளர்களையும் சேர்த்தால் அது பெரிய கிராமம் என்றே சொல்லலாம். ஆயினும் வைசியர்களும் சூத்திரர்களும் அதிக பிரபலமான பணக்காரர்களாகவது அல்லது பிரபலமான காரியங்களில் தலையிட்டுக் கொள்ளுபவர்களாகவாவது இராமையால் அவர்கள் இருப்பதும் இல்லாததும் ஒன்றாக விருந்தது. காலைந்து எண்ணை வாணி

பர்கள் மாமரங்களால் சூழப்பட்ட ஓர் தோட்டத்தின் நடுவில் வசித்து வருகிறார்கள். சில தட்டாரர்கள் ஊரின் நடுவில் வசிப்பதைவிட்டுப் பக்கத்தூர்க் கருகில் வசித்து அவ்வூரிலேயே தமது தொழிலை நடத்தி வருகிறார்கள். இன்னம் சில வகுப்பார் இவர்போலவே தனித்து வசித்து வருகிறார்கள். ஆகவே பெரிய கிராமம் சிறியதாகவே தோன்றுகிறது.

அநேக கிராமங்கள் இவ்வூரைச்சுற்றி இருக்கின்றன. அவைகள் மிகவும் நெருக்கமாயிருப்பதால் இவை யனைத்தையும் ஒன்றாக மதித்து அவ்விதமே பெயரிட்டு பெரிய பட்டணம்போலாக்கி பட்டணத்துக் குள்ள சௌகரியங்களை இவ்வூர்தொகுதிக்குக் கொடுக்கவேண்டு மென்று ஒரு பெரிய குடித்தனக்காரர் ஒருமுறை சொன்னாராம், ஆயினும், அது கதைபோல் கூறப்படுவதேயன்றி அவ்வபிப்பிராயத்தைச் சிர்தூக்கி அதன் நன்மை தீமையைக் கவனிப்பவர் ஒருவருமில்லை.

அக்கிரகாரத்தின் நடுவில் ஓர் பெரிய வீடு. அதன் முன்புறத்தில் ஒரு பந்தல் போடப்பட்டிருந்தது. சுவர்கள் எல்லாம் கண்ணுக்கினிமை யான நீல நிறம் கலந்த சுண்ணாம்பு பூசப்பட்டிருந்தது. அவ்வீடு அதன் பக்கத்தில் நின்ற மற்ற வீடுகளைக்காட்டிலும் அதிக உயர்வாய் எடுத்துக் காட்டியது. வீடுபார்ப்பவர்களுக்கு நல்ல வீடாகத் தோன்றுவதுபோலவே அவ்வீட்டுக்குடையாரும் அவ்வூராரால் நல்லவரென்றே மதிக்கப்பட்டு வந்தார். 45 வயதுள்ளவரும் காம்பீரமான நடையுடையவருமான சாம்பசிவய்யர் என்பவர் தான் தருமம் செய்வதிலும் அகாலத்தில் பசி யென்று வந்தோருக்கும் அன்னம் போடுவதிலும் யாவரிடத்திலும் முகம் கடுக்காமல் பேசுவதிலும் பெயர் பெற்றிருந்தார்.

இவர் மிகவும் அதிருஷ்டமுள்ளவர் என்று எல்லோரும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இவர் உண்மையில் தமது நிலங்களில் பாடுபட்ட போதிலும் அவ்விதம் பாடுபட்டும் பலர் பயனடையாது நஷ்டமடைந்த மையால் இவர் அடைந்த அதிக விளைச்சல் இவரது அதிருஷ்டத்தா லென்றும் இவர் செய்யும் தானதருமங்களாலென்றும் ஜனங்கள் கூறி வந்தார்கள். இவர் செய்யும் அன்னதானமே இவரைக் காப்பாற்ற வல்லது என்று புகழ்ந்தார்கள். இவருடைய செல்வம நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. ஆயினும் அவ்விதம் அவர் செல்வம் வளருவதைக் கண்டு ஒருவரும் பொறாமைப்பட்டாரில்லை. ஏனெனின் சாம்பசிவய்யர் ஊராரெல்லாருக்கும் நல்லவராயும், அவர்களுக்கு உபகாரம் செய்பவரா யும் அவர்களுடைய நன்மையை நாடுபவராயும் இருந்தார், அவர்களும் இவருடைய மேலான குணத்தைப்பற்றிப் பேசி அவரை வாழ்த்திக் கொண்டிருந்தார்கள்.

அவர் செல்வவந்தர் என்று தாராளமாய்ச் சொல்லலாம். செல்வமு டைமையும் செல்வமின்மையும் ஆகிய இவ்விரண்டு நிலைமையும், "இவ் வளவு பொருளுடையவன் செல்வன்" "இவ்வளவு பொருளுடையவன் தரித்திரன்" என்று ஓர் வரையறையால் கூறப்படுவதில்லை. சிறிது செல்வமுடையவன் அதிக செல்வமுடையவன் முன் ஏழையெனவும் அவ்வதிக செல்வமுடையவன் அவனிலும் அதிக பணக்காரனை மற்ற வன் முன் ஏழையெனவும் உலகம் கூறுகின்றது. சாம்பசிவய்யரும் இலக்ஷக்கணக்கான சொத்துடையவரில்லையெனினும் அவர் தம்சொத் தை பதினாயிரத்தால் எண்ணக்கூடியவர். அவர் இருக்கும் ஊரிலும் பக் கத்தூர்களிலும் அவரினும் பணக்காரர் ஒருவருமில்லை.

செல்வப்பொருள்போலவே கல்விப்பொருளிலும் குறைவற்றவர். தமிழறிவில் சாமிநாதையரில்லையெனினும் "ஆலையில்லாவூருக்கு இலுப் பைப்பூ சர்க்கரையென அவ்வூர்க்கு அவர் தமிழ்ப்பண்டிதர்தான். அவர் இராஜுசாஸ்திரிகளின் அவதாரம் இல்லையெனினும் அவ்வூரில் அவரே பண்டிதர்.

அவருக்கு ஒரு பையனும் பெண்ணும் உண்டு. பையன் பெயர் சங்கரன். அவனுக்கு வயது சுமார் 19 இருக்கும். சென்னையில் ஓர் கலாசாலையில் வாசித்துக்கொண்டிருந்தான். அவன் மிகவும் புத்தியும் அழகும் வாய்ந்தவன். தந்தைசொற்றவறாத நெறியுடையவன். பெண் ணின் பெயர் ஞானம்பாள். அவளைப்பற்றியே முதலத்தியாயத்தில் கூறினோம்.

ஞானம்பாள் பிறந்து ஆறேழு வருஷமானவுடன் அவள் தாயார் தன் பெண் சிறியவளாயிருக்கும்போதே கல்யாணம் செய்துபார்க்க வேண்டுமென்று விரும்பினவளாய் தன்கணவனைப் பல்காலும் வேண்டி நின்றனள். ஞானம்பாள் தாயார் ஏனைய பிடிவாதமுள்ள ஸ்திரீகள் போல மூடத்தனமுடையவளாகவிருந்தால் தன் காரியத்தைச் சாதித்தி ருப்பாள். காலாகாலம் தெரியாமல் கணவன் கோபமானவேளை சந் தோஷமானவேளை என்று வேற்றுமை பாராட்டாமல் சதா தொந்தரை செய்து என்ன சமாதானம் சொன்னாலுங்கேளாமல் ஒரே மூர்க்கத்தன மாயிருந்து தன் கணவன் மனத்துக்கு விரோதமாகத் தன் காரியத்தை ச் சாதித்திருப்பாள். ஒருசமயம் இருவருக்கும் மனஸ்தாபத்தையும் புரு ஷனுக்கு அதிருப்தியும் விரக்தியும் உண்டாக்கியிருப்பாள். ஆனால் அவள் அத்தகையள் அல்லள். பொதுவாய் அவள் தன் கணவன்சொல் லுக்கு மாறாகவாவது அவர் மனத்துக்கு விரோதமாகவாவது ஒன்றும்

சொல்லுவதும் செய்வதும் இல்லை. இரண்டொருதடவை தன் கணவன் சந்தோஷமாயிருந்தபோது தன் பெண்ணுக்குச் சிறுவயதிலேயே கலியாணம் செய்து பார்க்கவேண்டுமென்று தனக்காசையிருப்பதாகச்சொன்னாள். சாம்பசிவய்யர் அதில் இஷ்டங்கொள்ளாமல் தன்னால் கூடிய வரையில் தகுதியான சமாதானங்களைச்சொன்னார். அவர் மனைவியும் அவரும் எக்காரியங்களிலும் ஏகோபித்த மனமுடையவராதலின் அவர் மனைவி சமாதானமடைந்துவிட்டாள்.

இவ்வளவு சிறுவயதில் கலியாணம் செய்வது அவ்வளவு உசிதமல்ல என்று எண்ணியிருந், —ஆசார சீர்திருத்த சபையைச் சேர்ந்தவரல்ல —சாம்பசிவய்யர் இரண்டு வருஷம் கழித்து மிக சிரமப்பட்டு கால வழக்கத்திற்குத் தக்கபடி 'சந்தையில் மாடு பிடிப்பது போல்' ஒவ்வொரு ஊராய்ச் சென்று தமக்கு பிடிக்காத வரன்களையெல்லாம் தள்ளிவிட்டு தமக்கேற்றதான ஓர் நல்லவரனைத்தேடி அவ்வரனுக்கு உயர்ந்த விலையைப் பேசித் திட்டம் செய்து கலியாணத்துக்கு நாளும் சீக்கிரம் பார்க்கும்படி ஏற்பாடு செய்து வரன் தேடுதலாகிய பெரிய கஷ்டமான ஓர் யாத்திரையை முடித்து தமது ஊருக்கு வந்து சேர்ந்தார்.

ஊரெல்லாம் கலியாண விஷயமாய்ப் பேச்சு நடக்கலாயிற்று. ஒவ்வொரு பெண்ணைப் பற்றியும் வரனைப் பற்றியும் தமக்குத் தோன்றிய அபிப்பிராயங்களைக் கூறலானார்கள். ஏழைகள் பூமியில் தோன்றினாலும் சாம்பசிவய்யரைப் போன்று பணக்காரராய்ப் பிறக்கவேண்டுமென்று எண்ணி வருந்தினார்கள். பணக்காரர்களும்—இரண்டொரு வீட்டார் சாம்பசிவய்யரைப்போல் அவ்வளவு பணக்காரரில்லாவிடினும் அவருடைய சொத்தில் முக்கால் பங்காவது அவர்களுக்கு இருக்கும்—தம்முடைய படியாத முட்டாள் பிள்ளைகளைக் கண்டித்துக்கொண்டு வந்தார்கள். ஏனெனின் தம்முடைய பிள்ளைகள் நன்றாய்ப் படித்திருந்தால் ஒரு வேளை சாம்பசிவய்யர் பெண்ணை யடைய முயன்றிருக்கலாமாதலால்.

உலகத்தில் எவரும் தம் வாழ்நாளில் எப்பொழுதும் நன்மையையே யடைவதில்லை. தீமை கலவாத நன்மையை நாம் கண்டதில்லை. சாம்பசிவய்யருடைய ஒரு தூர பந்து வெகுகாலம் வேறு தேசங்களுக்குப் போயிருந்து திரும்பும்போது தற்செயலாய் அவ்வூரின் வழியாய்ப் போக நேரிட்டது. சாம்பசிவய்யர் தமக்கும் அவருக்கும் உள்ள பந்தத்துவத்தைத் தெரிந்துகொண்டு இரண்டொரு நாள் தம் வீட்டில் தங்கியிருக்கச்

செய்தார். பின்பு அவர் போனதும் யாரோ ஒருவர் அந்த பந்து கடல் யாத்திரை செய்தவரென்று ஒரு வதந்தியைக் கட்டி விட்டார். கெட்ட வதந்திக்குக் கேட்பானேன். எங்கும் பரவிவிட்டது. எவரும் சாம்பசிவய்யரைப் பற்றித் தூற்றலானார். கடல் யாத்திரையின் தோஷம் அக்காலத்தில் மிகவும் கடுமையான தென்று கருதப்பட்டிருந்தது. ஜனங்கள் ஜாதிப்பிரஷ்டம் செய்யப்படுவோர்கள் எனப் பயமுறுத்தப் பட்டார்கள். சாம்பசிவய்யரும் ஜாதி பிரஷ்டம் என்னும் கொடுங் கோலுக்குட்பட்டவரே. என்ன செய்வார். அவர் செய்த தான தருமங்களின் புண்ணியம் இப்பொழுது தெரியாமல் செய்த ஓர் பாபத்தைப் போக்கக் கூடியதாயில்லை. அதற்கென்று வேறோர் பிராயச்சித்தம் என்ற சடங்கு செய்யவேண்டியிருக்கிறது. உடனே தமது தூர பந்துவைப் பற்றி விசாரிக்கலானார். அவர் கப்பலேறிப் பிரயாணம் செய்ய வில்லை யென்று தெரிந்தது. ஆயினும் உலகம் பொல்லாதது அல்லவா, என்ன சொல்லியும் அது கேட்கவில்லை. பிராயச்சித்தம் செய்யவேண்டியதே என்று நிர்மானிக்கப்பட்டது. ஆகவே அவர் தமது செல்வாக்காலும் பணத்தாலும் தக்க வைதிகர்களைக் கொண்டு பிராயச்சித்தம் செய்வதிலும் தவறுதல் உண்டாகாதபடி ஜாக்கிரதையாக அச்சடங்கைச் செய்து முடித்தார்.

அவர் கப்பலேறிச் சென்றவருடன் கூட உட்கார்ந்து சாப்பிட்ட குற்றத்தை பிராயச்சித்தத்தால் போக்கடித்தார். அவ்வித பந்து ஒருவர் உண்டென்பதை எப்படி மாற்ற முடியும்? ஆகவே மிகச்சிரமப்பட்டு தேடியவரன் 'கைக்கெட்டியது, வாய்க்கெட்டாது' என்றபடி இவருக்குக் கொடுத்து வைக்காமல் போயிற்று.

நாட்கள் கழிந்தன. மாதங்கள் வந்து போயின. எவரும் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்வதாய் வரவில்லை. பகீரதப்பிரயத்தனம் செய்தும் ஒருவரும் சம்மதப்படவில்லை. கடல் யாத்திரை செய்தவர்களும் ஆசாரஹீனர்களென்று சாமானிய ஜனங்களால் மதிக்கப்படுவோருமே சம்மந்தம் செய்ய ஒப்புக்கொண்டார்கள். அய்யருக்கு அது விருப்பமில்லை. தாம் யாதொரு குற்றமும் செய்யாதிருக்க தம்முடைய தூர பந்து யாரோ ஒருவர் 'செய்த' குற்றத்திற்காகத் தாம் கஷ்டப்படுவது அவருக்கு இஷ்டமில்லை. வருஷங்கள் கழிந்தன. கலி புருஷன் இரக்கங்கொண்டான். பிறந்த ஊரில் காலந்தள்ள முடியாமல், வயிற்றுப் பிழைப்புக்காக வேறு நாட்டுக்குக் கப்பல் யாத்திரை செய்து வந்த ஒருவனால் அவனுடைய தூர பந்து—எத்தனைகாத தூரமிருந்தாலும்

சரி — உலகத்தில் நிந்திக்கப்படுவது அப்புருஷனுக்குப் பிடிக்கவில்லை வைதீகர்கள் பணத்தாசை கொண்டு செய்யத் தகாதனவும் செய்து வைக்கிறார்கள். அவர்கள் பணங் கொடுத்தவருக்கு ஒருவிதமாகவும் கொடாதவருக் கொருவிதமாகவும் நடக்கிறார்கள். ஆகையால் அவர்களை நீக்கி மற்றவர்களுக்காக ஒரு சட்டம் செய்யலானான். கடல் யாத்திரை செய்தவர்கள் போனவிடத்திலும் கப்பலிலும் சந்தியாவந்தனமாவது அனுஷ்டித்து மாமிசம் சாராயம் ஆகிய இரண்டையும் பகிரங்கமாக உபயோகப்படுத்துவதை ஒழித்திருந்தால் அவர்கள், வைதீகர்கள் ஒப்புக்கொண்டாலும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், வைதீகர்களுடைய அபிப்பிராயத்தைக் கேளாமலே, அதாவது பிராயச்சித்தம் செய்யாமலே பிறருடன் சாப்பிடுவது, சம்பந்தம் செய்வது தகுமென்று ஓர் விதி ஏற்படுத்தி ஸ்மிருதியில் ஓர் சுலோகமும் சேர்த்துவிட்டான்.

இதன் காரணமாக பலவிவாகங்கள் நின்றிருந்தவை நடைபெறலாயின. முதலில் சம்மதப்படாத வைதீகர்களும் தாராளமாய் கலியாண வீட்டில் போய் சாப்பிடலானார்கள். வைதீகர்களும் காலத்திற் கேற்க நடக்கவேண்டுமென்றும் இல்லாவிட்டால் உலகம் நடைபெறாதென்றும் ஆபத்துக்காலத்தில் தோஷமில்லை என்றும சமாதானம் பிறகு சொல்லலானார்கள். ஆம், மீறிவிட்டால் பிறகு கெஞ்சவேண்டியது தானே மறுபடியும் சாம்பசிவய்யர் தம் பெண் கலியாண விஷயமாய் பிரயத்தனம் செய்யலானார். மிகசிரமப்பட்டுக் கடைசியில் ஒருவரை நிச்சயம் செய்தார். கலியாணம் நடை பெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

## III. ஓய்வு நாட்கள்.

சென்னை நகரில் ஜனநெருக்கமுள்ள ஓர் பாகத்தில் சுந்தரமய்யர் குடியிருந்தார். வீடு மிகச் சிறியது. அதன் முன்புறத்தில் ஒரு சிறிய அறையும் அதற்குப் பக்கத்தில் ஒரு கூடமும் வீட்டின் உட்புறத்தில் இரண்டு அறையுமே இருந்தன. கோடை காலத்துக்காக வென்று மாடியில் ஓர் கொட்டகை போடப்பட்டிருந்தது. சுந்தரமய்யர் மிக சிரமத்துடன் மாலைப்பொழுதில் வீட்டிற்கு வந்தார். இவர் வந்த அரவம் கேட்டவுடன் அவர் மனைவி அவர் முன் வந்து அவரை யிட்டுக்கொண்டு நாற்காலியில் உட்காரவைத்து விசிறலானாள்.

"அப்பா, ரொம்ப சிரமமாயிருக்கிறது. இன்றைய அலைச்சலைப் போல் ஒருநாளும் அனுபவிக்கவேயில்லை. ரொம்ப அலைச்சல், ரொம்ப கஷ்டம்."

"போன காரியம் முடிந்ததோ?"

"முடிந்தது. நான் பட்ட சிரமத்துக்காக இருநூறு ரூபாய் கொடுத்தார்கள். அதிக தாகம். கொஞ்சம் தீர்த்தம் கொண்டுவா."

உடனே விசிறியைக் கீழே வைத்துவிட்டு ஓர் தட்டில் சிறிது தின்பண்டங்களும் ஒரு செம்பில் குளிர்ந்த தீர்த்தமும் ஒரு பஞ்ச பாத்திரமும் கொண்டுவந்து அவர் முன் வைத்து நின்றாள்.

"பக்ஷணம் வேண்டாம். தீர்த்தம் போதும்"

சிறிது தீர்த்தம் பஞ்சபாத்திரத்தில் ஊற்றி அவர் கையில் கொடுத்தாள். தீர்த்தம் குடித்துவிட்டு பாத்திரத்தைக் கீழே வைத்துவிட்டு,

"கோபாலன் எங்கே?" என்றார்.

"வெளியில் போய் வருவதாய் சொன்னான்."

"எப்பொழுது போனான்?."

"காலையில் பத்துமணியிருக்கும்."

"இன்னம் வரவில்லை! என்னவேலை, சனியன்; உனக்கு இது பிடித்திருக்கிறதா?"

"எனக்கு என்ன தெரியும்? நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்றே எனக்குத்தெரியாது. வேலை இப்படிப்பட்டது என்று எப்படிச்சொல்ல முடியும்?"

"நான் அடிக்கடி இன்னின்ன செய்கிறேன் என்று உன்னிடம் சொன்னதில்லையா? ஏன் ஒன்றும் தெரியாதென்று சாதிக்கிறாய்? நீயும் சாமானிய ஸ்திரீயாய் விட்டாயோ?"

"ஸ்திரீ எப்பொழுதும் ஸ்திரீதானே. ஆனால் நான் ஒன்றும் பொய் சொல்லவில்லையே,"

"ஆனால் என் வேலை இன்னதென்று தெரியாதென்கிறாயல்லவா?"

"ஆம், தெரியாதுதான். துப்பறியும் வேலை யென்று சொன்னால் தெரிந்தவளாய்விடுவேனா? துப்பறிவது என்றால் என்ன என்று எனக்குத் தெரியுமா? தெரிந்தாலல்லவா உங்கள் வேலை இன்னதென்றும் எப்படிப்பட்டதென்றும் தெரியும்?"

"ஆனால் ஒவ்வொரு ஸ்திரீயும் தன் புருஷனிடத்தில் பக்தி, சிரத்தை, அன்பு, விசுவாசம், கீழ்ப்படிதல், அன்புடன் பணிவிடை செய்தல், முதலிய நற்குண நற்செய்கைகள் உடையவளாயிருந்தால் தன்

புருஷனுடைய வேலை இன்னதென்றும் எப்படிப்பட்டதென்றும் அறியலாம் என்றும் அதனோடு அவன் மனத்தைக் கவரலாமென்றும் சுந்தரஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே என் வேலையின்னதென்றும் என் வேலை இப்படிப்பட்டதென்றும் உனக்குத் தெரியாவிட்டால் நான் என்ன சொல்லுவது?''

''சொல்லுவதென்ன? நல்ல குணமும் நல்ல செய்கையும் எனக்கு இல்லையென்று சொல்லவேண்டியதுதான்.''

''அப்படி நான் சொல்லவில்லையே?''

''அப்படி அதே வார்த்தைகளைச் சொன்னால் தானே? இல்லாவிட்டால் தெரியாதா?''

''அவ்வளவு தூரம் தெரிவதாயிருந்தால் என் உத்தியோகம் என் தெரியவில்லை?''

''அதெப்படித் தெரியும்''

''நான் பேசும்போது தவறிக் குற்றமிருந்தால் அதைமாத்திரம் கண்டுபிடிக்கத் தெரியும்.''

''ஆமாம், உங்களிடம் கற்றுக்கொண்டது தானே.''

''நான் சொல்லிக் கொடுத்தேனோ அந்த வித்தையை?''

''இல்லை''

''ஆயின்?''

மனைவி பேசாமல் நின்றுகொண்டிருந்தாள். சுந்தரமய்யர் நிமிர்ந்து உட்கார்ந்து அவள் இரண்டு கையையும் பிடித்துக்கொண்டு ''எப்படித் தெரிந்துகொண்டாய்'' என்று கேட்டார். பதில் சொல்லவில்லை யவர் மனைவி. சிரித்த முகத்துடன் நின்றாள் ''என்னிடம் பொய்யா சொல்லுகிறாய். முதலில் தெரியாதென்றாய். இப்பொழுது தெரிகிறதென்கிறாய் உன்னை நம்பக்கூடாது உன்னைத தண்டிக்கிறேன் பார்.'' என்று சொல்லிக்கொண்டே அவளை வலியத்தழுவி முத்தமிட்டார்.

''நித்தியம் ஒரு பொய் சொல்லலாம். இவ்வித தண்டனையை எந்த ஸ்திரீயும் தன் புருஷனிடம் தினம்தோறும் அடைய முயலவேண்டும் என்று ஸுந்தரஸ்மிருதியில் எழுதியிருக்கிறதல்லவா?''

மறுபடியும் தீர்த்திம் சாப்பிட எண்ணினதில் இதற்குப் பதில் சொல்ல மறந்தார்.

''எனக்கு ஒரு யோஜனை தோன்றுகிறது.''

''என்ன யோஜனை?''

"இந்த வேலை எனக்குக் கடினமாயிருக்கிறது. ஆகையால் இரண்டொரு மாதம் ஊருக்குப் போய் இந்த விசாரங்களை மனத்திலிருந்து நீக்கிவிட்டு இருக்கவேண்டும் என்று எண்ணுகிறேன்."

"என்னைப்பற்றிய விசாரமா? உத்தியோகத்தைப் பற்றிய விசாரமா?"

"எப்படிப்பட்ட விசாரம் என்று வேண்டுமென்றாலும் வைத்துக் கொள்."

"சொல்லுவது தெரியவில்லையே."

"உத்தியோகத்தைப்பற்றிய விசாரம் வேலை கஷ்டமாக விருக்கிறதென்பது. உன்னைப் பற்றிய விசாரம் உன்னை அடிக்கடி பிரிந்திருக்க வேண்டியது என்பதே. சரி. இனி விளையாட்டு வேண்டாம். உனக்கு என்னுடன் வர இஷ்டமா? அல்லது பிறந்——."

"அதென்ன அப்படிக் கேட்கிறீர்கள். என்னைக் கஷ்டப்படுத்துவது தருமமானால் பிறந்தகத்துக்குப் போகச் சொல்லுங்கள்."

"இல்லை கேட்டேன். ஒருசமயம் அபிப்பிராயமிருக்குமோ என்று"

மறுநாளை மூவரும் தமது ஊருக்குப் போகிறதென்று தீர்மானித்தார்கள். கோபாலன் தன் மாமனிடம் வேலை கற்க ஆரம்பித்து இரண்டு மூன்று வருஷமிருக்கும். அநேக சமயங்களில் சாதுரியமாகவும் அற்புதமாகவும் வேலை செய்ததாக சுந்தரமய்யரே ஒப்புக்கொண்டிருக்கிறார். அவன் தன் மாமனுக்கு உதவும் நேரம் போக மற்ற வேளைகளில் ஊரில் சுற்றித்திரிந்து ஊர் விஷயங்களை யறிந்து கொண்டிருப்பான். சில சமயங்களில் யாதொரு பிரதி பிரயோஜனமின்றி சில குற்றங்களையும் திருட்டுக்களையும் கண்டுபிடித்திருக்கிறான். அன்றியவன் தன் மாமனை பற்பல சந்தர்ப்பங்களில் யோஜனை கேட்டும் தன் வேலையில் ஊக்கமுள்ளவனாக இருந்தான்.

கோபாலன் தாய் அவனைச் சிறுவயதிலேயே விட்டுப் பிரிந்து விண்ணுலகேகினள். அவன் தந்தையும் சீக்கிரம் தாயில்லாப் பிள்ளை யென்னும் பெயரை மாற்றி பெற்றோரில்லாப் பிள்ளை யென்னும் நாமம் கொடுத்து விண்ணுலகடைந்தார். பிதிரார்ச்சிதத்திய சொத்து மிகவும் சொற்பம். அதைக்கொண்டு பையன் காலக்ஷேபம் செய்ய முடியாது. அவன் மாமனாகிய சுந்தரமய்யர் அவனுடைய சொத்தை வைத்துக்கொண்டு அவனைப் படிப்பித்து விருத்திக்குக் கொண்டுவர பிரயத்தனப்பட்டார். கடைசியில் பையனும் தனது மாமன் தொழிலை

விரும்பினதால் அதிலேயே யவனைத் தேர்ச்சி பெறச்செய்ய வேண்டிய முயற்சிகளைச் செய்து வந்தார்.

இப்பொழுது அதாவது சுந்தரமய்யரும் அவர் மனைவியும் தங்கள் சொந்த ஊருக்குப் போகவேண்டும் என்று யோசித்துக் கொண்டிருந்த காலத்தில் அவன் வெளியே போயிருந்தான். தனது மாமனோடு கூட வேலை செய்ய வேண்டிய நேரம் போக மற்றைய நேரங்களில் தனிமையாய் வெளியே சென்று அங்கு மிங்கும் பார்த்துக் கொண்டிருப்பான் இவ்விதமாய் உற்றுப் பார்க்கும் சக்தியையும் அனுமான சக்தியையும் மிகவும் விருத்தி செய்து வந்தான்.

அவன் வீட்டுக்கு திரும்பிவந்ததும் இவர்கள் செய்த ஏற்பாடு இவனிடம் சொல்லப்பட்டது. உண்மையில் இவர்கள் செய்யும் ஏற்பாட்டைப்பற்றி தான் கொள்ளும் அபிப்பிராயத்தைச் சொல்ல இவனுக்கு அதிகாரம் இல்லை. எங்கு ஒரு சமயம் தனது அபிப்பிராயம் அவர்கள் எண்ணத்துக்கு விரோதமாய் ஏற்படுமோ என்று மிகவும் சாதுரியமாய் பதில் சொல்லுவான். ஆகவே தன்னிடத்தில் இவ்விஷயம் சொல்லப் பட்டவுடன் "எங்கிருந்தால் எனக்கென்ன. தங்கள் பக்கத்தில் இருக்க வேண்டியது என் கடமை" என்றான்.

நல்லான்கோட்டை யென்ற ஒரு சிறு கிராமமே சுந்தரமய்யர் பிறந்து வளர்ந்த ஊர். அது வெள்ளிக்குடியைச் சூழ்ந்து நிற்கும் கிராமங்களில் ஒன்று. அவர் வீடு அவ்வூர் அக்கிரகாரத்தின் ஓரத்தில் இருக்கிறது. அது அதிக பெரியதும் சிறியதுமில்லாத நடுத்தரமான வீடு இரண்டொரு நாட்களுக்குப் பிறகு சுந்தரமய்யரும் அவர் மனைவியும் கோபாலனும் அவ்வூர்க்கு வந்தார்கள். அவர்கள் அவ்வூர்க்கு வந்த காரணம் வாசிப்பவர் யாவருக்கும் தெரியலாம். சுந்தரமய்யர் தமது துப்பறியும் வேலையின் கடுமையால் மிகவும் சிரமம் அடைந்து மறுபடியும் சிறிது காலம் தம்மை யொருவரும் தொந்தரவு செய்யாமலிருக்க வேண்டித் தமது கிராமத்துக்குப் போய் அங்கு காலம் கழிக்க எண்ணி வந்தார்.

சும்மா உட்கார்ந்திருக்க வந்தார்கள் என்றாலும் இருவரும் காலை மாலையில் தனிமையாகவேனும் சேர்ந்தேனும் ஊர் முழுவதும் சுற்று வார்கள். சுந்தரமய்யர் தமது எண்ணங்களை யெல்லாம் நாட்டுவளப்பத்திலும் இயற்கையழகிலும் செலுத்திக் கொண்டிருந்தார். அவர்க்குத்

துப்பறியும் செயல்களைப்பற்றிய எண்ணங்களெல்லாம் பறந்து போயின. அவற்றைப்பற்றி அவர் நினைப்பதேயில்லை.

தமது அருமையான நண்பர்களுடன் சீட்டாடுவதும் பேசுவதும் தமது மனைவியினிடம் கொஞ்சி விளையாடுவதும் தமது மருமானிடம் சாமானிய விஷயங்களைப்பற்றி பேசுவதுந்தான் இவர் வேலை. முழுச் சோம்பேறிகளில் இவர் முதன்மையானவர் என்னலாம்.

கோபாலன் நிலைமையோ வேறு. அவனுக்கு ஓய்வு என்பதே கிடையாது. எப்பொழுதும் அவன் எதையேனும் வாசித்துக்கொண்டாவது, பார்த்துக்கொண்டாவது, சிந்தித்துக்கொண்டாவது இருப்பான். அவன் சிறிது நேரமாவது சோம்பலாய் உட்கார்ந்துகொண்டிருக்க விரும்ப மாட்டான். மாலை நேரங்களில் அவன் அடிக்கடி தனிமையாய்ச் சென்று தன் கண்ணெதிரில் தோன்றுவன வெல்லாவற்றையும் ஆய்ந்தறிந்து கொண்டே செல்வான். ஏதேனும் ஒரு திருட்டு, ஒரு கொலை, ஏதேனும் ஒரு அற்புதமான விஷயம் தனக்கு அகப்படாதா என்று எண்ணி வருந்துவான். அப்படி யொருநாள் அவன் போய்க்கொண்டிருக்கும்போதுதான் மாடியில் நின்றுகொண்டிருந்த ஞானம்பாளைப் பார்த்தது தன்னூரை விட்டுப் பக்கத்தூர்களுக்குப் போக எண்ணி வெள்ளிக் குடிக்குள் நுழைந்து போகும்போது அவன் தற்செயலாக ஞானம்பாளைப் பார்க்க நேரிட்டது. அவள் யார், அவளைப்பற்றி என்ன விஷயங்கள் அறியலாம் என்று எண்ணிக்கொண்டே தன்பாட்டில் போய்க்கொண்டிருந்தான்.

## IV. "அவர் உன் மனத்திற்குப் பிடித்தவரா?"

மீனாக்ஷி பெரியவளான பெண் என்று முன்னமே சொன்னோம். அவள் கணவன் கூடிய சீக்கிரத்தில் வந்து அவளை அழைத்துச் செல்வதாக ஏற்பாடாயிருந்தது. அவள் பெரியவளானது முதல் வேறு வீட்டுக்குப் போவதில்லை. அவ்வித கண்டிப்பான உத்திரவு அவள் தாயாரிடமிருந்து கிடைத்திருந்தது. ஆயினும் மீனாக்ஷியும் ஞானம்பாளும் உயிர்த்தோழிகளானதாலும், ஞானம்பாள் வீட்டில் அவள் தகப்பனாரைத் தவிர வேறு ஆண்பிள்ளைகள் இல்லாமையாலும், அவ்வீட்டு சங்கரன் என்னும் பையன் சென்னையில் வாசிக்கச் சென்றிருந்தமையாலும், ஞானம்பாள் வீட்டுக்கு மாத்திரம் போய் வாசித்தும், விளையாடியும், பேசியும், பொழுது போக்கக் உத்திரவு பெற்றிருந்தாள்.

ஞானாம்பாளும் அடிக்கடி மீனாக்ஷி வீட்டுக்குப் போய்வருவதுண்டு.

சங்கரன் பணக்காரன் வீட்டுப்பிள்ளையாதலால் அதிக ஆடம்பரங்களுடன் சென்னையில் வசித்துக்கொண்டிருந்தான். அவன் பெரிய அறையொன்று குடிக் கூலிக்குக் கொண்டு தனக்கிஷ்டமான படங்களை வாங்கி சுவரை அலங்கரித்தும் இஷ்டமான புஸ்தகங்களை வாங்கி அலமாரியை நிரப்பியும் மிகவும் சந்தோஷத்தைத் தரத்தக்க வஸ்துக்களை வேண்டிய மட்டும் வாங்கியும் காலங்கழித்து வந்தான்.

ஒருநாள் அவன் தன் அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தபோது அவன் நண்பன் இராமகிருஷ்ணன் என்பவன் வந்து அவனுடன் பேசிக்கொண்டிருந்தான். அறை நீளமான அறை. அதன் நடுவில் ஒரு மேஜையும் அதன் பக்கத்தில் இரண்டு நாற்காலிகளும் ஒரு 'பெஞ்சும்' போடப்பட்டிருந்தன. சிறிது நேரம் பள்ளிக்கூட விஷயங்களைப் பற்றியும் ஊர் விஷயங்களைப் பற்றியும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

மேஜையின்மேல் இரண்டொரு புஸ்தகங்களும் அநேக படங்களும் இருந்தன.

இராம: "ஏது படம்? வாங்கினையா? இத்தனை படம்!"

சங்க: "இல்லை. இருந்த படங்கள்தான்: மறுபடியும் சட்டம் போட வேண்டும்."

இராம: "நல்ல படங்கள். இவையெல்லாம் எப்பொழுது வாங்கினாய்?"

சங்க: "வாங்கி வெகுகால மாகிறது."

இராம: "போடகிராபும் இருக்கிறதே. இது யாருடைய படம்?"

அது சங்கரனுடைய சகோதரி ஞானாம்பாளுடையது. சில மாதங்களுக்குமுன் சங்கரனுடைய வேண்டுகோளால் எடுக்கப்பட்ட புகைப்படம். சங்கரன் அதைத் தன் அறையில் நல்ல சட்டமொன்று போட்டுத் தொங்கவிட வேண்டுமென்று எண்ணி எடுத்துவைத்திருந்தான். இராமகிருஷ்ணன் அதை உற்றுப்பார்ப்பதையும் அதை மற்ற படங்களைப் போல் பாராமல் அதிக கவனம் வைத்துப் பார்ப்பதையும் கண்டான்.

சங்க: "என் தங்கையின் படம்."

இராம: "உன் தங்கையின் படமா! உனக்குத் தங்கை யுண்டென்று கூட எனக்குத் தெரியாதே?"

சங்க: "உன்னிடம் சொல்ல மறந்திருப்பேன்."

இராம: "கலியாணம் ஆயிற்று? என்ன வயதிருக்கும்?"

சங்க: அவன் முகத்தைப் பார்த்துக்கொண்டே, 'இல்லை; 12 வயது இருக்கும்.'' என்றான்.

இராம: "அவள் உன்னைப்போலவே அழகாயிருக்கிறாள்."

அவன் இன்னும் படத்தையே பார்த்துக்கொண்டிருந்தான்.

சங்க: "நான் அழகா? என் தங்கையைக் கலியாணம் செய்துகொள்ள உனக்கு விருப்பமா?" (சிரித்துக்கொண்டு சொன்னான்.) இதற்குப் பதில் ஒன்றுமில்லை. சம்பாஷணை வேறு விஷயங்களில் சென்றது.

சில நாட்கள் சென்றதும் இராமகிருஷ்ணன் சங்கரன் சகோதரியைக் கலியாணம் செய்துகொள்ள சம்மதித்தான். பெண் வீட்டாருடைய சம்மதியையும் தன்னுடைய பெற்றோர்களுடைய சம்மதியையும் பெற்றான். ஆயினும் ஒரு முறை பெண்ணை நேரில் பார்க்கவேண்டியது இக்காலத்திய தருமமானதால் சங்கரனும் இராமகிருஷ்ணனும் ஓர் விடுமுறை நாளில் புறப்பட்டு வெள்ளிக்குடிக்கு வந்தார்கள். மாப்பிள்ளையாகப்போகிறவனுக்குச் செய்யவேண்டிய உபசாரமனைத்தும் செய்யப்பட்டன. இராமகிருஷ்ணன் சங்கரன் வீட்டாருடைய உபசாரங்களைக் கண்டு திருப்தியடைந்தாலும் பெண்ணைப் பார்த்து ஒன்றும் சொல்லவில்லை. பெண்ணும் நாணிக்கோணி அவன் முன்னிலையில் நில்லாது ஓடிவிட்டாள். அவள் அவர்கள் வீட்டிற்குள் நுழைவதையும் வெளியேபோவதையும் வீட்டில் உட்கார்ந்திருப்பதையும் மறைந்திருந்து பார்த்திருந்தாள். மிக சிரமத்துடன் சங்கரன் அவளைக் கொண்டுவந்து இராமகிருஷ்ணன் முன்னிலையில் நிறுத்தினான். அவள் அப்பொழுது தான் வேறு புருஷனிடத்திலும் பெரியோர்களிடத்தும் பெண்பால் நடந்துகொள்ளும் முறையை அறிந்து அனுஷ்டிப்பவள் போல் தலை குனிந்து கட்டை விரலை நோக்கின பார்வையுடன் அசையாது சித்திரப் பதுமை போல் அழகுடன் நின்றுகொண்டிருந்தாள். அவளை நேரில் பார்த்ததும் திருப்தியடைந்தவனாய் கலியாணம் செய்துகொள்ள தனது சம்மதத்தைக் கொடுத்தான் இராமகிருஷ்ணன்.

கலியாணம் நிச்சயமாய் விட்டது. (பெண் சம்மதத்தை யார் கேட்கிறார்கள். புருஷனுடைய சம்மதம் வேண்டும். பெண் சம்மதம் அவசியமான விஷயமா?)

அன்று மீனாக்ஷியும் ஞானம்பாளும் தனிமையாக மீனாக்ஷியின் வீட்டில் தங்கள் சொந்த இராஜாங்க விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். தங்கள் மனமே ஒரு பெரிய இராஜ்யமல்லவா? அதை யடக்கி

யாருவது ஒரு பெரிய கடமையல்லவா? தங்கள் மனத்தையும் தங்கள் மனத்தால் கட்டுப்பட்டவர்களேயும் தங்கள் மனத்தைக் கொள்ளே கொண்டவர்களேயும் பற்றிப் பேசலானர்கள்.

"ஆகவே இன்று அவரைப் பார்த்தாய்?"

"வந்தது முதல் பார்த்துக்கொண்டுதானிருக்கிறேன்."

"இருவரையில் ஒளிந்து பார்த்தாய். இன்றையதினம் நேரில் பார்த்தாய்"

"முன்னமாவது நன்றாய்ப் பார்த்தேன். இப்பொழுது அவர் முன் தலைகுனிந்து பூமியைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியிருந்தது. ஏதோ சிறிது கடைக்கண்ணுல் பார்க்க முடிந்தது."

"அவர் என்ன வாசிக்கிறார்?"

"பி. ஏ வாசிக்கிறாராம்."

"சொத்து எவ்வளவு இருக்கும்?"

"நிறைய உண்டாம்; அரை லக்ஷத்துக்குக் குறைவில்லையாம்."

"பாதகமில்லை. ரொம்ப புத்திசாலியாயிருக்கிறார் என்று தோன்றுகிறது. உன் மேல் அவருக்குக்குப்பிரியமா?"

"என்னவோ? இருக்கும். என் படத்தை சங்கரன் வைத்துக் கொண்டிருந்தாரும். அதைப்பார்த்துத்தான் பிறகு கலியாணப்பேச்சு நடந்ததாம்."

"அப்பொழுது உன் மேல் பிரியமிருக்கும்?"

ஞானம்பாள் ஒன்றும் பதில் சொல்லவில்லை. இரண்டொரு நிமிஷம் சும்மா இருந்தார்கள்.

"அவர் உன் மனத்திற்குப் பிடித்தவரா?"

"எனக்கு என்னவோ ஒன்றும் தெரியவில்லை."

"ஒன்றும் தெரியவில்லை யென்றால்? அழகுள்ளவர்தானே?"

"அழகுள்ளவரென்றுதான் சொல்லவேண்டும்"

"பின்னென்ன? அவர்மே லுனக்காசையுண்டா?"

"உண்டு என்பதும் இல்லை யென்பதும் எனக்கே தெரியவில்லை."

"என்ன ஒரு மாதிரியாய்ப் பேசுகிறாயே. அவரை நீ வெறுக்கவில்லையே."

"இல்லை. வெறுப்பு உண்டாகவில்லை. ஆசையுண்டா இல்லையா என்று தான் எனக்கே தெரியவில்லை. பிராப்தமிருந்தால் நடக்கிறது. அதிருஷ்டம் போல் நடக்கிறது. என்மேல் அவருக்குப் பிரியம் இருக்கி

றதால் ஆசையைபற்றிக் கவலைப்படவேண்டாம் புருஷனுடைய பிரியம் ஒன்றுதான் ஸ்திரீகளுக்கு வேண்டும். நாம் எத்தனையோ புஸ்தகங்களில் வாசித்திருக்கிறோமே. அதை சம்பாதிக்க நாம் பிரயத்தனப்படவேண்டும். அதிருக்கட்டும். உன் அகமுடையான் இன்றைய தினம் வரப்போகிறானமே.”

“ஆம் கடிதம் வந்தது” சொல்லும்போதே மீனாக்ஷிக்கு மயிர்க் கூச்சலிட்டது. முகம் மாறுபட்டது. “இன்று சாயந்திரம் வருவாராம்.”

“இனி உனக்கென்ன குறைவு. உன் அகமுடையான் வந்துவிடுவார். அப்புறம் என்னை கவனிப்பாயா?”

ஆம். அவளுக்கு என்ன குறைவு. நமக்குத் தெரிந்தவரையில் ஒன்றுமில்லைதான். அவள் மனத்தைச் சோதித்துப் பார்க்கவில்லை. பார்த்தாலல்லவோ தெரியும். அதுவும் ஸ்திரீயின் மனமன்றோ. கலியாணம் செய்தது முதற்கொண்டு ஒரு ஸ்திரீயுடன் பழகும் ஓர் புருஷன் வெகுகாலமாயும் அவள் மனத்தை ஆராய்ந்தறிய முடிவதில்லை. ஒருகால் மீனாக்ஷி தன் புருஷன் தன்னிடம் அன்புடனிருப்பாரோ இல்லையோ என்றும் ஐயங்கொண்டு ஏக்கம் பிடித்திருக்கலாம், அல்லது தன்னிடம் அன்புடன் இருப்பார் என்று மனக் கோட்டைக் கட்டிக்கொண்டிருக்கலாம், அல்லது தன் புருஷன் வரவை எதிர்பார்த்தவளாய் அடிக்கடி வாயிலில் வந்து பார்க்க எண்ணியிருக்கலாம், தன் புருஷனைக் கண்டவுடன் என்ன செய்வது என்று யோஜனையிலாழ்ந் திருக்கலாம். அல்லது இன்ன செய்வது என்று தீர்மானித்தவளாய் தன் புருஷனிடம் பேசப் போகிறோம் என்ற எண்ணம் மேலிட்டவளாய் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கலாம்.

## V. தூரவெளிச்சம். ஒட்டுக்கேட்டது.

சுந்தரமய்யர் விடுமுறை யெடுத்துக் கொண்டு கிராமவாசம் செய்ய ஆரம்பித்து சுமார் மூன்று வாரமாயின. அவர் தமது ஒழிவு நாளை மிகவும் சந்தோஷமாகக் கழித்து வந்தார். அவருடைய மருமான் கோபாலனோவெனில் மிகவும் அதிருப்தியோடிருந்தான். இந்திய பட்டணங்களிலேயே இனிமையான மாறுபாடுகளில்லை. மனத்திற்குச் சோம்பலையும் அருவெறுப்பையும் கொடுக்கும்படியாக எல்லாக் காரியங்களும்

ஒரே மாதிரியாக நடந்துகொண்டேயிருக்கும். கிராமத்தில் கேட்க வேண்டுமா? உழவன் விடியற்காலையில் எழுந்து தனது கலப்பையை தோளில் சார்த்தி மாட்டை யோட்டிக்கொண்டு எதையும் கவனியாமல் வயலுக்குச் செல்லுகிறான். சிறு பையன் காலையில் பழைய துண்டு ஊரிலுள்ள மாடுகளை யோட்டிப்போய்ப் பக்கத்திலுள்ள தோப்பில் மறித்துப் போட்டு அருகிலுள்ள மரத்தடியில் தன்னோடு வயதில் ஒத்த பையன்களுடன் வழக்கம் போல் கோலியோ கட்டாரோ ஏதோ ஒரு விளையாட்டு விளையாடுகிறான்.

வைதீகப் பிராமணர் விடியற்காலையில் எழுந்து செப்பு ஸ்தாலி மடி சஞ்சி முதலியவைகளை எடுத்துக்கொண்டு ஆற்றுக்குச் சென்று ஸ்நானம் செய்து ஸந்தியாவந்தனம் ஜபம் முதலியவை அனுஷ்டித்துவிட்டு ஔபாஸனம், அக்னிஹோத்திரம் பூஜை வைசுவதேவம் முதலியவைகளைச் செய்து விட்டு போஜனம் செய்து பிறகு சத்விஷயமாகக் காலங் கழிக்கிறார். வைதீகமில்லாதவர் காலையில் திண்ணை திண்ணையாய் உட்கார்ந்து வம்பளந்துவிட்டோ அல்லது காலையில் எழுந்து வயல் தோட்டம் முதலியவைகளைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்தோ ஸ்நானம் செய்து சாப்பாட்டை முடித்து விட்டு சீட்டாட உட்கார்ந்துவிடுகிறார். இன்னம் மற்ற சாதியாரும் தொழிலாளரும் இவ்விதமே முதனாள் செய்தபடியே ஒவ்வொருநாளும் செய்கிறார்கள். இவர்களுக்கு ஒருநாள் செய்ததையே மறுநாள் செய்கிறோம் என்ற மனவருத்தம் உண்டாவதில்லை. அவர்கள் பழக்கப்பட்டு விட்டார்கள். பட்டணத்தில் வசித்தவர்களுக்கு இது உருசியற்ற வாழ்க்கை யென்று படுமன்றோ! சந்தோஷத்தைக் கொடுக்கத்தக்க மாறுபாடுகள் ஒன்றுமில்லையே. ஒரே காரியத்தை மறுபடியும் மறுபடியும் அதே மாதிரியாகச் செய்வதென்றால் மனம் புளித்துப்போகாதா? தினந்தோறும் வற்றல் குழம்பும் கீரையுமே உபயோகப் படுத்து என்றால் எவ்வளவு கடினமாயிருக்கும்?

கோபாலன் தனது கிராம வாசத்தைத் திருப்தியோடு நினைக்கவில்லை. தனது பழைய இருப்பிடமாகிய சென்னைக்கு எப்பொழுது போக நேரிடுமோ என்று எண்ணியிருந்தான்.

ஆனால் அவன் அவ்வூருக்கு வேறு காரியங்களைச் செய்ய வந்திருந்தான். அக்காரியத்தைச் செய்து முடிக்க அவனறியாமல் ஒரு சக்தி அவனைக் கொண்டுவந்து விட்டிருந்தது. அவன் உலகமாகிய காட்டில்

ஒரு பாதையின் வழியாகப் போய்க்கொண்டிருந்தான். மேலிருந்து வரும் ஒரு வெளிச்சத்தால் தான் போகும் வழியை ஒருவாறு அறிந்து கொண்டு போய்க்கொண்டிருந்தான். அவனாவது அல்லது வேறு யாராவது அவ்வழி எங்கு முடியுமென்று அறியார். அவன் போய்க் கொண்டேயிருந்தான்.

அதே காலத்தில் வேறொருவர் அவ்வாரணியத்தில் வேறொரு பாதையில் போய்க்கொண்டிருந்தார். அவரும் மேலிருந்து வரும் ஓர் வெளிச்சத்தால் தான் செல்லும் வழியின்னதென அறிந்துகொண்டு நடந்துகொண்டிருந்தார். அவ்வாரணியத்தில் இவ்விரண்டு பாதைகளும் ஏனைய பாதைகள் போலவே ஒன்றற்கொன்று சந்திக்கின்றன.

அவ்விரண்டு பிரயாணிகளும் மேற்கூறிய இரண்டு பாதைகளும் சந்திக்குமிடத்தில் ஒரே நேரத்தில் வந்து சேராமல் அவ்விருவரில் எவரேனும் தாமதித்து வந்தால் ஒருவரையொருவர் அறியாமலே அவரவர் தம் பாட்டில் போய்விடுவார். அப்படியின்றி இவ்விருவரும் நமது மனத்திற் கெட்டாத ஒரு சக்தியால்—நாம் அளவிடக்கூடாத ஓர் நியாயத்தினால்—நாம் இன்னதென்று வரையறுத்துச் சொல்லக்கூடாத ஒன்றால்—ஓரிடத்தில் சந்திக்கவேண்டுமென்று ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்தது. ஆகவே சோபாலனும் தன்னை யறியாமலே அவ்விடத்துக்குப் போய்க் கொண்டிருந்தான். அப்படிப் போகும்போது அவ்வூர்க்கும் வரவேண்டும் போலும் அவ்விதம் வரவேண்டுமென்று விதியால் ஏற்பட்டிருந்தது. அது கடவுளின் செயலென்றாயினும், விதியின் செயலென்றாயினும், கால புருஷனுடைய செயலென்றாயினும், கர்மத்தினுடைய செயலென்றாயினும், மாயையின் செயலென்றாயினும் கூறுக.

ஒரு நாள் மிகவும் வெறுப்புடன் அவன் மாலையில் உலாவப்போனான். முதனாள் பார்த்த காட்சிகளே அவன் கண்ணில் பட்டன. அதனால் வெகுதூரம் சென்றால் வேறு ஏதேனும் கண்ணில் படும் என்று எண்ணி வெகுதூரம் நடந்தான். மிகவும் இருண்டு விட்டது. பின்பு வீட்டிற்குச் செல்லலாம் என்று திரும்பி நடந்தான். அவன் வந்தவழி வேறு, திரும்பிச் சென்றவழி வேறு. வழியில் ஒரு சிறிய தென்னந்தோப்பு இருந்தது. நாலைந்து வருஷங்களுக்கு முன்பு வைக்கப்பட்டிருந்த தென்னம்பிள்ளைகள் அதிக உயரமாய் இராமல் குட்டையாய் அடர்ந்து இருந்தன. அவ்விடத்தில் ஒருவரும் நடமாடவில்லை. எங்கும் நிச்சப்தமாயிருந்தது. தூரத்தில் நாய் அன்னியரைக்கண்டு குலைக்கும்

சத்தம் கூடக் கேட்கவில்லை. பக்ஷிகளெல்லாம் ஏற்கனவே தமது கூடு களில் உறங்கிக் கொண்டிருந்தன.

சிறிது தூரம் நடக்கவும் ஏதோ சத்தம் கேட்டதுபோல் அவனுக்குத் தோன்றிற்று. உண்மையில் யாரோ தோட்டத்தின் மறுபக்கத்தில் பேசிக்கொண்டிருப்பதாக நிச்சயிக்க இடமிருந்தது. அவன் நின்றான். வேலியண்டை போனான். காது கொடுத்துக் கேட்டான். அவ்விதம் பிறர் பேசும் இரகசியமான விஷயங்களை யவன் ஒட்டுக் கேட்பது தவறு, தவறல்லவா, என்று நாம் நியாயாதிபதியாயிருந்து இப்பொழுது தீர்மானிக்கவேண்டாம். அதற்கு இது சமயமல்ல.

"நாலாம நாள் கலியாணம்." மெதுவாய் இவ்வார்த்தைகள் கேட் கப்பட்டன. வெகு நேரம் வரையில் சத்தமில்லை.

"ஆம், கோவிலுக்குப்போவாள்." மறுபடியும் சத்தமில்லை.

"அப்படித்தான் செய்ய வேண்டும். வேறுவழியில்லை." மறுபடியும் ஒரு நிமிஷம் ஒரு பேச்சுமில்லை.

"ஆகவே கலியாணம் நின்று போகும்"

மறுபடியும் நிச்சப்தம் உண்டாயிற்று. அரை நாழிகை வரையில் காத்துப்பார்த்தான். ஒன்றையும் காணோம். மறுபடியும் சத்தம் உண்டாக வில்லை. பேசியவர்கள் போய்விட்டார்கள் போலும்.

அவனுடைய அதிருப்தி கொண்ட மனத்திற்கு இப்பொழுது சிறிது ஆகாரம் கிடைத்தது. சும்மா இருப்பதைக் காட்டிலும் ஏதே னும் ஒரு விஷயம் இருந்தால் அதைப்பற்றிச் சிந்திக்கலாமன்றோ?

வீட்டிற்குப் போனான். அவன் மாமன் காத்துக்கொண்டிருந்தார்.

"ஏன் இந்நேரம். எங்கே போயிருந்தாய்?"

"கால் கொண்டுபோகும் வரையில் போகலாம் என்று எண்ணிப் போனேன். அதனால் தான் இந்நேரமாயிற்று."

"சரி, ஸந்தியாவந்தனம் செய். பிறபாடு பேசிக்கொள்வோம்."

இருவரும் சாப்பிட உட்கார்ந்தார்கள்.

கோபாலன் திருப்தியாய் சாப்பிடவில்லை. அவன் யோஜனை யிலாழ்ந்து கொண்டிருந்தான்.

"இவ்வூரில் ஏதாவது கலியாணம் உண்டோ?"

"இல்லையே."

"யாரோ சொல்லிக் கொண்டார்கள். பக்கத்தூர்களில் உண்டோ?"

"வெள்ளிக்குடியில் நாலாம் நாள் கலியாணம், அதென்ன கலியாண ஞாபகம்? உனக்காகவில்லையல்லவா? அதனால் தான் கேட்கிறாயோ?"

"இல்லை, யாரோ பேசிக்கொண்டார்கள்; அதனால் தான் கேட்டேன்."

"உனக்கு இஷ்டமிருந்தால் நீ அங்கே போகலாம், சாம்பசிவய்யரை எனக்கு நன்றாய்த்தெரியும், என்னையும் அழைத்திருக்கிறார் நீ போகிறாயா?"

"போனால் நல்லது தான். இங்கே சும்மா உட்கார்ந்திருக்கிறதை விட கலியாண வேடிக்கைகள் பார்ப்பது நன்றாயிருக்கும்."

"ஆனால் துப்பறியும் வேலை ஒன்றும் அங்கே கிடைக்காது."

"உலகத்தில் கொலை, கொள்ளை, திருட்டு முதலியவை நடக்காமலிருக்கவேண்டுமென்றுதான் நம்முடைய கோரிக்கை."

"அப்படியல்ல, நம்முடைய கோரிக்கையால் ஒன்றும் நடவாது. நடந்தவைகளைக் கண்டுபிடிப்பதுதான் நம்முடைய வேலை. கொலை நடக்கவேண்டாமென்று விரும்பினால் நடவாமலிருக்குமா?"

"கொலை நடக்குமென்று முன்னமே நமக்குத்தெரிந்தால் அதைத் தடுக்கலாமன்றோ? கடையிலிருந்து ஓர் பழத்தைத்திருடும் ஓர்பையனை திருடும்வரையில் பார்த்திருந்து பிறகு அவனைத்தண்டிக்கும் ஓர் போலீஸ்காரனைக் காட்டிலும் திருடுமுன் அவனைத்தடுக்கும் போலீஸ்காரன் மிகவும் உத்தமமானவனல்லவா?"

"ஆம், ஆம்: ஆனால் முன்னால் அறிவது தான் மிகவும் சிரமம்."

கோபாலன் பொதுவாய்த் தன்னுடைய அபிப்பிராயங்களைத் தன் மாமனிடம் சொல்லுவதில்லை. தன்னிலும் பலமடங்கு அதிக புத்தியும் சாமர்த்தியமும், அனுபோகமும் வாய்ந்த அவர் முன்னிலையில் தன்னுடைய பிரதாபத்தைக் காட்டிக்கொள்ள அவனுக்கிஷ்டமில்லை. ஏதேனும் சந்தேகமிருந்தாலன்றியவரை யொன்றும் கேட்கமாட்டான். தன்மாமன் செய்யும் காரியங்களை யொன்றும் பேசாமல் கவனித்து வருவான். ஆனால் அவர் அவனிடம் எல்லாவிஷயங்களையும் கூறுவார்.

தானாகவே, சுந்தரமய்யர் அறியாமல், பிரவேசிக்கும் துப்பறியும் தொழிலைப்பற்றிக் கடைசியில் தான் சொல்லுவது வழக்கம். ஒரு சமயம் தன்னால் இனி முடியாதென்று தோன்றினால் அவரிடம் எல்லாவற்றையும் கூறி யோஜனை கேட்பான்.

இன்றேனெனில், ஏதோ தூரத்தில் சிறியவெளிச்சம் தோன்றியது போல் தோன்றிற்று. அது தடுமாற்றங்கொண்ட மனத்தில் உண்டான ஒரு மயக்கமோ என்னவோ தெரியாது. ஒருகால் உண்மையாயிருந்தாலும் இருக்கலாம். ஒருகால் பேசியவர்கள் நல்லமனமுடையவர்களா

யிருக்கலாம். அவர்கள் செய்யும் யோசனைகள் குற்றமற்றவைகளாயிருக்கலாம். அப்பேச்சைத்தவிர வேறுயாதொரு ஆதாரமுமில்லாமல் இவ்விஷயத்தைத் தன்மாமனிடம் எப்படிக் கூறுவது என்று சும்மா இருந்தான். சாப்பாடானதும் வெளியில் வந்து உட்கார்ந்து யோஜிக்கலானான்.

"சொன்ன சொற்களைக்கொண்டென்ன நிச்சயிக்கிறது? நாலாம்நாள் கலியாணம் நடக்கிறது. யாரோ ஒருவர் கோவிலுக்குப்போவார். அவர் பெண்பால் என்று சொன்ன வார்த்தையால் தெரிகிறது. அவள் யாரோ? அனேகமாய்க் கிழவிகள் தான் கோவிலுக்குப்போவார்கள். எப்பொழுது போவார்? ஏன் போவார்? என்று எப்படித்தெரியும். அதைவிசாரிக்க வேண்டும். 'அப்படித்தான் செய்யவேண்டும். வேறு வழியில்லை.' அதாவது இவர்கள் செய்ய உத்தேசித்திருக்கிற வழியைத்தவிர வேறு வழியில்லை. அச்செயல் கோவிலுக்குப்போகும் ஸ்திரீயுடன் சம்மந்தப்பட்டதா? படாததா? அதுவும் தெரியாது. இச்செய்கையாலோ வேறு எக்காரணத்தாலோ கலியாணம் நின்றுபோய்விடும்.

"ஆகவே இச்செய்கையால் கலியாணம் நின்றுபோய்விடும் என்பது வெட்டவெளியாய்த் தெரிகிறது. கலியாணத்தைத் தடைசெய்ய யார் உத்தேசித்திருக்கிறார்? அப்படிக் கலியாணத்தைத் தடைசெய்வதால் என்ன பயன் அவர் அடையப்போகிறார்?"

இவ்விதமாகப் பலவாறு யோஜித்து ஒன்றும் தெரியவராமல் "சரி முதலாவது கோவிலுக்குச் செல்லும் பெண்பால் யார்? கலியாணத்துக்கும் அவளுக்கும் என்ன சம்பந்தம்? கலியாணம் தடைபடுவதால் யார் என்ன பயன் அடைகிறார்? கலியாணம் நிறைவேறுவதில் இஷ்டமில்லாதவர்கள் யார்? என்ற கேள்விகளுக்கு பதில் பெறுவோம். அதன் பிறகே மற்ற காரியங்களில் பிரவேசிக்கவேண்டும்." என்று தீர்மானித்தான். பிறகு உள்ளே சென்று வழக்கம் போல் படுத்துறங்கினான்.

## VI இன்னம் சில விஷயங்கள்.

மறுநாட் காலையில் கோபாலன் அதி சீக்கிரமே எழுந்து ஸ்நான முதலியவைகளைச் செய்து அநுஷ்டானங்களை முடித்தான்.

அம்மாமி, வெளியில் போகவேண்டும். கொஞ்சம் பழையது சீக்கி

ரம் போடு. நான் வர நாழிகையாகும். எனக்காகக் காக்க வேண்டாம்.''

சுந்தரமய்யர் அப்பொழுதுதான் படுக்கையை விட்டெழுந்து உட்கார்ந்து கொண்டிருந்தார்.

"ஏதாவது விசேஷம் உண்டோ? நாட்டுப்புறத்தில் ஒன்றுமிராது என்றல்லவோ இருந்தேன். ஏதாவது வாசனையடிக்கிறதோ?'' என்றார்.

"நிச்சயமாய் ஒன்றும் சொல்லமுடியாது. கானலோ, ஜலமோ?'

"இதுவரை கானலைக்கண்டு ஏமாந்ததில்லையே?''

சுந்தரமய்யர் தன் மருமான் காரியத்தை மெச்சுவதாகப் புன்சிரிப்புக் கொண்டார். கோபாலன் அதைக்கண்டு உள்ள மகிழ்ந்தான்.

"கோபாலா, சாதம் எடுத்தாயிற்று, வா.'' என்றாள் சுந்தரமய்யரின் மனைவி.

கோபாலன் சாப்பிட்டதும் ஒரு சரிகை வியாபாரி போல் வேஷம் போட்டுக் கொண்டு வெள்ளிக்குடிக்குப் போய்விட்டான்.

"நேற்று கலியாணத்தைப் பற்றிக் கேட்டதற்கு இப்பொழுது தான் காரணம் தெரிகிறது.'' என்றார் சுந்தரமய்யர் தம் மனைவியினுடன்.

ஒருநாள் கழிந்தது. யாதொரு பயனும் விளைந்ததாகத் தெரியவில்லை. கலியாணத்தைத் தடை செய்யக் கருதுபவர் யாரென்றும் ஏன் அப்படித் தடை செய்ய வேண்டுமென்றும் தெரியவில்லை. கலியாணத்தில் சம்மந்தப்பட்டவர்களுள் ஞானும்பாளும் அவள் பாட்டியுமே தினந்தோறுங் கோவிலுக்குப் போகிறவர்கள் என்று அறிந்து கொண்டான். கலியாணத்தில் சம்பந்தப்படாமல் (தெரிந்த வரையில் சம்மந்தப்படவில்லை.) இருப்பவர்கள் இரண்டொரு விதவைகளும் ஒரு சுமங்கலியுமே. இவர்கள் தெலுங்கு பேசும் ஸ்மார்த்தர்கள். இவர்கள் மிகவும்யோக்கியர்களாயும் நல்லவர்களாயும் காணப்பட்டார்கள். இவர்களுடையமுன் பின் சரித்திரங்கள் பயனற்றவையாயும் கல்மிஷமில்லாதனவாயும்இருந்தன. காணமற் போன மரண சாஸனத்தைத் தன் மாமன் கண்டு பிடிக்கப் பிரயத்தனப்பட்டது போலப் பிரயத்தினப்பட்டும்ஒன்றும்தெரியவில்லை.

மறுநாட் காலை ஏழுமணியிருக்கும், அவன் ஓர் குடுகுடுப் பாண்டி போல் வேஷம் போட்டுக் கொண்டான். துப்பறிதலில் குடு குடுப் பாண்டியாய் நடித்தல் எல்லாருக்கும் சாமானியமாகப் போய்விட்டது. கோபாலன் குடுகுடாக் குடுகுடாக் என்று அடித்துக்கொண்டு ஒவ்வொரு வீடாய்ப் போய்ப் பிக்ஷை கேட்டான்.

"அம்மா நீங்கள் நினைத்திருக்கிற காரியம் கைகூடும். சீக்கிரம் உங்கள் பையனுடைய உடம்பு சொஸ்தமாகும். பெட்டியிலே——அது தான் அம்மா ——" சிறிது நேரம் கண்ணை மூடித் தியானம் செய்வது போல் நடித்தான். ——"மரப்பெட்டியிலே சின்ன அறையிலே வைத்திருக்கிற பதக்கத்தை அம்மன் கழுத்திலே போடுங்கள். குழந்தை கழுத்து தங்கம்போல சொஸ்தமாகும் அம்மா."

இதுவும் இவைபோன்றவைகளையும் கோபாலன் கேளாமலே யாரிடம் சொல்லவேண்டுமென்று விரும்பினானோ அவர்களைக் கண்டவுடன் ஆவேசம் கொண்டவன் போல் பிரசங்கம் செய்து சொன்னான். அவைகள் அதாவது அவன் சொன்னவை மிகவும் உண்மையான விஷயங்களாயிருந்தன. அவைகள் சரிகை வியாபாரியாய் இருந்த போது அறிந்துகொண்டவைகள்.

அவன் அதாவது அந்தப் பிச்சைக்காரன் மிகவும் கிழவனாகக் காணப்பட்டான். எவனும் அவனை உற்றுப் பார்ப்பதாய் காணப்படவில்லை. அவன் சொல்லும் விஷயங்கள் உண்மையாயிருந்தமையால் அவனிடம் எல்லாரும் வந்து ஜோஸ்யம் கேட்கத் தலைப்பட்டார்கள். ஆயினும் அவன் இன்றைக்குச் சொல்லலாம் இன்றைக்குச் சொல்லக் கூடாதென்று தீர்மானம் செய்திருந்தான்.

இன்னம் சிலர் அவனை வீட்டுக்குள் அழைத்துக்கொண்டு போய் ஆருடம் கேட்டார்கள். ஆருடம் சொல்லாதவர்களுக்கு "இன்றைய எட்டாம் நாள் இந்தப் பரதேசி வரும். எல்லாம் சொல்லும். பயப்பட வேண்டாம். அம்மன் உத்தரவு அது." என்பான்.

பிச்சைககாரனுடைய சாமார்த்தியத்தைப்பற்றிப்புகழாதார் ஒருவருமில்லை. பிராமண, வைசிய, சூத்திரர்கள் அனைவரும் அவனிடங் கூடி அவனைப்பிரச்னம் கேட்டார்கள். எல்லோருக்கும் தகுந்தபடி விடையளித்து அனுப்பினான். இப்பொழுது ஊருக்கு வெளியில் ஓர் பாதையில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு மூட்டையில் அரிசியைக்கொட்டிக்கொண்டிருந்தான். யாரோ இரண்டுபேர் பேசிக்கொண்டுவந்தார்கள். அவர்கள் இருவரும் சூத்திரர்கள். அவர்களில் ஒருவன் குரலெங்கேயோ கேட்டதுபோல் இருந்தது. ஆயினும் யாரென்றாவது எங்கே பார்க்கப் பட்டவர்கள் என்றாவது அறியமுடியவில்லை.

"நாளைக்குக்கலியாணமல்லவா?"

"ஆம், நாளைக்குக்கலியாணம்."

"இன்றைக்குக் காரியம் நடக்கவேண்டும்."

"கோவிலில் சாயந்திரம் வந்திருப்போம். அங்கே அந்தப்பெண்ணும் வந்திருப்பாள்."

"தவறாமல்?"

"தவறமாட்டாள்."

"அந்தப் பிச்சைக்காரனைக்கேட்போம். ஜோஷியத்திலே ரொம்ப கெட்டிக்காரனாம்." மெதுவாய் நடந்து அவனண்டை வந்தார்கள்.

"ஏய், நான் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறேன் சொல்லு. சட்டெனச்சொல். ஒரு ரூபாய் தாரேன்."

"பிச்சைக்காரன் கண்ணைமூடித் . தியானித்தான். பிறகு திறந்து, "அம்மன் வழியைத்திரைபோட்டு மூடிவிட்டது. திறந்து சொன்னால் மையெல்லாம் மறிந்துபோகும். உங்கள் காரியம்கெட்டுப்போகும். இதற்கு முன்னால் எப்பொழுதாச்சியும் அம்மனுக்கு, அதான் காளிக்குப் பூசை போட்டீங்களா?"

"ஆமாம் போட்டிருக்கிறேன். நாலு வருசமிருக்கும்"

"அது தான் சந்தோசம். அவளுக்கு திரையைத்திறந்து விட மாட்டேனென்கிறா. உங்களைக்காப்பாத்த வேணுமென்றுதான், எனக்குக்கூட சமாசாரத்தைச்சொல்லமாட்டேன் எங்கிறா"

அவர்களுக்கு உண்டான சந்தோஷத்துக்கு அளவில்லை. மடியிலிருந்து இரண்டு ரூபாயை எடுத்து,

"மாமா, இந்தா, அம்மனைக்கேளு, நாங்க எடுத்துக்கிட்ட காரியம் சயமாகுமான்னு. அம்மனுக்கு இன்னம் பூசைபோடறம். உனக்கும் ரொம்ப தரோம்.'

இரண்டு ரூபாயையும் வாங்கிக்கொண்டு மறுபடியும் கண்ணை மூடினான். ஒரு நிமிஷம் சென்றதும் திறந்தான். "அப்பேன் எடுத்த காரியம் பெண்ணைப்பற்றி. அவள் கலியாணப்பெண்ணல்ல? ஆமாம் அவள் கலியாணம் நின்றுபோகும். உங்களுக்கு அதினாலே ரொம்ப பிரயோசனம். அதுக்கு மேலே சொல்லவேண்டாம் இங்குது அம்மன். சொன்னால் உங்களுக்குக் கெடுதலாமே."

"பெண்ணுக்கு ஆபத்து வரும் என்று சொல்லுதோ"?

மறுபடியும் கண்ணை மூடினான், பிறகு திறந்தான்.

"ஆம் வரும் என்றுதான் சொல்லுகிறது"

"யாருக்காவது தெரியுமோ இது?"

"ஒருவருக்கும் தெரியாது. அம்மன் திரை போட்டு மூடியிருக்கா." இவற்றைக்கேட்டவுடன் சந்தோஷங்கொண்டு போய்விட்டார்கள். அவர்களில் ஒருவன் நல்ல வளர்த்தி யுள்ளவன். நல்ல பலசாலி. உயரமும் பருமனுமுடையவன் பெரிய உருவமும் கூர்மையான பார்வையுடைய பெரிய கண்களும் அகன்ற மார்பும் பெரிய நீண்ட கைகளும் கனம் ழும் போல் —— அல்லது அமாவாசைபோல் கருத்த நிறமும் உடைய அவனை இருட்டில் —— மாலை யிருட்டும்போதும் பார்த்தால் அலறியடித்துக் கொண்டு குப்புற விழுந்து மூர்ச்சை கொள்வார்கள். மற்றவன் குட்டையாயும் மெலிந்தவனாயும் தேகமெங்கும் எலும்பு தெரிந்தவனாயும் சற்று சிவந்த நிறமுடையவனாயும் காணப்பட்டான். அவன் வலது தோள்மேல் ஒரு பெரிய மச்சம் இருந்தது. அவன் கம்பீரமான பார்வை யுடையவன். முன்சொன்னவனோ அப்படியல்ல, குளிர்ந்த பார்வையுடையவன். அவன் முகத்தில் சாந்தம் குடிகொண்டிருந்தது

அவன் போன திசையை நோக்கிக்கொண்டிருந்து பின்பு எழுந்து அவர்களைத்தொடர்ந்து சென்று அவர்கள் இருப்பிடத்தையறியலானான், ஆயினும் அவர்களை மறுபடியும் கண்டுபிடிக்க மிகவும் கஷ்டப்பட்டான், பகல் இருபதுநாழிகைப்பொழுதுக்குத்தான் தெரியவந்தது. தெருவின் கோடியில ஒரு சிறு குடிசையில் வீரம்மாள் என்ற ஒரு ஸ்திரீ குடியிருந்தாள். அவள் சாம்பசிவய்யர் வீட்டில் வாயில் கூட்டுபவள். அவள் வீட்டில் அவர்களிருவரும் தங்கியிருப்பதாகத் தோன்றிற்று வீரம்மாளும் அவர்களும் ஸகஜமாய்ப்பேசிக்கொண்டிருந்தார்கள் என்று. தெரியவந்தது. அவ்வீட்டுக்குள் அவர்கள் நுழையக்கண்டு அவ்வீட்டு வழியாய் நடந்துவரும்போது

"இன்று பொழுதுசாய பெண்ணைக் கோயிலுக்கு கூட்டியாரேன், நான் இங்கே வந்ததும் உங்கள் காரியத்தை யாரம்பியுங்கள். அவளைத் தனியாகக்கூட்டியாரேன்"

இதற்குமேல் பேச்சுக்கேட்கவில்லை. இரண்டுபேரும் வெளியில் வந்துவிட்டார்கள். பிச்சைக்காரனும் வேறொரு சங்கதியும்தெரியாததனாலும் பசியதிகமாயிருந்ததனாலும் ஊருக்குத்திரும்பிப்போய் ஒருவரும் அறியாமல தன் வீட்டுக்குள் நுழைந்து பழையபடி கோபாலனானான்.

கோபாலன் பட்டணத்திலிருந்து வந்த ஓர் சிறு வாலிபன்போல் தன் உடையை மாற்றிக்கொண்டு, அடையாளம் தெரியாதபடி சட்டை குல்லாய் முதலிய அலங்காரங்களுடன் வெளியில் புறப்பட்டான். தெருவில் நின்றுகொண்டிருந்த சுந்தரமய்யரே அவனைப் பார்த்தபோது அடையா

ளா தெரியவில்லை. இப்பொழுது அவன் கருப்புநிறமாக மாறிவிட்டான். வெண்மையான கல் பிரகாசிக்கும் ஓர் கடுக்கன் அவன் காதில் விளங்கிற்று. வெளியில் புறப்பட்டு விட்டான்.

## VII கலியாணத்திற்கு முதல் நாள்.

மாலை ஐந்து மணியிருக்கும். எல்லோரும் சுறுசுறுப்பாய் இருந்தார்கள். சாம்பசிவய்யர் வாயிலில் நின்றுகொண்டு தன் வேலையாட்களிடம் பேசிக்கொண்டிருந்தார். திண்ணையில் இரண்டு காவற்காரர்கள் ஒரு பெரியசந்தனக்கல்லில் சந்தனம் அறைத்துக்கொண்டிருந்தார்கள். வாயிற்பெருக்கி வீரம்மாள் குப்பை செத்தைகளைக்கூட்டிச் சேர்த்துக்கொண்டிருந்தாள். சிறு பையன்கள் பந்தலில் போடப்பட்டிருந்த பெஞ்சில் உட்கார்ந்து விளையாட்டாகப்பேசிக்கொண்டிருந்தார்கள். சில நெருங்கிய பந்துக்கள் வீட்டிற்குள்ளும் வீட்டிற்கு வெளியிலும் போய்க்கொண்டிருந்தார்கள். சாம்பசிவய்யருடைய தம்பியாரும்கலியாணத்திற்கென்றுவந்த ஓர் பந்துவும் ஊர் யோக க்ஷேமங்களைப்பற்றி விசாரித்துக்கொண்டு திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்.

சற்று உள்ளே சென்று பார்ப்போம். அநேகம் ஸ்திரீகள் கூடத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். சமையல்கட்டில் சமையற்காரர்கள் ஏற்கனவே சமையல்செய்யத் தொடங்கிவிட்டார்கள்.

ஆயினும் அவ்விடத்தில் ஞானம்பாளைக்காணோம். எப்பொழுதும் அவள் தன் தோழியுடன் உட்கார்ந்திருக்கும் ஊஞ்சல் பலகை கீழே வைக்கப்பட்டிருந்தது. உள்ளே தேடுவோம், அங்குமில்லை. மாடியில்? அங்கு சங்கரனும் கலியாணத்திற்கென்று சங்கரன் வேண்டுகோளால் வந்த அவன் நண்பனும் பேசிக்கொண்டிருந்தார்கள். அவ்விடத்திலும் இல்லை. அவள் எப்பொழுதும் போகக்கூடிய அவள் தோழியின் வீட்டுக்குப்போவோம். ஒரு நிச்சப்தமான ஓர் அறையில் அவளும் அவள்தோழி மீனாக்ஷியும் பேசிக்கொண்டிருந்தார்கள். அவள்புதிய புடவைகட்டிக்கொண்டு தலைவாரிபின்னவிட்டு நகைகள் அனைத்தும் அணிந்துகொண்டிருந்தாள். அவன் தன் கலியாணம் சமீபித்ததைப்பற்றி மிகவும்சந்தோஷங் கொண்டிருந்தாள்.

ஆம், சந்தோஷம் இருக்கவேண்டியது நியாயந்தானே. நாமும் அவள் நிலைமையில் இருப்பதாக எண்ணிக்கொள்வோம். யார் கண்டா

ர்கள், சந்தோஷத்தால் கூத்தாடமாட்டோமென்று. அவள் தன் கணவனாகப்போகிறவர் தன்னை விட்டுப்பிரிந்ததுமுதல் மறுபடியும் பார்க்க வேண்டும் என்று எண்ணங் கொண்டிருந்தாள் "இன்று சாயந்திரம்வரும் அவர் என்னைக்காண்பாரானால், அல்லதுநான் அவரைத்தனிமையில் கண்டால்——" 'இதை முடிப்பதற்குள் யாரோ' உள்ளே வந்தார். உடனே சம்பாஷணையை நிறுத்தி "நேரமாயிற்று. சீக்கிரம் அகத்துக்குப்போக வேண்டும். அம்மாதேடுவாள். சாயந்திரம். கோவிலுக்குப்போகலாம் வருகிறாயா?" என்றாள்! "ஒருசமயம்வந்தாலும்வந்தேன். அகத்தில்காரியமிருக்கிறது. அநேகமாய் வரமாட்டேன்."

ஞானம்பாள் புறப்பட்டு வீட்டுக்குப்போனாள். வீட்டிலுள்ள ஸ்திரீகள் அவள் வந்ததும்.

"இத்தன்னாழி எங்கடியம்மா போயிருந்தே? "என்று கேட்டார்கள். சிலர் அவள் போட்டிருந்த நகைகளை ஒழுங்கு படுத்தினார்கள். சிலர் கேலி செய்தார்கள். சிலர் வாழ்த்தினார்கள். ஒருவரும் அன்று நடக்கப்போகும் விஷயத்தை அறிந்தவராகக்காணப்படவில்லை. ஏன் அவர்களுக்குத்தெரியும்? நம்மைக்கேட்டுக்கொண்டா காரியங்கள் நடக்கின்றன?

ஞானம்பாள் சுறுசுறுப்பாய் அலைந்துகொண்டிருந்தாள். சமையல் கட்டுக்குப்போவாள்: சற்று நேரம் பரிசாரகர்கள்கஷ்டத்துடன் சமையல் செய்வதைப்பார்த்துக்கொண்டிருப்பாள். உடனே அதை விட்டுப்புறப்பட்டுஸ்திரீகள் கூடியிருக்கும் இடத்திற்குவருவாள். அங்கே அவர்கள்பேசிக்கொண்டிருப்பதைக் கவனித்துக்கொண்டிருப்பாள். தன்னைப்பற்றிப்பிறர் ஸ்தோத்திரம் செய்வதைக்கண்டு மகிழ்வாள். அவள் சந்தோஷம் என்பது தனக்குத்தான் கிடைத்ததென்று ஸந்தோஷித்துக்கொண்டிருந்தாள்.

சூரியன் நன்றாய் அஸ்தமித்துவிட்டது. கோவிலுக்கு வழக்கம்போல் போகும் ஸ்திரீ புருஷர்கள் ஒரு நாழிகைக்குமுன்னாலேயே போய்விட்டார்கள். கோவில் ஞாபகம் வந்தவுடனே மீனாக்ஷி வீட்டுக்கு ஓடினாள். மீனாக்ஷி என்று கூப்பிட்டாள். "கோவிலுக்கு வருகிறாயா. நேரமாயிற்று."

உடனே யவள் தன் வீட்டுக்குத்திரும்பினாள். வீரம்மாள் வாயிலில் நின்றுகொண்டிருந்தாள். பக்கத்தில் ஒருவருமில்லை. "கோவிலில் அம்மனுக்கு அலங்காரமாமே. நீபோகவில்லையா ஞானம்மா?"

"இருட்டி விட்டது. வீட்டிலே காரியமிருக்கிறது. அம்மா போக வேண்டாமென்கிறாள்."

"ஆம் போகவேண்டும்."

யாயிருக்கக்கண்டு தனது சட்டைப்பையில் வைத்துக்கொண்டான்.

"யாரோ புதுப்புடவை உடுத்திய ஸ்திரீ இதன் வழியாய்ப் போயிருக்கிறாள்."

ஜாக்கிரதையுடன் கீழே இறங்கினான். நிலம் ஈரமாயிருந்தது. அவன் தன் பையிலிருந்த தீப்பெட்டியை எடுத்து ஒரு குச்சி கிழித்தான். அதன் வெளிச்சத்தால் கீழே பார்த்தான். நான்கு காலடிகள் மிகவும் ஆழமாய்ப் பதிந்திருந்தன. காலடிகள் தோட்டத்தின் வடபுறமாய்ப்போயின. யாராவது தன்னைப்பார்த்துவிடுவாரோ என்று எண்ணி வெளிச்சத்தையணைத்து காலடி சென்ற பக்கம் சென்றான். வேறு பக்கம் செல்லவில்லையென்று நிச்சயிக்க இரண்டொரு தடவை வெளிச்சமுண்டு பண்ணிக் கடைசியில் தோட்டத்தின் மறு பக்கத்தில் வந்து சேர்ந்தான். அங்கே வழி நன்றாயிருந்தது. அதன் வழியாய் சுலபமாய் வெளியில் வந்தான்.

"சிறிது தாமதப்பட்டதாலன்றோ இப்படியாயிற்று".

அவனால் ஒன்றும் செய்யமுடியவில்லை என்று கண்டான். ஞானம்பாள் உண்மையில் திருடர்களால் கவரப்பட்டாளோ என்னவோ அதுவே தெரியாது. அதை முதலில் நிச்சயிக்கவேண்டும். பிறகு தான்—அதாவது காணாமற் போனாள் என்று தெரிந்த பிறகு தான் அவளைத்தேட முயலவேண்டும். தோட்டத்தில் கண்ட காலடிகள் திருடர்களுடைய காலடியாயிருந்தால், துணியின் துண்டுகள் ஞானம்பாளுடைய ஆடையின் பாகமாயிருந்தால்—அநேகமாய் அப்படித்தான் இருக்கும் என்று தோன்றிற்று—தோட்டத்தினின்று அவர்கள் வெளிக்கிளம்பின பக்கத்திலிருந்து தேட ஆரம்பிக்கவேண்டும். தேடுவதாயிருந்தால் வெளிச்சமில்லை. கை விளக்கை ஏற்றினால், தான் சந்தேகத்திற்கு இடமாகவேண்டி வரும். நிலவு புறப்பட இன்னம் நான்கு நாழிகை செல்லும். தன்னூருக்குப் போவதென்றால் மிகச்சிரமம் என்று எண்ணி தன் உடைகளைக் கழற்றி ஒரு மூட்டையாகக் கட்டி சாமானிய உடையைத் தரித்து அருகிலிருந்த ஓரோடையில் தான் கொண்டு வந்திருந்த சில சிற்றுண்டியைத் தின்றுவிட்டுச் சாவதானமாய் உட்கார்ந்து கொண்டிருந்தான்

# IX. இன்னம் புலப்படவில்லை.

விதியை என்னென்று சொல்வது? கோபாலன் ஏன் ஓடையருகில் உட்கார்ந்துகொண்டிருக்கிறான்? அவன் சுகமாகத் தன் வீட்டில் உறங்குவதைவிட்டு கண் கொட்டாமல் வாய்க்காலின் கரையில் விழித்துக் கொண்டிருப்பானேன்? அவ்விதம் அங்கே இருக்கும்படி யாரேனும் வேண்டிக்கொண்டாரோ? அல்லது கட்டளையிட்டாரோ? அல்லது தனது நேசத்துக்குரிய ஒரு ஆண் அல்லது பெண் தன்னால் இரக்ஷிக்கப் படவேண்டியதின் நிமித்தம் காத்துக்கொண்டிருக்கிறானோ? இல்லை, அவையெல்லாம் இல்லை. தான் இன்னாரென்றறியாத ஒரு பெண்பால் விஷயமாக இருவருக்கும் யாதொருசம்பந்தமுமில்லாமல் ஒருவரும் வேண்டாமல் தானாகவே என்ன காரணத்தாலோ அப்பெண்பால் ஏதோ கஷ்டப்படுவதாக அறிந்தோ அல்லது அனுமானித்தோ அவளைக்காப்பாற்ற அங்குகாத்துக்கொண்டிருக்கிறான். ஏன் அவளைக்காப்பாற்ற முயலவேண்டும்? ஏன் அவளைப்பற்றி அவ்வளவு சிரத்தையும் சிரமமும் எடுத்துக் கொள்ளவேண்டும்? எல்லா சௌகரியங்களையும்துறந்து ஏன் கஷ்டப்பட வேண்டும்? துப்பறிதலாகிய தன் தொழிலில் தேர்ச்சிபெறவா? இல்லை, இல்லை. அதனினும் மேலானநோக்கம் ஒன்றுண்டு. அது எல்லாம் வல்ல கடவுளால் ஏற்பட்ட நோக்கம். அதன் உண்மையையும் சிறப்பையும் நம்மால் கூற இயலாது. அந்நோக்கத்தை நிறைவேற்றவே அவன் அங்கு வந்திருந்தான். அவன் தானாக வரவில்லை. அவனை விதி அங்கு கொண்டு வந்துவிட்டிருந்தது. விதியானது இப்படித்தான் நம்மை அதன் இஷ்டப் படி தள்ளிக்கொண்டு போகிறது. நாம் எல்லோரும் விதியின் செயலுக்கு அடங்கினவர்களே.

கோபாலன் தனிமையாக ஓடையினருகில் உட்கார்ந்துகொண்டிருந்தான். காற்று மெதுவாய் வீசிக்கொண்டிருந்தது. எங்கும் நிச்சப்தமாயிருந்தது. நாற்புறமும் இருட்டு மிகுந்திருந்தது. மிக அருகிலிருந்ததை இன்னவென்றுகூட அறியமுடியாதபடி இருட்டாயிருந்தது. அங்கு அப்பொழுது ஒருவரும் நடமாடவில்லை. ஒரு பிராணியாவது அந்தப்பக்கம் வழிக்காட்டவில்லை. 'வெகுநேரம்' வரை உட்கார்ந்துகொண்டிருந்தான்.

சந்திரன் தன் கால ஒழுங்கு தவாாமல் கிழக்கே உதித்தான். உடனே சிறிது வெளிச்சம் நிலமுழுவதும் பரவியது. முற்றிலும் இருட்டு மயமாயிருந்த அவ்வெளியில் மரங்களும் செடிகொடிகளும் கண்ணுக்குப் புலப்பட்டன. இன்னம் நாலைந்து நிமிஷம் சென்றதும் சந்திரன் வானத்தில் உயர எறிவிட்டான். அவ்விடமெங்கும் ஒரே வெளிச்சமாயிருந்தது. ஆயினும் சத்தமின்மையும், பயங்கரமான தோற்றமும் அவ்விடத்தைவிட்டகலவில்லை.

கோபாலன் எழுந்தான். தனது உடை முதலியவற்றை ஒழுங்கு படுத்தினான். தானிருக்குமிடத்தைச் சுற்றிப் பார்த்தான். வெள்ளிக்குடிக்கும் தானிருந்த இடத்துக்கும் கால் மைல் இருக்கும் என்று கண்டான். பின்பு தான் விட்டு வந்த தோட்டத்திற்குப் போனான். "இங்கிருந்துதான் நாம் சோதிக்கவேண்டும்" என்று சொல்லிக்கொண்டே நாற்புறமும் சுற்றிப்பார்த்தான்.

தோட்டத்தின் ஓரமாய் ஒரு ரஸ்தா செல்லுகிறது. அச்சாலையில் பகலில் பலரும் நடமாடியதால் காலடிகள் ஒன்றோடொன்று கலந்து உருவின்றியிருந்தன. அவற்றால் ஒன்றும் அறியமுடியாதென்று கண்டான். கால் மணி நேரம் சுற்றிப்பார்த்து ஒன்றும் புலப்படாமல் சாலையோரமாய் இருந்த ஓர் புளியமரத்தடியில் உட்கார்ந்து தன் நிலைமையைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தான். மரத்தின் கிளைகளில் பலதாழ்வாய் இருந்தன. பூமியில் புளியிலை இறைக்கப்பட்டிருந்தது.

"புளியிலை இங்கு என் இறைக்கப்பட்டிருக்கிறது?" அவற்றை சேர்த்து எடுத்துச் சோதித்தான். "புதியவையாயும் இருக்கின்றன. இவ்விலையைப் பறித்துப்போட்டு வெகு நேரமாகவில்லை என்றும் தோன்றுகிறது. இலையும் சிறிதும் வாடவில்லை. சற்று முன்புதான் யாராவது பறித்துப்போட்டிருக்கவேண்டும்."

ஏதோ ஒரு யோஜனை யவனுக்குத் தோன்றிற்று. உடனே எழுந்தான். இறைக்கப்பட்டிருந்த இலைத்தடத்தோடு சென்றான். இரண்டடி நடந்ததும் இலைத்தடத்தைக் காணோம். மறுபடியும் வேறொரு மரத்தினடியில் அவ்விதமே யிலைகள் இறைக்கப்பட்டிருந்ததைக் கண்டான். அத்திசையை நோக்கிச் செல்லச்செல்ல இலைத்தடம் அநேகமாய் ஒவ்வொரு மரத்தடியிலும் காணப்பட்டது. புளி, பூவரசு, உயர்ந்து வளர்ந்த ஆவிரை, கொன்றை, ஒணன்கொடி, முதலிய பற்பல மரஞ்செடி கொடிகளிலிருந்தும் இலை பூ பறித்துப் போடப்பட்டிருந்தன. அவைகளில் ஒன்றாயினும் வாடியிருக்கவில்லை. இலைத்தடங்களை ஆதாரமாகக்கொண்டு

செல்லவே அது கடைசியாய் ஓர் காட்டிற்குக் கொண்டுபோய்விட்டது. அங்கு இலைத்தடத்தைக் காணோம். காட்டில் பாதை நெருக்கமாகவும் முட்செடிகளடர்ந்ததாகவும் இருந்தது. அதன் வழியாக அவர்கள் சென்றிருப்பாரோ என்று எண்ணினான். "ஏதேனும் புடவைத்துண்டுகள் முட்செடிகளில் இருந்தால்,—"

அவன் உடனே அவ்விடத்தைச் சோதித்தான். அவன் எண்ணிய படி இரண்டொரு புடவைத் துண்டுகள் முட்செடிகளில் கிழிந்தவையாய் இருக்கக்கண்டான். அவற்றை எடுத்தான். தன் சட்டைப் பையில் வைத்திருந்த புடவைத்துண்டுகளையும் எடுத்து இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கவே இரண்டும் ஒரே புடவையின் துண்டாகக் காணப்பட்டன. இருந்த சந்தேகம் பலப்படவே மறுபடியும் காட்டில் ஓரமுழுதும் சுற்றிப் பார்த்தான். எங்கும் முட்செடிகளும் அடர்ந்த செடிகொடிகளும் அவன் போவதைத் தடுத்தன. சுமார் இரண்டுமணி நேரம் சுற்றிக் காலோய்ந்து களைப்படைந்து "சரி, இரவில் ஒன்றும் தெரியவில்லை. காலையில் ஒரு கால் நன்கு புலப்படும். அநேகமாய் ஞானம்பாள் இங்கு வந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. எப்படியும் காலையில்தான் எல்லாம் செய்யமுடியும். ஆகையால் நாம் திரும்பிப்போவோம்," என்று தனக்குள் சொல்லிக்கொண்டே திரும்பினான்.

வெள்ளிக்குடிக்குப் போவதெனத் தீர்மானித்து முன் வந்த உடுப்புடன் அவ்வூருக்குச் சென்றான். கலியாணத்திற்கு முந்திய நாளாதலால், சத்தம் இன்னம் அடங்காமலிருந்தது. அவன் அங்குபோய்ச் சேர்ந்த போது சுமார் 11 மணி இருக்கும். அங்கிருந்த குழப்பத்தில் அவனைக் கவனிப்பார் ஒருவருமில்லை. அவனும் ஒருவர் கவனத்தையும் கவராமல் சென்று ஓர் வீட்டு வாயிற்றிண்ணையில் போய் படுத்துக்கொண்டே அங்கு நடப்பவைகளைக் கவனித்துக்கொண்டிருந்தான்.

மாலை 7 மணிக்கே சம்பந்திகள் எல்லோரும் வந்துவிட்டார்கள். அவர்கள் எல்லோரும் சாப்பிட்டானபிறகு இரவில் சுமார் பத்துமணிக்கு நிச்சியதார்த்தத்தை நடத்துவதென எண்ணியிருந்தார்கள். ஆயினும் எங்கும் நடப்பதுபோலவே பத்து என்பது பதினொன்றாயிற்று.

அந்நேரத்தில் எல்லோரும் அச்சடங்கைச் செய்துமுடிக்க வீட்டில் உட்கார்ந்திருந்தார்கள். ஸ்திரீபுருஷர்கள் யாவரும் வந்திருந்தார்கள். சிலர் அங்குமிங்கும் நடந்துகொண்டிருந்தார்கள். சிலர் பழம் வெற்றிலை முதலியவைகளைக் கொண்டுவந்து வைத்துக்கொண்டிருந்தார்கள். சிலர் பிறரை ஏவிக்கொண்டிருந்தார்கள். ஸ்திரீகள் ஒருவரோடொருவர்

மெதுவாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். "பெண்ணைக் கூப்பிடுங்கள்" என்றார் ஒரு சாஸ்திரியார். "அடி ஞானம்பாள், ஞானம்பாள்" என்று நாலைந்து ஸ்திரீகள், அப்புருஷ சபைக்குப்பயப்படாதவர்கள், கூவிக் கொண்டு சென்றார்கள்.

"ஏன், நாழிகை, ஆரம்பிக்கலாமன்றோ?"

"ஞானம்பாள் எங்கே" என்று இரண்டொருவர் கேட்டார்கள்.

"ஞானம்பாளை சீக்கிரம் கூட்டிக்கொண்டுவா" என்றார் சாம்பசிவய்யர். அவர் தம்பியார் ஸ்திரீகள் கூட்டத்திற்குச்சென்று "ஞானம்பாளை சீக்கிரம் கூப்பிடுங்கள், அவர்கள் எல்லாரும் காத்துக்கொண்டிருக்கிறார்கள்" என்றார்.

"இங்கில்லையே".

"இல்லையா? வேறு எங்கேயாவது இருப்பாள். பாருங்கள்" மறுபடி நாலைந்து ஸ்திரீகள் வரையில் இரண்டொருவர் வெளியிலும் உட்புறமும் சென்று தேடினார்கள். அவர்கள் ஞானம்பாளைக் காணவில்லையென்று சொல்லிக்கொண்டுவந்தார்கள். மறுபடியும் அரை நாழிகை நேரம் தேடினார்கள். அகப்படவில்லை.

"சங்கரா, எங்கேனும் படுத்துக்கொண்டிருப்பாள், பார். சீக்கிரம் அழைத்துக்கொண்டுவா," என்று சாம்பசிவய்யர் தமது புத்திரனிடம் கூறினார்.

அவன் வீட்டில் நாலாபக்கங்களிலும் தேடினான். பின்புவந்து "அவளைக்காணோமே" என்றுசொன்னான். மறுபடியும் அவனும் அவனுடைய சிறிய தகப்பனும் இன்னம் இரண்டொருவருமாகத்தேட ஆரம்பித்தார்கள் "யார் வீட்டிலாவது படுத்துத்தூங்கிவிட்டால்,—அவ்விதம் எங்கேனும் இருக்கிறாளோ பார்ப்போம்" என்று சொல்லிக்கொண்டே தேடினார்கள். ஆயினும் அகப்படவில்லை.

"எங்கேயாவது படுத்துக்கொண்டிருப்பாள். தேடுங்கள். நாழிகையாயிற்று." என்று கட்டளையிட்டார் சாம்பசிவய்யர். மறுபடி தேடியும் அகப்படவில்லையென்று சொன்னவுடன் அவர் சிறிது கலக்கமுற்றார். உட்கார்ந்திருந்தவிடத்திலிருந்து எழுந்திருந்தார். "எங்கே போயிருப்பாள்?" என்று சொல்லிக்கொண்டே 'சபையிலிருந்தோரைப்பார்த்து. "அவளைப் பார்த்துக்கொண்டுவருகிறேன். சற்று மன்னிக்கவேண்டும்" என்று சொல்லிவிட்டு வெளியில் வந்து "அங்கு தேடினயா? இங்கு பார்த்தாயா" என்று கேள்விகள் கேட்டுப்பின் தாமும் தேடலானார். மீனாக்ஷியகத்தில் படுத்தூங்கிவிட்டாளோ பார்" என்று சொல்லிக்கொண்டே

அவ்வீட்டுக்கும் போய் விசாரித்தார். அங்கு இல்லையென்று அவ்வீட்டார் சொன்னார்.

"மீனாக்ஷி, ஞானம்பாளை நீ பார்த்தாயா? எப்பொழுது பார்த்தாய்? எங்கு போனாள்?" என்று பலகேள்விகள் அப்பெண்ணைக்கேட்டார்.

மீனாக்ஷி, தான் அவளை மாலையில் தான் பார்த்ததாகவும், அப்பொழுது அவள் கோவிலுக்குப்போகக் கூப்பிட்டதாகவும், தான் வரவில்லையென்று சொன்னதாகவும், அவள் தனியாகச்சென்றதாகவும், கூறிமுடித்தாள். மறுபடியும் வெவ்வேறு இடங்களில் தேடினார்கள். ஒரு சிறிதும் பயன்படவில்லை.

அவள் காணமற்போனாள் என்ற சங்கதி வெளியாகி சுமார் இரண்டுமணியாயிற்று. ஊரில் இந்த சங்கதி பரவவே, சாம்பசிவய்யருக்கு வேண்டியவரும் தெரிந்தவருமான பலர், பல கூப்பார், வந்துசேர்ந்து பெண் காணமற்போனதைப்பற்றி விசாரித்தார்கள். மறுபடியும் ஒரு மணி நேரம் சென்றும் அவளைக்காணமையால் எல்லோரும் சிறிது அச்சமடைந்தார்கள்.

"கோவிலுக்குப்போனபோது தனிமையில் சென்றாளோ?" "கோவிலுக்குப்போனவர்களை விசாரித்தால் தெரியும்" உடனே கோவிலுக்குப் போனவர்களை விசாரிக்க இரண்டொருவர் ஞானம்பாளை ஒருதடவை தான் பார்த்ததாகவும் பிறகு பார்க்கவில்லையெனவும் கூறினார்கள். கோவில் குருக்களைக் கேட்டதிலும் ஒரு பயனும் விளையவில்லை.

"ஒவ்வொருவரும் ஒவ்வொரு அபிப்பிராயத்தைக் கூறினார்கள். யாராவது இங்கு நடமாட்டமுண்டோ?" என்றார் ஒருவர். "நகைகள் அதிகம் போட்டுக்கொண்டிருந்தாளே." "நகைக்காசைப்பட்டு எவனாவது தூக்கிப்போயிருந்தால்—." "நகைபோனாலும் போகிறது.—" அதற்கு மேல் அவருக்குச்சொல்ல இஷ்டமில்லை. "இதுவரையில் நடந்ததேயில்லையே. புதிதாயல்லவா இருக்கிறது!" "நாகைப்பட்டணத்தில் இப்படித்தான் நடந்தது—." "சஸ், பேசாதாயுங்களம். அதைப்போல் இங்கு ஒன்றும் நடக்காது." என்று ஆத்திரத்துடன் எதிர்த்தார் ஒருவர்.

நகைப்பட்டினத்தில் (ஊரின்பெயர் சந்தேகந்தான். ஏதேனும் ஒரு ஊரில் ஏதாவது நடந்தால் அந்தஊர் மறந்துபோய்ப் பேசுவோருக்கிஷ்டமான ஊராய்விடும்.) ஒரு கலியாணப்பெண்ணை சிலர் தூக்கிக்கொண்டு போய் நகைகளைப் பிடுங்கிக்கொண்டு அவளைக்கொண்டு கடற்கரையில் போட்டுவிட்டுப் போய்விட்டார்களாம். அதை தாராளமாய்ச் சொன்னால் எங்கு சாம்பசிவய்யருக்கு மனவருத்தம் அதிகரிக்குமோ என்று நினைத்து அதைச்சொல்லுமுன் தடுத்துவிட்டார்.

# X பிறகு?

இராமகிருஷ்ணன் ஞானம்பாளைக் கலியாணம் செய்துகொள்ளவேண்டும் என்று எண்ணி தன் எண்ணம் நிறைவேறுமாறு கடவுளைப்பிரார்த்தித்துக்கொண்டிருந்தான். அவன் தந்தை இன்னம் சிறிது பணம் கூடக் கேட்டிருக்கலாகாதா என்று எண்ணிக்கொண்டிருந்தார். அவன் தாயார் பெண் நன்றாயிருக்கமாட்டாள் என்று குறை கூறிக்கொண்டிருந்தாள். பெண்ணை நேரில் பார்த்தும் நன்றாயில்லையென்று "ரூபித்து" கலியாணத்தை நிறுத்திவிட எண்ணியிருந்தாள். பெண் அழகில்லை யென்றல்ல ஞானம்பாளின் 'போடகிராபை' யவள்பார்த்தபோது அதன் தாயாருடன். "பெண் அழகுதான்" என்றுசொன்னதுண்டு. தன் உடன்பிறந்தானுக்கு ஒரு பெண் உண்டு. தன் உடன் பிறந்தானுடைய சம்பந்தத்தைவிடக்கூடாதென்று அபிப்பிராயப்பட்டிருந்தாள். அவள் நாத்தனாருக்கும் ஒருபெண்ணுண்டு. அந்த நாத்தனாரும் தன் பெண்ணை இராமகிருஷ்ணனுக்கு கொடுக்கவேண்டுமென்று விரும்பித் தன் தமையனிடம் அடிக்கடி சொல்லியிருந்தாள். ஒருவரும்—அதாவது இராமகிருஷ்ணன் ஒருவனைத்தவிர வேறு எவரும் விரும்பாத இக்கலியாணவைபத்தின் மகிமையைப் பாருங்கள்.

பெண் காணாமற்போன சங்கதி பிள்ளைவீட்டாருக்குத் தெரியவே அவர்கள் ஒரு சபை கூட்டிப் பின்வருமாறு பேசலானார்கள்.

"அப்பொழுதே தெரியுமே, ஜாதகம் நன்றாயில்லை யென்று: குப்புசாஸ்திரி ஜாடையாய் சொன்னான். இராமகிருஷ்ணன் பிடிவாதமாயிருந்தான் என்று ஒன்றும் சொல்லவில்லையென்றார்." என்றாள் இராமகிருஷ்ணன் தாயார்.

"ஆமாம் என்னிடத்திலும் சொன்னார்; ஏதாவது சொன்னால் என் மேல் கோபித்துக்கொள்வார்கள் என்று நான் பேசாமலிருந்துவிட்டேன். சிவனே என்று என் பெண்ணைக்கொடுத்து விடுகிறேன்;"

"என் தம்பிபெண்ணுக்குத்தான் என்ன? நான்சொன்னால்ஏறுமா?"

ஒவ்வொருவரும் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இராமகிருஷ்ணனின் தகப்பனார் நல்லசம்பந்தம் விட்டுப்போகிறதே என்றுவருத்தப்பட்டுக் கொண்டிருந்தார்;' இராமகிருஷ்ணன் இவ்வளவு அழகும்

குணமும் வாய்ந்தபெண் தனக்குக் கிடைக்காமல் போயிற்றே என்று வருந்தினான். அது மாத்திரமல்ல. காணாமற்போய்ப்பிறகு அகப்பட்டுவிட்டால் துக்கமேன்? ஒருகால் கொடிய கொலைபாதகர்கள் கையில் அகப்பட்டால்—அவள் தன்னைக்கலியாணம் செய்துகொள்ளாவிட்டாலும் போகட்டும். வேறு யாரையாவது மணந்துகொண்டு சுகமாய்வாழ்ந்தால் போதுமென்று எண்ணினான். இரவு துக்கத்திலும் தூக்கத்திலும் கழிந்தது.

மறுநாட்காலையிலும் அகப்படவில்லை. சாம்பசிவய்யர் ஏக்கம் பிடித்து உட்கார்ந்துவிட்டார். அவர்மனைவி கண்ணீர்விட்டு உருகியழுதாள். யார் என்ன சொல்லியும் தேறவில்லை. சங்கரன் தன்னாலானமட்டும் அங்குமிங்கு மோடித்தேடினான். அடிக்கடி விசனமேலிட்டு வழியிலுட்கார்ந்தான். அவனைச்சமாதானப்படுத்துவதே அவனுடன் வந்தவர்களுக்குச் சிரமமாய்விட்டது. போய்ப்பார்த்தவர்களெல்லாம் தங்களுக்கு ஒன்றும் புலப்படவில்லை யென்று திரும்பிவிட்டார்கள். மீனாக்ஷி இதைக் கேட்டதும் மிகவும் வருத்தமடைந்தாள்.

புதிதாய் வந்திருந்த பணக்காரச் சிறுவனும் அங்கு மிங்கும் தேடினான். அநேகரைப் பலகேள்விகள் கேட்டான். அவன் அவசியம் தேடி வருவதாகச்சொல்லித் தன் உடையைக்களைத்து விட்டு சாமானியஉடைதரித்துக்கொண்டு தான் ஏற்கனவே சந்தேகப்பட்ட இடத்துக்குப்போய்விட்டான்.

காலை ஆறு, ஏழு. எட்டு, ஒன்பது, பத்து மணியுமாயிற்று. ஒருசங்கதியும் தெரியவில்லை. கலியாணகாரியங்கள் நிறுத்தப்பட்டுப்போயின. சாம்பசிவய்யர் இன்ன செய்வது, இன்ன சொல்வது, என்று தெரியாமல் உட்கார்ந்து கொண்டிருந்தார். சாம்பசிவய்யருடைய தம்பி சம்பந்திகளுக்குப் பதில் சொல்லிக்கொண்டிருந்தார். இராமகிருஷ்ணன் தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த பணத்தைத் திருப்பிக்கொடுப்பதாக வாக்களித்தான். அதனோடு பெண் திரும்பவும் அகப்பட்டால் கலியாணம் செய்துகொள்வதாகவும் மெதுவாய்ச் சொல்லிவைத்தான். அவன் தகப்பனார் மிகவும் யோக்கியர். அவர் செலவுக்கென்று கொண்டுவந்திருந்த ரூபாய் ஐந்நூற்றையுங் கொடுத்துப்பாக்கி வரதக்ஷிணைப்பணத்துக்கு ஒரு 'நோட்டோபாண்டும்' எழுதிக்கொடுத்துவிட்டார்.

இராமகிருஷ்ணனும் அவன் தந்தையும் தங்கள் ஜாகைக்குப் போனதும் அவர்களுக்குக்கிடைத்த ஆசீர்வாதத்துக்குக் குறைவில்லை. பெண்ணைப்பற்றியும் அவள் தாயாரைப்பற்றியும் அவளுடைய சகோதரன், தந்தை

இவர்களைப்பற்றியும் தூஷிக்கலானார்கள். பணத்தைத் திருப்பிக்கொடுத்ததைப்பற்றிக்கண்டித்தார்கள்.

எல்லாரும் இராமபாணம் போன்ற சொற்களையும், விஷயங்களையும் சொல்லவே அவர்கள் அதிருப்தி கொண்டார்கள்.

"யாரடி பெண்ணைத் தூக்கிக்கொண்டு போவார்கள். அவர்கள் தான் பெண்ணை மறைத்து வைத்திருப்பார்கள்." என்றாள் ஒருத்தி.

"ஒருகால் பெண்—வயதாயிற்றே—திரண்டு விட்டாளோ அதை மறைக்கத்தான் இவ்வாறு செய்தார்களோ. இருக்கும். பெண்ணுக்கும் வயதாயிற்றல்லவா?"

"ஆம், இருக்கும். அப்படியானால் சம்பந்தம் வேண்டாமென்று கண்டிப்பாய்ச்சொல்லிவிடு."

"ஏ. இராமகிருஷ்ணா, பெண்ணை நீ பார்த்தபோது அவள் உன்னை நன்றாகப்பார்க்கவில்லை யென்றாயே. அவள் உன்னைக் கலியாணம் பண்ணிக்கொள்ளமாட்டேன் என்று சொல்லி ஆற்றில், குளத்தில், கிணற்றில் விழுந்து விட்டாளோ? அல்லது உன்னைக் கலியாணம் பண்ணிக்கொள்ள இஷ்டப்படாமல் தான்மறைந்துகொண்டு காணாமற் போனதாகக்காட்டி விட்டாளோ?"

"பெண் ருதுவாயிருப்பாள். அந்த விஷயத்தை மறைக்க இப்படிக காணாமற் போனதாகச் சொல்லுகிறார்களோ? அவர்கள் பொல்லாதவர் கள் என்று சொல்லிக்கொண்டார்கள்."

கடைசியில் சொன்ன விஷயம் வாஸ்தவமாயிருக்கலாமென்று சபையிலுள்ள எல்லோராலும் தீர்மானிக்கப்பட்டது.

"அப்படித்தானிருக்கும். அப்படித்தானிருக்கும்." என்று எல்லோரும் இறைந்து சொன்னார்கள். இராமகிருஷ்ணன் ஒவ்வொரு ஸ்திரீயாலும் உபதேசிக்கப்பட்டான். அவன் கேட்ட உபதேசத்தின் மகிமையால் ஞானம்பாளின்மேல் வெறுப்புக்கொள்ளத் தலைப்பட்டான். சங்கரனிடம் போய்த் தான் சந்தேகப்படுவனவற்றை யெல்லாம் அவனிடம் கூறி அவனுடைய மனஸ்தாபத்தை சம்பாதித்துக்கொண்டான். அவர்களுடைய சம்பாஷணையில் கடூரமான வார்த்தை பிரயோகப்பட்டன. ஒவ்வொருவனும் மற்றவனைத் தூஷித்தான். சங்கரன் வருத்தத்துடனும் கோபத்துடனும் திரும்பினான்.

"உன்னுடன் இனி முகலாபங்கூடச் செய்வதில்லை. உனக்கும் எனக்கும் இனி ஜென்மப்பகை யென்று வைத்துக்கொள்." என்றான்.

"ஆம், உன்னைத்தெரியும், போ. இப்படி யார் உன்னைப் பிழைக்கச் சொன்னார்? இஷ்டமில்லாவிட்டால் இல்லையென்று சொல்லிவிடுகிறது தானே. உன்னைப்போல் அயோக்கியன் கிடையாது." என்றான் இராமகிருஷ்ணன்.

இருவரும் பிரிந்தார்கள். இராமகிருஷ்ணன் கோபமும் வருத்தமும் அதிகங்கொண்டவனாய்த் தனது ஜாகைக்குப்போய், நடந்த சம்பாஷணையைப்பற்றிச் சொல்லவே இருந்த சந்தேகமும் போய்விட்டது. அவர்கள் பெண் வீட்டில் சாப்பிடக்கூடவில்லாமல் கோபமாய்ப்பேசி சண்டையிட்டுவிட்டு அடுத்த ரயிலில் போய்விட்டார்கள். அடுத்த முகூர்த்தநாளில் இராமகிருஷ்ணனுக்கு அவன் மாமன் அல்லது அத்தையின் பெண்ணைக் கலியாணம் செய்வித்தார்களா இல்லையா என்பதைப்பற்றி நமக்கு கவலையில்லை. ஊரிலுள்ளவர்களுக்கெல்லாம் நாம் கவலைக்கொண்டால் நம்மால் முடியுமா. உலகம்பெரியதல்லவா?

# XI. ஒரு ஆலோசனை

மணி இரண்டாயிற்று. இரண்டாம் தடவை தேடச்சென்றவர்கள் வீணில் திரும்பிவந்துவிட்டார்கள். மூன்றாம் தடவையாக நாலைந்துபேர் தேடப்புறப்பட்டார்கள். சாம்பசிவய்யருடைய சிநேகிதர்கள் சாம்பசிவய்யரைத் தேற்றிக்கொண்டிருந்தார்கள்.

கட்டாயப்படுத்தினதின்மேல் துக்கத்துடன் சிறிது சாதம்சாப்பிட்டார். அவர்மனைவியும் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய் உட்கார்ந்து கொண்டிருந்தாள். சங்கரனோ, துக்கத்துடன், ஆனால் தைரியத்தைவிடாமல், இரண்டொருவருடன் யோசித்துக்கொண்டிருந்தான்.

“காலையில் ஒருவர் தேடுவதாகப்போனாரே, அவர் வந்துவிட்டாரா? போய் வெகுநேரமாயிற்றே;” என்றார் ஒருவர்.

‘‘ஆம், அப்பொழுதேபோனாரே. இன்னம் வரவில்லை. அவருடைய சட்டைத்துணிகள்கூட இங்கேயே இருக்கின்றன. அவர் வந்தால் எதாவது தெரியலாம். அவர் யார்?” மற்றொருவர் பதில் சொன்னார்.

“யார் ?” சங்கரன் இதுவரையில் எதையோ நினைத்துக்கொண்டிருந்தான், உடனே தான் யோசனையிலிருந்து நீங்கி பேசப்பட்டவன் யார் என வினவினான். “எப்பொழுது வந்தார். சட்டைத்துணியா?”

“ஆம். நேற்று யாரோ கலியாணத்திக்கு வந்தவர்போல் தோன்றுகிறது. நேற்று வந்தார். இன்று காலையில் துணி சட்டை முதலியவைகளை வைத்துவிட்டுத் தேடப்போனார்;”

“நான் பார்க்கவில்லையே. யார் அவர்?”

“எனக்குந் தெரியவில்லை. சம்பந்தி வீட்டாரைச் சேர்ந்தவர்போல் தோன்றுகிறது;”

“சம்பந்திவீட்டாரில் அவ்வளவு சிரத்தையுடன் இருக்கிறவர்கள் யாரய்யா? இப்பொழுது தான் சண்டையிட்டுக்கொண்டு போனார்களே?”

“என்னவோ தெரியவில்லை;”

“இன்னம் வராததற்கு காரணம் என்னவென்று தெரியவில்லையே. ஒருகால்—ஒருகால், தப்பறிபவரோ. அப்பா யாரையாவது கேட்டுக் கொண்டாரோ. இங்கே யெங்கேயோ ஒருவர் இருக்கிறார் என்றாரே அவர்தானோ? அப்பாவைக்கேட்போம்;”

அவர்கள் சாம்பசிவய்யரண்டை போனார்கள். சங்கரன்கேட்டான். "யாரோ ஒருதுப்பறியும் உத்தியோகஸ்தர் இருக்கிறதாக ஒருநாள் சொன்னீர்களே. அவர்களைக்கொண்டு இன்று தேடச்சொன்னீர்களோ. இன்று காலை யாரோ வந்தாரமே?" என்றான்.

"நான் ஒருவரையும் காலையில் பார்க்கவில்லையே. ஆமாம், இப்பொழுதுதான் ஞாபகம்வருகிறது. நல்லான் கோட்டையில் சுந்தரமய்யர் இருக்கிறார். அவரைக்கூட அழைத்தேன். நான் சாரம்பாளைக் கண்டுபிடிக்கும்படி கேட்கவில்லையே. இதுவரையில் அவரைப் பார்க்கவில்லையே."

"சுந்தரமய்யரா!"

"ஆம், நீ போய் அவரைக்கண்டு சமாசாரத்தைச் சொல்லி அவரை நான் கூப்பிட்டதாகச் சொல்லி அழைத்துவா. நான் பேசிக்கொள்ளுகிறேன்?"

"இன்று காலையில் அவர் வந்தாராம். 20 வயதிருக்குமாம், ஒருவர் வந்தார். அவர் தேடப்போயிருக்கிறார்."

"அவருக்கு முப்பத்தைந்து நாற்பது வயதிருக்குமே. அவர் வீட்டிலிருப்பார். நான் கூப்பிட்டேனென்று சொல், தட்டாமல் வருவார். சீக்கிரம் போ." ஒரு நண்பனை சங்கரன் தன்னுடன் அழைத்துக் கொண்டு சுந்தரமய்யரைப் பார்க்கச்சென்றான்.

அப்பொழுது சுமார் 3 மணி இருக்கும். சுந்தரமய்யர் வாயில்திண்ணையில் தமது நண்பர் ஒருவரோடு உட்கார்ந்து சீட்டாடிக் கொண்டிருந்தார். இவர்களைக் கண்டதும், உபசரித்து உட்காரச்சொல்லி "யார் தாங்கள் தெரியவில்லையே! என்ன காரியமோ" என்றார்.

"தாங்கள் தானே சுந்தரமய்யர்?"

"ஆம் எம்மாலும் விசேஷமுண்டோ? தாங்கள் யார்?"

"நானிருப்பது வெள்ளிக்குடி. என் தகப்பனார் சாம்பசிவய்யர் தங்களை அழைத்துக் கொண்டு வரச்சொன்னார்."

"தங்கள் தங்கைக்குத்தான் கலியாணமோ? என்னை அன்றையதினம் அழைத்தார். அதெற்கென்ன இன்று சாயந்திரம்.—"

"இல்லை. அவர் பெண்—" என்றார் சங்கரனுடன் வந்தவர்.

"அப்படியா; என்ன விஷயம்? என்னுத்தியோகம் என்னவென்று தெரியுமல்லவா?" என்று சங்கரனைக்கேட்டார்.

"ஆகா, தெரியும். அது விஷயமாகத்தான் வந்தேன்"

"அப்படியானால் தனிமையில் பேசலாமே? அதற்கு ஆக்ஷேபமிருக்குமோ?"

"ஆக்ஷேபமொன்றுமில்லை."

சங்கரனுடன் வந்தவரிடம் திரும்பி "கொஞ்சம் மன்னிக்கவேண்டும். தனிமையில் பேசவேண்டும்" என்றுசொல்லிச் சங்கரனை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றார்.

கூடத்தில் ஒரு பலகைபோடப்பட்டிருந்தது. அதில் உட்கார்ந்து கொண்டார்கள். "இனிசொல்லலாம்" என்றார் சுந்தரமய்யர்.

சங்கரன் தனக்குத்தெரிந்த எல்லாவிஷயத்தையும் அவரிடம் சொன்னான்.

"சரிதான், அதற்கென்ன பார்ப்போம். ஆனால் நிச்சயமாய் ஒன்றும் சொல்லமாட்டேன். என்னால் முடிந்தவரையில் பார்க்கிறேன்." சுந்தரமய்யர் கண்ணை மூடினார். சிறிது நேரம் யோசித்தார். தனது மருமான் ஏற்கனவே அக்காரியத்தில் பிரவேசித்துவிட்டான். அதையவனிடம் சொல்லுவதா வேண்டாமா? அவனும் இதுவரையில் வந்து யாதொரு தகவலும் சொல்லவில்லை. என்ன செய்வதென்றும் தோன்றவில்லை. பிறகு

"சரி வெள்ளிக்குடிக்கு நாம் போவோம் உங்கள் தகப்பனாரைப் பார்த்த பிற்பாடு என்ன செய்வதென்று சொலலுகிறேன்." என்றார். மூவரும் புறப்பட்டுப்போனார்கள். சாம்பசிவய்யர் காலையிலிருந்தபடியே துக்கத்துடன் உட்கார்ந்திருந்தார். சுந்தரமய்யரைக் கண்டதும் வேகமாய் ஓடிவந்து, "நீங்கள் தான் என்னைக்காப்பாற்றவேண்டும். ஓய்வு நாள் கழிக்க வந்ததாகவும், இவ்வேலைகளில் பிரவேசிப்பதில்லையென்றும் சொன்னீர்கள். இப்பொழுது அந்த தீர்மானத்தையெல்லாம் விட்டு விட்டு என்னை எப்படியாவது காப்பாற்றவேண்டு" மென்று சொல்லிக்கொண்டே அவர் கையைப்பிடித்துக்கொண்டார் அவர் கண்களில் நீர் ததும்பிக்கொண்டிருந்தது. அவர் அழுத முகமாய் இருந்தார்.

"பயப்படவேண்டாம். நானிருக்கிறேன்."

"அவ்வளவு தான் எனக்கு வேண்டியது. நீங்கள் பயமில்லையென்றால் பயமில்லை தான்." என்று மனந்தேறினார் சாம்பசிவய்யர். இருவரும் உட்கார் தார்கள். சாம்பசிவய்யர் எல்லா சங்கதிகளையும் சாவதானமாய்ச்சொன்னார். பிறகு "அவளைக் கண்டுபிடித்து வருவீர்கள் என்று உங்களுக்குத் தைரியமுண்டோ. ஒருக்கால் அவள் நகை முதலியவைகளைப் பிடுங்கிக்கொண்டு அவளைகொலை செய்து—" சொல்லும்போதே "ஹோ" என்று அலறினார். "அப்படியொன்றும் நடவாது. ஸ்வாமியிருக்கிறார். பெண்ணின் ஜாதகமிருக்கிறதா? இருந்தால் அதைக்கொண்டு

வாருங்கள்" என்றார். சங்கரன் ஓடிப்போய் அதை எடுத்துக்கொண்டு வந்தான். சுந்தரமய்யர் அதைப்பார்த்து சிறிது நேரம் ஏதோ முணுமுணுத்துக்கொண்டு "சரி பெண்ணைப்பற்றி விசாரப்படாதேயுங்கள். ஆயசு பலமாயிருக்கிறது. இன்னம் முப்பது முப்பத்தைந்து வருஷம் வரையில் விசாரமில்லை. நீங்கள் பயப்படவேண்டாம்." என்று சொன்னார். சாம்பசிவய்யர் சிறிது தெளிந்தார். "என்ன செய்யப்போகிறீர்கள்?" என்றார்.

"நிச்சயமாய் இன்னசெய்வது என்று தெரியவில்லை. இதற்கு முன்னாலேயே ஒரு ஆஸாமி பிரவேசித்து விட்டான். அவன் எவ்வளவுதூரம் போயிருக்கிறானென்று தெரியவேண்டும்"

"யாரோ ஒரு சிறுபையன் 20 வயதிருக்கும் காலையில் 7-மணி சுமாருக்கு தேடப்புறப்பட்டானாம். இன்னம் வரவில்லையாம்.

"அவனைத்தான் சொல்லுகிறேன். அவன் போனபக்கம் இன்னதென்று தெரியவில்லை."

"அவனார்?"

"அவன் என் மருமான். அவனாக—என்னைக்கூட கேட்காமல் இந்தக்காரியத்தில் பிரவேசித்திருக்கிறான்."

'அவன் என்ன கெட்டிக்காரப்பையனா?'

"ரொம்ப கெட்டிக்காரன். என்னைவிட சாமார்த்தியசாலி;"

"ஒருவரும் அவனைக்கேட்கவில்லையே, தேடும்படி?"

"தானாகவேதான் பிரவேசித்தான். இதுமாதிரி அனேகம தடவை ஒருவரும் கேட்காமலிருக்கும்போதே பிரவேசித்து அநேகருக்கு உதவி செய்திருக்கிறான்"

"ஆனால் அவனுக்கு எப்படித்தெரியும், இந்தமாதிரி நடக்குமென்று; ஞானம்பாள் காணமற் போவாள் என்று எப்படியறிந்தானோ?"

"அதெல்லாம் எனக்கு நன்றாய்த் தெரியாது. தெரிந்தாலும், அவனனுமதியில்லாமல் ஒன்றும் சொல்லமுடியாது"

"சரி நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள். உங்கள் காரியத்தை இப்பொழுதே ஆரம்பித்துவிட்டால் மிகவும் சௌகரியம்"

"அப்படியேயாகட்டும். ஆனால் அவன் திரும்பிவந்துவிட்டால் நல்லது. வந்தால் நானும் இந்த வேலையில் பிரவேசித்திருப்பதாகச் சொல்லுங்கள். 'இந்தக்கடிதத்தையும் கொடுங்கள்' என்று ஒரு சிறுகடிதத்தை யெழுதி சாம்பசிவய்யர்கையில் கொடுத்துவிட்டு அவரிடம் விடைபெற்றுக்கொண்டுத்தன்னூருக்குப் போய்விட்டார்.

## XII. அவனால் இனி ஒன்றும் செய்ய முடியாது

கோபாலன் முன் சொன்னபடி ஞானாம்பாளைத் தேடப்புறப்பட்டான். முதனாள் இரவில் தான் அறிந்த விஷயங்களையும் அனுமானித்தவைகளையும் நினைத்துப்பார்க்கப் பார்க்க ஞானாம்பாள் காட்டுக்குக்கொண்டு போகப்பட்டிருக்கவேண்டுமென்று புலப்பட்டது. உடனே அங்கு போனான். எந்த இடத்தில் முதனாள் பறித்துப்போட்ட இலைகள் முடிந்தனவோ, எந்த இடத்தில் அவன் தூங்காமல் விழித்தானோ, எந்த இடம் வரும்வரையில் அவன் மனம் தடைபடாமல் அனுமானித்துக்கொண்டிருந்ததோ அவ்விடத்திற்கு வந்தான். முதனாள் தான் எடுத்துக்கொண்ட காரியத்தில் மனமுழுவதும் செலுத்தியிருந்ததால் அவன் எவ்வளவுதூரம் சென்றான் என்று தெரியாமலிருந்தது. இப்பொழுதோ அவன் மனம் அவ்வளவு கவலையுடன் இருக்கவில்லை. தன்மனம் தடைபட்ட இடத்துக்குப்போய் அங்குள்ளவற்றைப் பார்த்தபிறகுதான் யோசனை பிறந்தது சுமார் ஆறுஏழு மைல்வரையில் வந்துவிட்டதாக அறிந்துகொண்டான். அவ்விடம் எவ்வூருக்கும் சமீபமாயில்லை. ஆடுமாடுகள் கூட மேய்வதற்கு அதிகமாய் அவ்விடம் வருவதில்லை. அவ்விடங்களில் செல்வது மிகவும் கடினம். புதர்களும் செடிகொடிகளும் அடர்ந்திருக்கும். அங்கே சரியானவழிகிடையாது. தப்பித்தவறிவந்த மாடுகள் நடப்பதால் உண்டான உபயோகமற்ற வழியைத்தவிர வேறுகிடையாது. நிலமுழுவதும் பசும்புல்லாயிருந்ததால் எவரேனும் வந்திருந்தாலுண்டாகக்கூடிய காலடியும் தெரிவதற்கிடமில்லை. அந்தக்கஷ்டமானவழியில் மிகவும் சிரமப்பட்டு நடந்துசென்றான். அவன் போனவழியில் சில செடிகொடிகள் முறிக்கப்பட்டும் அறுக்கப்பட்டும் செடிகளில் தொங்கிக்கொண்டிருந்தன. ஒருகால் அந்தக்கொடியபாதகர்கள் போகும்போது தங்களுக்குத் தடையாயிருந்த கொம்புகிளைகளை ஒடித்துத்தள்ளிக்கொண்டு போனார்களோ! என்று எண்ணினான். அந்த அடையாளத்தைக்கொண்டு அதைத் தொடர்ந்து சென்றான். சிறிது தூரம் சென்றதும் ஓர் முட்செடியில் இரண்டொரு துணியின் துண்டுகள் ஒட்டிக்கொண்டிருந்தன. அவன் அவற்றை எடுத்தான். தான் முதனாள் எடுத்த துண்டுகளையும் இவற்றையும் ஒப்பிட்டுப்பார்த்தான். இரண்டு துண்டுகளும் ஒரே மாதிரியாகவி

ருந்தன. யாதொரு வித்தியாசமும் காணப்படவில்லை. "ஞானம்பாளை வாழைத்தோட்டத்தின் வழியாய்க்கொண்டு போயிருந்தால் அவளை இங்கேயும் கொண்டுபோயிருக்கவேண்டும். அல்லது வேறு ஸ்திரீ வாழைத் தோட்டத்தில் இறங்கியிருந்தால் அவள் இங்கேயும் வந்திருக்கவேண்டும் துணி புதிதாயிருக்கிறது. புதிதான ஓர் புடவை கட்டிய ஒரு மாது வெள்ளிக்குடியிலும் இக்காட்டிலும் இருக்கக்காரணமென்ன?"

அந்தப்பாதையைப் பிடித்துக்கொண்டே போகுன். சிறிது தூரம் சென்றதும் ஒரு திறந்த வெளி காணப்பட்டது. அது ஒரு சதுப்பு நிலம். அதிகமாய்ப் புல்லில்லை. அதில் நான்கு காலடிகள் இருந்தன. சிலவிடத்தில ஐந்தும் ஆறும் இருந்தன. அதையும் அடையாளமாக வைத்துக்கொண்டு போகுன். காடும் நெருக்கமாய்விட்டது. நடந்து செல்ல முடியவில்லை. எதிரில் ஒரு பெரிய மரம் இருந்தது. அதன் கிளைகள் நெருங்கியிருந்தன. இன்ன செய்வதென்று புலப்படாமல் அங்கேயே பிரமித்து நின்முன். சிறிது நேரம் சென்றதும் களைத்துப்போய் உட்கார்ந்தான். அவன் மனம் அவனுக்கு கீழ்ப்படியவில்லை. என்ன செய்வான் பாவம். சிறு பையன். அனுபோகம் ஆகவில்லையல்லவா? தன் மாமன் சுந்தரமய்யரும் அருகில் இல்லையன்றோ?

திடீரென்று அவன் திரும்பிப்பார்த்தான். ஏன் அப்படித்திரும்பி பார்த்தானோ நமக்குத்தெரியாது. அவனுக்கே தெரியாதுபோலும். பூமியோடு பூமியாய்த்தாழ்ந்து படர்ந்திருந்தமரத்தின் கிளைகளுக்கு நடுவில் நடுவில் ஓர்வழி தோன்றியதுபோலிருந்தது. அவ்வழி வெகு நீளமுள்ளது போலும் தோன்றிற்று ஒருஆள் அல்லது பருமனாயிராவிட்டால் இரண்டு ஆட்கள் தாராளமாய் நுழைந்து செல்லலாம். சற்றும் யோசிக்கவில்லை. உடனே கீழேபடுத்துக் கைகளையும் முழங்காலையும் ஊன்றி மாடுபோல் நடந்து உள்ளே சென்முன். 'வெகுநேரம்' சென்முன். மணிக்கணக்கல்ல. இரண்டு மூன்று நிமிஷமிருக்கும. பிறகு நிமிர்ந்ததும் என்ன பார்த்தான்? அவனுக்கு மேல்புதர்கள் இல்லை. கீழே புல்முதலியவைகளின்றி நல்ல நிலமாயிருந்தது. மனிதர்கள் அடிக்கடி நடப்பதால் தேய்ந்த கட்டாந் தரையாகவிருந்தது. நாலைந்தடி நடந்ததும் ஒருவெளி தோன்றியது. அதன் நடுவில் ஓர் குடிசையிருந்தது. எங்கும் நிச்சப்தமாய் இருந்தது. தான் இவ்வளவு சிரமப்பட்டதால் தன்மார்பு அடித்துக்கொள்ளும் சத்த மும் தான் மெதுவாய் மூச்சுவிடும் சத்தமும் மிகவும் உரத்துக்கேட்டன.

"முன்முல் காலெடுத்துவைக்கிறதா?." ஒருநிமிஷம் யோசித்தான் "நாலைந்துபேர் வந்தாலும் எதிர்க்கத்துப்பாக்கி யிருக்கிறது. சுடுவதற்கு

குறிப்பார்க்க அறிவிருக்கிறது. பயப்படாதிருக்கத்தைரியம் இருக்கிறது கைச்சண்டை செய்யவும் பலமிருக்கிறது. குத்திவெட்ட ஆயுதமிருக்கிறது. ஒருசமயம் தோற்றுப்போய் நாமே சாகவேண்டியிருந்தாலும் அதற்கும் மனமிருக்கிறது" என்று நினைத்துக்கொண்டு நடந்தான். மெது வாய்க்குடிசையில் நுழைந்தான். ஒருவரையும் காணேம். ஆனல் முதனுள் யாரோ வந்திருந்தார்கள் என்பதற்கு அடையாளமிருந்தன. மண்பானையில் தண்ணீர் நிறைய இருந்தது. வாடாத ஓர் இலையில் சிறிது உணவு இருந்தது. இரண்டொரு வாழைப்பழத்தோல் அங்கேகிடந்தது. "ஆகையால் அவர்கள்—அந்த இரண்டுபாதகர்களும் இங்கேவந்திருக்கவேண்டும். வந்தபின் என்னசெய்திருப்பார்கள்." காட்டில் இந்த இடமோ ஒருவரும் எளிதில் வரக்கூடிய இடமல்ல. இங்கொரு இடமிருக்குமென்று கூட ஒருவருக்கும் தெரியாதுபோலும். இவ்விடத்தில் அவள் நகைகளைக்கழற்றியிருக்கலாம். ஏன் இவ்வளவுதூரம் வரவேண்டும். ஒருகால் இரவில் சாலையில் அல்லது அதன்பக்கத்தில் யாராவது நடமாடினல் கெடுதலல்லவா? அவளை அப்படியே விட்டால் அவர்கள் ஜனங்கள் கையில் அகப்படக்கூடும் அல்லது ஊர்ப்பக்கத்தில் அவளை கொலே செய்தோ வேறு என்ன செய்தோ—செய்துவிட்டால் அவளை எங்கேனும் போடவேண்டும். கூடியவரையில் அவளைப்பற்றி ஒரு சங்கதியும் அவள் தகப்பனுருக்குத் தெரியாமலிருப்பது உசிதம். எப்படிக்கொலேயுண்டாள், எதனல் கொலே யுண்டாள் என்று கொலே செய்தவனுடைய காலடி முதலானவைகளைக் கொண்டு யோசிப்பார்கள். அநேகமாய்த் துப்புக்கண்டுபிடித்துவிடுகிறார்கள். ஆகையால் அவளைக்கொன்று ஒருவருக்கும் தெரியாத விடத்தில் போட்டுவிட்டால் அவர்களைப்பற்றிய சந்தேகம் உண்டாகாது என்று எண்ணியவர்கள் இங்கே கொண்டுவந்திருக்கவேண்டும். அதன்பின்?" வெகு நேரம் வரையில் யோசித்தான். மறுபடியும் அவ்வெளியைச்சுற்றிப்பார்த்தான். ஒன்றும் புலப்படவில்லை. இரண்டொரு இடத்தில் இரத்தத்துளிகள் நிலத்தில் விழுந்த அடையாளம்போல் காணப்பட்டது. அதைச்சோதித்தான். ஆம், உண்மையாய் இரத்தமே.

ஏன் என்று அவனேயறியாதபடி கண்ணீர் விட்டுத்துக்கிக்கலானன். கால் மணிநேரம் இவ்விதம் கழிந்தபின் மறுபடியும் வந்தவழியாகவே வெளியில் போக முயன்றன். ஆனல் இஷ்டம் கொள்ளாமல் வேறு ஏதாவது வழியுண்டோ என்று பார்த்தான். ஒரு சிறு வழியிருந்தது அதன் வழியாய்ச் சிரமப்பட்டுப்போனன். பத்து கஜம் நடந்ததும் நல்ல வழிக்குக் கொண்டுவந்துவிட்டது. பின்பு ஓர் சிறு ஆற்றண்டை வந்தான்.

அநேகம் காலடிகள் காணப்பட்டன. அப்புறம் காலடியையும் காணோம். ஒன்றையும் காணோம்.

அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. புத்தி மயங்கிற்று. அவள் கொல்லப்பட்டு ஆற்றிலோ அல்லது காட்டின் புதரிலோ போடப்பட்டாள் என்று தீர்மானம் செய்துவிட்டான்.

அவன் செய்யவேண்டியன எல்லாம் செய்துபார்த்தாயிற்று. அவள் இவ்வுலகில் இல்லை. வானுலகடைந்தவளை இங்கு கொண்டுவரமுடியுமா? அவனால் இனி ஒன்றும் செய்யமுடியாது. துக்கப்பட்டுக்கொண்டே நின்றுகொண்டிருந்தான்.

அச்சிற்றாறு காவேரியின் ஒரு கிளை. அவ்வாற்றங்கரையோரமாய்ச் சிறிது தூரம் சென்று பார்த்தும் ஒன்றும் புலப்படவில்லை. கடைசியாக ஊருக்குப்போவதென்று தீர்மானித்து ஆற்றங்கரையோரமாக நடந்து இரண்டு மூன்று நாழிகைக்குப்பிறகு வெள்ளிக்குடியின் பக்கம் வந்து சேர்ந்தான்.

# XIII. எனக்கு ஒரு பாவமும் தெரியாதே.

அவனால் இனி கண்டு பிடிக்கமுடியாது. அவள் மனிதர் கைக்குள் அகப்பட்டவள் அல்ல என்று நிச்சயம் கொண்டு அதனால் உண்டான துக்கத்தை வெளியிட்டுப் பின்பு தேறி இனி என்ன செய்வது என்பதைப்பற்றி எண்ணலானான். "நான் தாமதம் செய்ததால் இவ்வளவு அனர்த்தமும் உண்டாயின. நான் இத்தொழிலை மேற்கொள்ளாமல் எனது மாமனிடத்தில் கொடுத்திருந்தால் அவர் நிச்சயம் பெண்ணைக்காப்பாற்றியிருப்பார். வாலிபத்தின் குறைபாடு இதுவே. நான் காப்பாற்றிவிடலாமென்று வீணான தைரியம் கொண்டு மமதையால் வேறொருவர் உதவியையும் நாடாமல் முட்டாள்தனமாக இத்தொழிலில் பிரவேசித்தேன் இப்பொழுது தோல்வியடைந்தேன். அந்த பாதகர்கள் என்னிலும் சாமர்த்திய சாலிகளாகிவிட்டார்கள். இந்நிலைமையில் நான் மாமனிடம் செல்வது வெட்கத்துக்கிடமல்லவா? இனி பெண்ணைப்பற்றிய கவலையில்லை. 'உபயோகமற்ற தைரியம் கொண்டு நீயே இக்காரியம் செய்யத்தலைப்பட்டதால் அல்லவா அனியாயமாய் ஒரு பெண்ணைப் பறிகொடுத்தாய்?' என்று கேட்டால் என்ன சொல்லுகிறது. அந்தப்பெண்ணின் உயிருக்கு பதில் உயிர் வாங்கினாலன்றி நான் வீடு திரும்புவதில்லை. அதுவரையில் நல்ல சாப்பாடு சாப்பிடுவதில்லை. வேறு எந்தக் கவலையும் கொள்வதில்லை" என்று தீர்மானித்தான்.

அவன் என்ன அனுமானங்களைக்கொண்டு மேலே காரியம் தொடங்கினான் என்று இப்பொழுது கவனிக்கவேண்டாம். அவன் கையில் ஒரு துப்பறியும் உத்தியோகஸ்தனுக்கு வேண்டியவை எல்லாம் இருந்தன. ஒரு கார்டை எடுத்து ஒரு பென்சிலால் ஒரு கடிதம் எழுதலானான்.

"உ

மாமா அவர்களுக்கு அநேக நமஸ்காரம், நான் எடுத்த காரியம் இன்னும் பிரயோஜனப்படவில்லை. இனி பிரயோஜனப்படாது. பழிக்குப் பழி வாங்கினாலன்றித் திரும்பமாட்டேன், என் வரவை எதிர்பார்க்கவேண்டாம். காரியம் முடிந்தாலன்றி வீட்டில் கால் வைப்பது உங்களிடம் வேலை கற்றுக்கொண்ட கோபாலனுக்கழகல்ல. கவலைப்படவேண்டாம்.

வெள்ளிக்குடியின் பக்கம்
சித்திரை-மீ 15உ
கோபாலன்."

வெகுதூரம் நடந்தான். ஒரு சிறிய ஊருக்கு வந்தான். அங்கே உள்ள ஒரு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய்ச்சேர்ந்தான். கார்டு அருகில் இருந்த ஒரு தபால் பெட்டியில் சேர்க்கப்பட்டது. கல்வி நலம் பெரிதும் வாய்க்காத ஹெட்கன்ஸ்டபிலை "ஸரிப்படுத்தி" கன்ஸ்டபில் ஒருவனையும் இரண்டு விலங்கையும் பெற்றுக்கொண்டு தான் செய்யப் போகும் விஷயங்களில் சிறிது அந்தக் கன்ஸ்டபிலிடம் சொல்லி அவனுடைய நல்ல மனத்தைச் சம்பாதித்தான்.

பகலில் மூன்று மணியிருக்கும். ஒரு கன்ஸ்டபிலும் ஒரு மனிதனும் வெள்ளிக்குடியின் 'குடித்தெரு'வில் பிரவேசித்தார்கள். வீரம்மாள் வீடு எது என்று விசாரித்தார்கள். அவள் வீட்டண்டை வந்ததும் கன்ஸ்டபில் வாயிலில் நின்றான். அந்த மனிதன் உள்ளே சென்றான்.

"வீரம்மாள், வீரம்மாள்".

"யாரங்கே"? வீரம்மாள் வந்தாள். கன்ஸ்டபிலைப்பார்த்தாள். திடீரெனப் பயங்கொண்டாள். "என்ன சமாசாரம்" என்றாள்.

"நீ ஞானம்பாள் காணாமற்போன விஷயத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறாயாம். உன்னைக்கைது செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். உன்னைப் பிடித்துப்போக வந்திருக்கிறார்கள். என்னிடம் விலங்கைப்பார் (தன் கையிலிருந்த விலங்கைக்காட்டினான்). அவனிடமுமிருக்கிறது. நீ நல்லவள், உனக்கு ஒன்றும் தெரியாது; என்று சொன்னேன் ஆனால் அவன் கேட்க மாட்டேன் என்கிறான். ஞானம்பாளைத் திருடிப்போனவர்களை உன் வீட்டில் வைத்திருந்தாயாம். யாரோ பார்த்திருந்து போலீஸாரிடம் சொல்லிவிட்டார்கள்" என்றான் கோபாலன்.

"ஐயோ எனக்கொன்றும் தெரியாதே. தெய்வமே. செல்லாயி, எனக்கு ஒரு பாவமும் தெரியாதே" என்று கத்தினாள்.

"வீரம்மாள், நீ ஒன்றும் அறியாமல் பேசுகிறாய். உனக்கு அவர்களைத்தெரியும். நீ மறைக்கிறாய். நீ மறைக்கிறாயென்பது போலீஸாருக்குத்தெரியும். போலீஸ் ஸ்டேஷனுக்குப்போனால் என்ன செய்வார்கள் தெரியுமோ?"

"ஐயோ ஒரு பாவமும் நானறியேனே. ஐயோ செல்லாயி. என்னைக்காப்பாற்றேன். நீதானடி என்னைக்காப்பாற்றவேணும்."

"நான் சொல்லுவதைக் கேட்கமாட்டாய். ஸ்டேஷனுக்குப்போய் அவர்கள் உன் நகத்திலும் கண்ணிலும் ஊசியேற்றினாலன்றி நீ வழிக்கு வரமாட்டாய். குண்டாந்தடியால் நீ குத்துப்படவேண்டும். அப்பொழுதுதான் சொன்னபடி கேட்பாய். என் பேச்சுப்படிக்கேள், என்னை

உனக்குத்தெரியாது. நான் உன்னை நன்றாய் அறிவேன். இரண்டு பேர் உன் வீட்டில் நேற்றிரவு இருந்தார்கள். எனக்குத்தெரியும். அவர்களுடைய அடையாளம் சொல்லட்டுமா?" என்று தான் பார்த்த இருவருடைய அடையாளத்தையும் விவரித்துச்சொன்னான்.

"வீராம்மாள், நான் இன்னாரென்று உனக்குத்தெரியாது. என்னை ஏமாற்ற முடியாது. நீ அவர்களிடம் நேற்று சாயந்திரம் ஞானாம்பாளைக் கோவிலுக்குக் கூட்டிப்போவதாகச் சொன்னாயல்லவா? தனியாய்க்கூட்டிப்போவதாகச்சொன்னாயல்லவா? சரி இனிமேல் நான் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. நான் ஒன்று கேட்கிறேன். உண்மையைச்சொல்லிவிடு. உன்னை விட்டுவிடுகிறேன். உன்னைத்தப்புவிக்க நானாயிற்று. இல்லையோ, கன்ஸ்டபிலய்யாபாடு உன்பாடு."

"என்ன சொல்லுங்களய்யா. என்னை எப்படியாவது காப்பாற்றுங்களய்யா."

"நான் யாரென்று உனக்குத்தெரியாது. என்னை ஏமாற்ற நினைத்தாலோ உன்னை இலகுவில் விடமாட்டேன். அவர்கள் இரண்டுபேரும் இருக்குமிடத்தைச்சொல்லிவிடு. உனக்கும் வெகுமதி தரச்சொல்லுகிறேன். விலங்கும் இல்லை."

"அவர்கள் நேற்றுப்போனவர்கள் எங்கேபோனார்கள் என்று சொல்லவில்லை. ஒருகால் காட்டுக்குடிசைக்குப் போனார்களோ. அங்கில்லாவிட்டால்—"

"அங்கேயில்லை. காட்டுக்குடிசையைப் போய்ப்பார்த்தாயிற்று."

"இல்லாவிட்டால் அவர்கள் எங்குபோனார்களென்று எனக்குத்தெரியாதே."

"எங்குபோகக்கூடியவர்கள். எங்கே அடிக்கடிபோவார்கள். எல்லாவற்றையும் சொல்லிவிடு. உன்னை விட்டுவிடுகிறேன்."

வீராம்மாள் பக்கத்தூர்களில் இரண்டிடந்தானுண்டென்றும் அங்கில்லாவிட்டால் எங்குபோனார்களென்று சொல்லமுடியாதென்றும் தான் இவற்றை செல்லாயி என்னும் தெய்வசாக்ஷியாய்ச் சொல்லுவதாயும் சொன்னாள்.

"சரி, நான் திருப்தியடைந்தேன். ஆனால் நீ போலீஸ் ஸ்டேஷனுக்குப்போகத்தான் வேண்டும். ஜனங்களிடம் உன் சொந்தக்காரனென்று சொல்லிக்கொண்டு போலீஸ்காரனுடன் போ. உன் கையில் விலங்கைப் போடமாட்டான். 20, 30 ரூபாய் எடுத்துக்கொண்டு ஹெட்கான்ஸ்டபிலிடம் கொடுத்து சரிப்படுத்திக்கொள். நான் வந்து அவரிடம் சொல்லுகிறேன்."

மூன்று பேரும் புறப்பட்டு வெள்ளிக்குடிக்கு வெளியில் போய்விட்டார்கள். போலீஸ்காரனும் வீரம்மாளும் போலீஸ் ஸ்டேஷனுக்குப்போனார்கள். கோபாலன் ஒருவரும் அறியாமல் நல்லான் கோட்டைக்குள் நுழைந்தான். அவன் மாமன் ஏற்கனவே வெள்ளிக்குடிக்கு சாம்பசிவய்யரைக் காணப்போயிருந்தார். அவர் மனைவி அடுப்பங்கரையில் உட்கார்ந்துகொண்டிருந்தாள். கோபாலன் தன் வீட்டிற்குள் நுழைந்து தன் மாமி கவனிக்காமலிருக்கும்போதே தனக்கு வேண்டிய சாமான்களையும உடைகளையும் எடுத்துக்கொண்டு வெளியே வந்துவிட்டான்.

இப்பொழுது அவனை யின்னாரென்று ஒருவராலும் அறியமுடியாது. மேலெல்லாம் கருநிறம் பூசிக்கொண்டு மிகவும் அழுக்கான உடையைத் தரித்துக்கொண்டு தன் தொழிலுக்கு வேண்டிய மறைப்பு விளக்கு, கயிறு, கைத்துப்பாக்கி, கத்தி முதலிய சாமான்களை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். அவன் நன்றாய் அஸ்தமிக்கும் வரையில் எங்கேயோ ஒளித்துக்கொண்டிருந்தான். அதிர்ஷ்டம் வருவதானால் எல்லாம் நமது இஷ்டப்படி நடக்கும். சூரிய சந்திரர்கள் கூட நமக்கு சௌகரியம் செய்வார்கள். கோபாலனுக்கு சௌகரியம் செய்வதுபோல மேகங்கள் ஒன்றுகூடி ஒரு நக்ஷத்திரமும் தெரியாதபடி மறைத்துவிட்டன. சந்திரன் பத்துமணிக்குப்புறந்தான் உதிப்பான். "மேகங்கள் கருப்பாய் அடர்ந்து சந்திரனையும் மறைத்தால் மிகவும் சௌகரியம்." என்று எண்ணினான். அவன் செல்லவேண்டிய முதலிடம் பக்கத்திலுள்ள ஒரூரில் இடிந்து விழுந்துகொண்டிருந்த ஓர் பாழ் வீடு. அதில் ஒருவேளை யவர்கள் இருப்பார்கள் என்றும் அப்பாழ் வீட்டில் ஒருவரும் செல்வதில்லையாதலால் அது அவர்களுக்கு சௌகரியமாயிருந்ததென்றும் வீரம்மாள் சொல்லியிருந்தாள். அவ்விடத்துக்கு ஜாக்கிரதையுடன் சென்று பார்த்து அவர்கள் அங்கில்லையென்பதையறிந்து மற்ற இடத்துக்கு நிலவு புறப்படுமுன் போய்விடவேண்டுமென்று எண்ணிப் புறப்பட்டு வெளியில் சென்றான்.

அடுத்தவிடம் வேறொரு ஊரில் ஓர் வீடு. அது சற்றுப்பெரிய வீடு. அந்த வீடு எப்படிப்பட்டது என்றும் அதன் உள்ளமைப்பு எப்படிப்பட்டதென்றும் தெரியாது. வெளியிலிருந்து கன்னம் வைத்தாவது சுவரேறிக்குதித்தாவதுஉள்ளே பிரவேசிக்கமுடியாது. இரண்டு மூன்றுதடவை அவ்வீடு இருந்த தெருவில் உலாவிக்கொண்டிருந்து பிறகு அவ்வீட்டிற்குள் நுழைந்தான். ஒருவரும் அவனைக் கவனிக்கவில்லை. அங்கே வெளிச்சமில்லை. இருட்டாயிருந்தது. நடையின் ஓர் மூலையில் சிறிது நேரம் பதுங்கியிருந்தான். சில நிமிஷங்களுக்கெல்லாம் இரண்டு பேர்

உள்ளே நுழைந்தார்கள். இருட்டாயிருந்தமையால் கோபாலனிருந்ததை அவர்கள் அறியமுடியவில்லை. அவர்கள் உள்புறம் சென்று அங்கிருந்த விளக்கு ஒன்றை ஏற்றினார்கள்.

“இனி அவளை வைத்திருந்தால் தெரிந்துபோகும். அவளைக் கொன்றுவிட்டு மறுவேலை பார்க்கவேண்டும்.” என்றான் ஒருவன்.

“அப்பெயர்ப்பட்ட பெண்ணைக்கொல்லுவதா. இரக்கமில்லையா உனக்கு? வேறு எப்படியாவது செய். அப்பொழுதே சொன்னேனே. நகையைத் திருடிக்கொண்டு அவளை விட்டுவிடுகிறதென்று. என் கேட்க மாட்டேனென்கிறாய். இப்பொழுதும் வேறு எப்படியாவது செய.” என்றான் மற்றவன்.

“இனிமேல் அவளுக்குத் தெரியாதா, நம்முடைய இருப்பிடம்? ஆள் அடையாளம் எல்லாம் தெரியுமே. நாம் தொலைந்தோம். அவளைக் கொன்றுவிடுவதுதான் மேலானது. எத்தனையோ பேரைக்கொலைசெய் திருக்கிறோம். இது என்ன பிரமாதம்.”

“கொஞ்சம் யோசித்துப்பார். நாமோ சில நாட்களுக்கெல்லாம் ஓடிப்போகிறோம்; பணமோ வேண்டியமட்டும் கிடைத்துவிட்டது. அவளைக்கொல்வதனால் ஏதாவது பிரயோஜனமுண்டா?”

“இல்லையப்பா. நம்முடைய நடவடிக்கைகள் எல்லாம் அவளுக்குத் தெரியும். அவளை உயிருடன் விட்டால் மிகவும் கஷ்டம். கொன்றுதான் மறுவேலை பார்க்கவேண்டும். இதில்மாத்திரம் உன்னிஷ்டப்படி செய்ய முடியாது.”

“ஏய், வேண்டாமடா. எத்தனையோ கொலைகள் செய்தாயிற்று, இன்னம் என் செய்யவேண்டும். நாம் நாளைக்கே ஊருக்குப்போய்விடுவோம். பெண்ணை விட்டுவிட்டு வீட்டைக்கொளுத்திவிடுவோம்.”

“அதெல்லாம் முடியாது.”

“ஏ கருப்பா, ஆத்திரப்படாதே. சும்மா இரு. பொறு. ஆலோசனை செய்து பிறகு செய்யலாம். வீணில் ஒரு பெண்ணைக் கொலைசெய்ய வேண்டுமா?”

“அவசியமானால்?”

“என்ன அவசியம். மகா அவசியம். நாளைக்கு காலையில் நீ ஊருக்குப்போய்விடு. நான் பெண்ணை விட்டுவிட்டு வீட்டைக்கொளுத்திவிட்டு வந்துவிடுகிறேன். பெண்ணுக்குத் தெரிந்தாலென்ன?”

பின்பு இரண்டு மூன்று நிமிஷங்கழித்து இருவரும் வெளியில் சென்றார்கள். போகும்போது அவனிருந்ததை அவர்கள் பார்க்கவில்லை.

வெளிக்கதவைப் பூட்டிக்கொண்டுபோய்விட்டார்கள். அவர்கள் போன உடனே கோபாலன் மெதுவாய் உள்ளே நுழைந்தான். ஒரு சிறிய சத்தம் கேட்டது. யாரோ ஒருவர் குத்து வெட்டுப்பட்டு சாகுந்தருவாயில் மெதுவாயத் துக்கத்துடன் கத்துவதுபோலிருந்தது. அவன் உள்ளேபோனான். வரவரசத்தம் அதிகரித்ததுபோல் தோன்றிற்று. மெதுவாய்த் தன் மறைப்பு 'லாந்தரை' ஏற்றினான். சுற்றிலும் பார்த்தான். அது ஒரு பெரிய கூடம். ஒரு மூலையில் ஒரு பெண் படுத்துக்கொண்டிருந்தாள். உடனே அருகில் சென்றான். கையும் காலும் கட்டிப்போட்டிருந்தன. முகம் மிகவும் வியசனமடைந்ததாகக்காணப்பட்டது. கிட்டச்சென்றதும் கண்ணைமூடிக்கொண்டிருந்தவள் திறந்து பார்த்தாள். கோபாலனும் அவளை உற்றுப்பார்த்தான். இருவரும் ஒருவரையொருவர் பார்த்தார்கள். ஒருவர் ஆச்சரியத்துடனும் ஒருவர் இரக்கத்துடனும் பார்த்தார்கள். ஒருநிமிஷம் வரையில் ஒருவரும் பேசவில்லை.

## XIV. அவர்கள்வர இன்னம் நேரம்செல்லும்.

"நான் உன்னைக்காப்பாற்ற வந்திருக்கிறேன். பயப்படாமல்இரு."

அவள் பேசப்பார்த்தாள். பேசமுடியவில்லை. கீழேகுனிந்துப்பார்த்தான். அவள் வாயில் துணியடைத்திருந்தது. அதை மெதுவாய் எடுத்தான்.

"நான் எப்படிஉங்களுக்குவந்தனம்செலுத்துவதென்றுதெரியவில்லை."

"எனக்கொன்றும் வந்தனம் செலுத்தவேண்டாம். அவர்கள் எப்பொழுது வருவார்கள்.?"

"அவர்கள்வர இன்னம் நேரம்செல்லும். இரண்டுமூன்றுமணிக்குப் பிறகுதான்வருவார்கள்."

அவள் எழுந்திருக்க முயன்றாள். அதைக்கவனித்து அவளை தூக்கி உட்கார்த்தி வைத்தான்.

"ஞானம்பாள். நீ எப்படி இங்கு கொண்டுவரப்பட்டாய் என்பதை என்னிடம் சீக்கிரம் சொல். உன்னை சீக்கிரம் கொண்டுபோகவேண்டும். அவர்களுக்கும் ஏதாவது ஒருவழிவைக்கவேண்டும். சீக்கிரம் சொல்."

அவனை அவள் பார்த்ததும் வியப்புக்கொண்டாள். "யார் இவ்வளவு சிரத்தையாகத் தன்னைத்தேடிப்பிடித்து வீட்டுக்குக் கொண்டுபோகப் போகிறவர். இவ்வளவு நல்லவராக ஒருவர் இருக்கவும் கூடுமோ. "என்று எண்ணினாள். சற்றுயோசித்தாள்."

"ஞானம்பாள், உன்பெயரதுதானே? வேறுயாரையாவது கூப்பிடுகிறேனோ?—"

"என் பெயர் ஞானம்பாள்தான். தாங்கள் யாரென்றுதெரியவில்லை."

"தெரியாது. சீக்கிரம் சொல். அப்புறம் அதைப்பற்றிப்பேசிக் கொள்வோம்'

"நான் கோவிலுக்குப்போனேன்?"

"வீரம்மாள் உன்னைப்போகச்சொன்னாளா?"

"இல்லை, கோவிலிலே அம்மனுக்கு அலங்காரம் செய்தார்கள் என்றாள். அதைநம்பி நான் அங்கு சென்றேன். கோவிலில் கூட்டமில்லை. ஸ்வாமியைப்பார்த்துவிட்டு கோவிலைப்பிரதக்ஷிணம் செய்தேன். அங்கே

இந்த இரண்டுபேரும் என்மேல்பாய்ந்து என் வாயில் துணியை அடைத்தார்கள்."

"வேலியை முறித்துக்கொண்டு இறங்கி தோட்டத்துவழியாய்க்காட்டுக்குப் போனீர்கள்."

"ஆம்"

"போகும்போது உன்சிற்றுடை முள்ளில்பட்டுக் கிழிந்தது; வழியில் இலையைப்பறித்துப்போட்டுக்கொண்டு போனாய்."

"அவளுக்குண்டான சந்தோஷத்துக்கும், ஆச்சரியத்துக்கும் எல்லை இல்லை. அவனை எறிட்டுப்பார்த்தாள். 'ஆம்' என்று மெதுவாய்ச் சொன்னாள்.

"பிறகு?"

"பிறகு காட்டில் ஓர் குடிசைக்குப்போனோம். அங்கே சற்றுநேரம் இருந்து பிறகு வேறு வழியாக இந்த இடத்துக்கு வந்தோம். என்னைக் கொல்லவேண்டுமென்றிருந்தார்கள். ஆனால் கத்தி கைதவறி வரும்வழியில் விழுந்துவிட்டது. நடுவிலிருந்த வாய்க்காலில் விழுந்துவிட்டதோ என்னவோ. அவர்களிடம் இப்பொழுது கத்தி முதலியவை இல்லை."

"அங்கே குடிசையின் பக்கத்தில் இரத்தத்துளிகள் இருப்பானேன்."

"தங்கள் காரியம் கைகூடியதற்காகக் கோழியறுத்து அங்கிருந்த பாம்புப்புற்றுக்குப் பூசைபோட்டார்கள்"

"அப்புறம்?"

"இராத்திரி என்னைக் கொல்லவில்லை. காலையில் கொல்லலாமென்று எண்ணினார்கள். காலையில் கருத்தவன் என்னைப்பார்த்து இரக்கப்பட்டு என்னைக் கொல்லவேண்டாமென்று வேண்டிக்கொண்டான். இரண்டொரு தடவை மற்றவன் கொல்லவந்தும் தடுத்துவிட்டான். இன்று சாயந்திரம் கொன்று ஆற்றில் போட்டுவிடுகிறதென்று தீர்மானித்திருந்தார்கள். நல்லவேளையாய் அவன் தடுத்துவிட்டான்"

"எவன் ?"

"கருப்பாய் தடித்தவனாக இருப்பவன். சங்கிலியாம் அவன்பெயர்"

" அவர்கள் என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள்? "

" எப்படியும் என்னைக்கொன்றுவிடுவார்களாம்."

" இனிமேல்கூடவா ? "

அவன் அவள் முகத்தைப்பார்த்தான். அவளுடையதுக்கமுள்ள முகத்திலும் சிறிது புன்சிரிப்பு காணப்பட்டது "

" அவர்கள் யார் ? "

"ஊர் தெரியாது. செத்தவன் பெயர் கருப்பன், கருப்பாயிருக்கிறவன் பெயர் சங்கிலி. அவர்கள்தான் மேட்ரீல் ஒரு மாதத்திற்குமுன் ஒரு பையனைக்கொன்று அவன் போட்டிருந்த நகைகளைத்திருடினார்களாம். அவைகளையெல்லாம்இங்கேதான் கிழேபுதைத்துவைத்திருக்கிறார்களாம்."

"உன்னுடைய நகைகள் எங்கே?"

"அவைகள் அந்தப்பெட்டியில் இருக்கின்றன."

"ஞானம்பாள்." அவளை என் மறுபடியும் பெயர்சொல்லி கூப்பிட வேண்டுமென்பது அவனுக்கேதெரியாது. "நானிருக்கும்வரையில் உனக்குப்பயமில்லை. நீ படுத்துக்கொள். போலீஸ்கன்ஸ்டபில்கள் நாலைந்துபேரும் ஹெட்கன்ஸ்டபிலும் வெளியில் இருக்கிறார்கள். நான் போய்க்கூட்டிக்கொண்டுவருகிறேன். அதுவரையில் சும்மா இரு. வெளியில்போக வழியெது?"

"கொல்லைவழியாகப்போய்விடலாம்."

அவளை மெதுவாகப் படுக்கவிட்டு அவள் கைகால்களைக் கட்டியிருந்த கட்டை அறுத்துவிட்டு வாயிற்கதவை உட்புறத்தில் தாளிட்டுவிட்டு கொல்லைக்கதவைத்திறந்து வெளியில்வந்து போலீஸாரிடம் போனான். எற்கனவே எது எப்படியிருக்குமோ என்று நினைத்துப் போலீஸாருடைய உதவியைச் சம்பாதித்து அவர்கள் எப்பொழுதும் தனது அருகில் இருக்கும்படி எற்பாடுசெய்திருந்தான். அவர்களிடம் சென்று அவர்களைகண்டு "தயாரா?". என்றான்.

"தயார்தான். அகப்பட்டு விட்டார்களா?"

"இல்லை.—மேட்ரீ பையனைக்கொன்றவர்கள் யார் என்று கண்டு பிடித்தீர்களா?"

"இன்னம் இல்லை"

"அவர்கள்தான் இவர்கள். அவர்கள் பையனைக்கொன்று விட்டு நகையை இங்கேவைத்திருக்கிறார்கள். அவர்களை அந்தகேஸுக்குப்பிடிப்பதாகப் பிடியுங்கள். இந்தக்கேஸுக்காக என்று பிடித்தால், பாவம், இவர்கள் கோர்ட்டுக்குவரவேண்டிவரும். என்னத்திற்கு? நீங்கள் பிடித்ததற்காக எவ்வளவோ வெகுமதியடையப்போகிறீர்கள். அவர்கள் நகைகளிலும் எதாவது கிடைக்கும்."

"சரி, இஷ்டம்போல் செய்கிறோம்."

"அவ்வளவுதான். நாம் எல்லோரும் அவர்கள் வீட்டுக்கொல்லை வழியாக உள்ளே போவோம். நீங்கள் அந்த இரண்டுபேரையும் பிடித்துக்கொள்ளுங்கள், நான் பெண்ணை அழைத்துக்கொண்டுபோய்விடுகிறேன்."

எல்லோரும் சம்மதப்பட்டார்கள். அவன் வீட்டைவிட்டு வெளி வந்து நாலைந்து நிமஷமாவதற்குள் மறுபடியும் எல்லோரும் வீட்டிற்குள் கொல்லைப்புறமாய் நுழைந்தார்கள். கோபாலன் வாயிற்கதவைத் திறக் கும்படி ஓர் போலீஸ் சேவகனிடம் சொல்லிவிட்டுப் பெண்ணை அழைத் துக்கொண்டு கொல்லைவழியாய் வெளியில் வந்தான்.

ஒரு கன்ஸ்டபில் அவனுக்குத்துணையாய்ப்போனான். கோபாலன் எற்கனவே ஞானம்பாளின் நகை வைத்திருந்த பெட்டியை எடுத்துக் கையில் வைத்திருந்தான்.

அவளை மெதுவாய்க் கூட்டிக்கொண்டு அரைமைல் தூரத்திலுள்ள தன் ஊர்க்குள் நுழைந்தான். போலீஸ் கன்ஸ்டபில் விடைபெற்றுத் திரும்பி விட்டான். அப்பொழுது மிகவும் இருட்டாயிருந்தது. ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியவில்லை. வழியில் இருந்த பெரியமரங்கள் இருட் டினால் பயங்கரமாய்த் தோன்றின. சிறிய ஜெந்துக்கள் காய்ந்த சருகு களில் நடமாடுவதால் உண்டாகும் சத்தம் அடிவயிற்றைக் கலக்கிற்று. அவர்களுடைய நடையின் சத்தமும் மூச்சுவிடுதலின் சத்தமும் மிகவும் பயத்தையுண்டாக்கின. வழியானது சிறிது வளைந்து சென்றது. எதி ரில் ஒரு பெரியமரம் தென்பட்டது. அதைக்கண்டதும் ஞானம்பாள் ஐயோவென்று அலறினாள். அவன் கையைக் கெட்டியாய் பிடித்துக் கொண்டாள். மூர்ச்சைகொண்டு அவன்மேல் சாய்ந்துவிட்டாள்.

“ஞானம்பாள்” என்று கூப்பிட்டான். பேச்சைக்காணோம். உடனே அவளை இரண்டுகையாலும் தூக்கிக்கொண்டு வேகமாய் நடந்துசென்றான்.

யாரோ ஒருவர் எதிரே வருவதுபோலத் தோன்றிற்று. ஒரு கருப்பு மனிதன் கருப்பு வஸ்திரம் தரித்து எதிரே வந்தான். கோபாலனுக்குக் கொஞ்சம் பயமுண்டாயிற்று. ஆயினும் ஒன்றையும் காட்டிக்கொள்ளா மல் நடந்தான். வந்தவன் “யாரது, அங்கே?” யென்றான். கோபாலன் பதில் பேசவில்லை. வந்தவன் மறுபடியும் “யாரது? ஓகோ தெரிகிறது. நீயா? உன்னைத்தான் தேடிக்கொண்டுவந்தேன். பெண்ணைத்திருடிக் கொண்டாபோகிறாய்? விட்டேன்பார்,” என்றான். கோபாலன் சிறிது சந்தேகமடைந்து “யாரடாவன் வழிமறிக்கிறது? எட்டி நில், இல்லா

விட்டால் சுட்டு—" என்று சொல்லுமுன், "கோபாலா நீயா? பேஷ். கண்டு பிடித்துவிட்டாயா ?" என்று பதில் வந்தது.

வந்தவர் சுந்தரமய்யர். அவர் வெளியில் துப்பறியப்போகும்போது தன் உருவத்தை மாற்றுவதுபோலவே குரலையும் மாற்றுவது வழக்கம். அதனால்தான் அவன் தன் மாமன் குரலைக்கண்டுபிடிக்கமுடியவில்லை.

" ஆம்: கண்டுபிடித்து விட்டேன். மிகவும் களைத்திருக்கிறாள். சீக்கிரம் வீட்டுக்குப்போகவேண்டும்."

சுந்தரமய்யர் பெண்ணை அவனிடமிருந்து வாங்கிக்கொண்டு வேக மாய் வீட்டுக்குப்போனார். மெதுவாய் அவள் மூர்ச்சை தெளிந்தாள். கோபாலனும் அவள் பக்கத்தில் நடந்துபோனான்.

அவர்கள் வீட்டுக்குப்போனதும் கோபாலன் கதவைத்தட்டினான். சுந்தரமய்யர் மனைவி கதவைத்திறந்தாள். மூவரும் உள்ளே சென்றார்கள். சுந்தரமய்யர் மனைவி பெண்ணை அழைத்துச்சென்று அவளுக்குச் செய்ய வேண்டிய சௌகரியம் எல்லாம் செய்தாள்.

கோபாலன் எல்லா விஷயங்களையும் விரிவாய்த் தன் மாமனிடம் சொன்னான். "என்னிடம் ஒருவார்த்தை சொல்லியிருந்தால் இவ்வளவு கஷ்டமில்லையே?" என்று சொன்னார் சுந்தரமய்யர்.

"எப்படி சொல்லுகிறது. நான் எதை ஆதாரமாக வைத்துக்கொண்டு இந்தக்காரியத்தில் பிரவேசித்தேன்? உங்களுக்குத் தெரிந்ததுதானே. ஒருக்கால் நீங்கள் நம்பிக்கை கொள்ளாவிட்டால்—. மேலும் நீங்கள் இந்த விசாரங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு இருக்க வந்தீர்கள்."

"அப்படியல்ல. சமயமென்றால் கைவிடலாமா? நாம் பிறந்ததே கஷ்டப்படத்தானே."

"சரிதான். சொல்லியிருக்கலாம். சொல்லியிருந்தால் இப்படி நேராதுதான்."

கோபாலனும் ஞானம்பாளும் சிறிது ஆகாரம் எடுத்துக்கொண்டார் கள். கோபலனுக்கு அன்றையதினமே சிறிது காய்ச்சல் வந்துவிட்டது. ஞானம்பாள் சிறிது தெளிந்து வார்த்தையாடினாள். சுந்தரமய்யர் சாம்ப சிவய்யரைக் கூட்டிக்கொண்டுவர வெள்ளிக்குடிக்குப் போய்விட்டார். ஞானம்பாளும், சுந்தரமய்யர் மனைவியுமே இருந்தார்கள்.

"நீங்கள் யாரோ தெரியவில்லை. என்னைக் கண்டுபிடித்துக்கொண்டு வந்தாரே, அவர் யார்? இப்பொழுது நான் எந்த ஊரில் இருக்கிறேன்?"

"அம்மா. உன் பெயர் ஞானம்பாளா? அப்படித்தான் சொன்னார் இந்தசுத்துக்காரரும். நாங்கள் இந்த ஊர்தான். காய்ச்சலாய்ப்படுத்துக்

கொண்டிருக்கிறனே அவன் என் மருமான். அவன் மாமாவும் அவனும் குற்றம், கொலை முதலியவைகளைக் கண்டுபிடிக்க எதாவது செய்துகொண்டிருப்பார்கள்."

"நீங்கள் இந்த ஊரா? நான் கேள்விப்பட்டதில்லையே."

"கேள்விப்பட்டிருக்கமாட்டாய். அநேகமாய் பட்டணத்தில்தான் இருப்போம்."

"பட்டணமா? என் அண்ணகூடச் சொன்ன ஞாபகமிருக்கிறது. பெரியவர் பெயர் சுந்தரமய்யரா?"

"ஆமாம், அந்தப்பெயர்தான். இவன்தான் கோபாலன்."

"அவருக்குக் காய்ச்சல் எப்படியிருக்கிறது?"

"எல்லாம் நாளைக்குச் சரியாய்ப் போய்விடும். சிரமத்தால் அவன் தேகம் அப்படியிருக்கிறது. நாளைக்கு எழுந்து நடமாடுவான்."

"அவர் அவ்வளவு சிரமப்படாவிட்டால் நான் இத்தனை காலம் பூமியிலிருக்கமாட்டேன். என்னைக் கட்டிக்கொண்டு வருவதற்கு முன்னல் கூட அந்தப்பாதகர்கள் என்னைக் கொல்வதாக இருந்தார்கள். அகஸ்மாத்தாய் தானே அவர் இவ்விஷயங்களைக் கண்டுகொண்டார். என் அதிர்ஷ்டம்தான். ஆனல் என் கல்—"

"கல்யாணம் நின்று போயிற்றென்று தான் சொல்லிக்கொண்டார்கள். பிள்ளை வீட்டார் கோபித்துக்கொண்டு போய்விட்டார்களாம். மாப்பிள்ளை தான் உன் தமையனுடன் சண்டை செய்துவிட்டுப் போனாராம்."

ஞானம்பாள் சிறிது நேரம் யோசித்துப்பார்த்தாள். "தன்னை மிகவும், விரும்பினதாகச் சொன்னவர் தன்னைக்கலியாணம் செய்ய இஷ்டப்படாமல் போனர். அவ்வளவு சீக்கிரம் எப்படியவர் மனம் மாறியது?" என்று எண்ணினாள். பின்பு "என் சண்டைபோட்டார்களோ?" என்று வினவினாள்.

"என்னவோ சொல்லிக்கொண்டார்கள். நீ பெரியவளாய் விட்டதாகவும், அதனல் உன்னை மறைத்து வைத்துக்கொண்டு இல்லை காணமற் போய்விட்டாய்; யாரோ உன் நகைகளைத் திருடுவதற்காக உன்னைத் தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள் என்று உன் தகப்பனர் சொன்னதாகவும் குற்றம் கூறி சண்டை பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள்."

"ஆ! உலகமே இப்படியிருக்கிறது. உள்ளதை உள்ளபடி அறிகிறதில்லை. நான் பட்ட கஷ்டம் எனக்குத் தெரியும். என்னுயிரே போகிறதாயிருந்தது. அவர்களுக்கென்ன? எப்படி வேண்டுமென்றாலும்

சொல்லுவார்கள். இனி அதைப்பற்றி யோசிப்பதில் பிரயோஜனம் என்ன?''

அவர்கள் சம்பாஷணை குடும்ப யோக க்ஷேமங்களைப்பற்றி மாறியது. சிறிது நேரம் சென்றதும், வெளியில் ஏதோ சத்தம் கேட்டது. என்ன வென்று பார்க்க எழுந்தார்கள். சுந்தரமய்யரும் சாம்பசிவய்யரும் பேசிக் கொள்ளும் சத்தமாயிருந்தது. விளக்கையெடுத்துக்கொண்டு வெளியில் வந்தார்கள். அதற்குள் சுந்தரமய்யரும் சங்கரனும் இன்னம் இரண்டு வெள்ளிக்குடியிலுள்ள சாம்பசிவய்யருடைய சிநேகிதர்களும் சூழ்ந்து வர சாம்பசிவய்யர் வெகு வேகமாய் நடந்து வந்தார். இரண்டு காவற்காரர் கள் சுளுந்தும் 'லாந்தலும்' கொண்டு வந்தார்கள்.

சுந்தரமய்யரும் சாம்பசிவய்யரும் வேகமாய் வீட்டுக்குள் நுழைந்தார் கள். சாம்பசிவய்யர் தன் பெண் நின்றுகொண்டு இருப்பதைப்பார்த்தார். உடனே ''ஞானம்பாள் தப்பி வந்தாயா?'' என்று கத்திக்கொண்டே அவளை வாரிக்கட்டிழுவி முத்தமிட்டுக் கண்ணீர் விட்டார். அவளும் ''அப்பா'' என்று சொல்லித் தன் தந்தையைத் தேற்றினாள்.

''உன்னைக் கண்டேனே, ஸ்வாமி கிருபை தான். உன்னை எப்படிக் கொண்டுபோனார்களோ? உன்னை எந்த முள்ளும் கல்லிலேயும் கூட்டிக் கொண்டு போனார்களோ? உன்னை என்ன தொந்தரவு செய்தார்களோ?''

''அதெல்லாம் ஒன்றுமில்லையப்பா. எனக்கு ஒரு கஷ்டமும் இல்லை. நீங்கள் என் மனவருத்தமடைகிறீர்கள்? நான் திரும்பி வந்த பிறபாடு கூடவா உங்களுக்குத் துக்கம்? சந்தோஷமல்லவா படவேண்டும்? துக்கப் படலாமா?''

இவ்விதம் தம் பெண் சொல்லவே சாம்பசிவய்யர் தமது துக்கத்தை மாற்றி அவளை அழைத்துக்கொண்டு உள்ளே போய் ஓர் பலகையில் உட் கார்ந்தார். சுந்தரமய்யரும் அவர் பக்கம் உட்கார்ந்தார். சங்கரனும் மற் றவர்களும் நின்று கொண்டிருந்தார்கள்.

''நீங்கள் எனக்குப் பெரிய உபகாரம் செய்திருக்கிறீர்கள். அது எப் படிப்பட்டது என்று சொல்லக்கூடியதல்ல. எனக்கு என் பெண்ணைத் திருப்பிக்கொடுத்தீர்கள். அவளுக்கு உயிரைக்கொடுத்தீர்கள். உயிரை ரக்ஷிப்பதற்குச்சமானமாக எந்த கருமமாவது சிலாக்கியமானது உண்டா?''

''அப்படியெல்லாம் ஒன்றும் பெரிய காரியம் செய்துவிடவில்லை. ஏதோ தற்செயலாய் நேர்ந்தது. நம்ம பையன் காதுக்கெட்டிற்று. அப் பொழுதே தடுத்திருக்கலாம். அவன் மடையன். சொல்லவில்லை. உங் களுக்குச் சிரமம். கலியாணம் நின்று கூடப்போய்விட்டது.''

"அவர்கள் கிடக்கிறார்கள். கலியாணம் நின்று போனால் என்ன? போனது ரொம்ப சௌகரியந்தான். அவர்கள் அயோக்கியர்கள். பின்னென்ன? என் பெண் போன இடம் தெரியாமல் தவிக்கிறேன். யார் தூக்கிக் கொண்டு போனார்களோ என்று தவிக்கிறேன். எரிகிற புண்ணில் கொள்ளி வைத்தாற்போல் குற்றம் சாட்டுகிறார்கள். நாம் பெண்ணை மறைத்து வைத்திருக்கிறோமாம். என்ன குறும்புத்தனம். நாளைக்கே போய் எத்தனையோ வரன் கொண்டு வந்து விடுகிறேன். என்ன பிரமாதமா?"

"பிரமாதம் என்ன? அதுவும் உங்களுக்குக் கிடைப்பது கஷ்டமா?"

"உங்கள் மருமான் எங்கே?"

"அவனுக்குக் காய்ச்சல். அலைந்தான். ராத்திரி தூக்கமில்லை. சதா ஏதாவது யோசனை. ஆனால் நாளைக்கு சரியாகப்போகும்."

"எங்கிருக்கிறான்?"

"படுத்துக்கொண்டிருக்கிறான். நல்ல தூக்கம். ரொம்ப சிரமம்."

"சரிதான். என்னவோ, என்னைக் காப்பாற்றினீர்கள். இவள் தாயார் வருத்தப்பட்டுக்கொண்டிருப்பாள். போகவேண்டும். போய்விட்டு வருகிறேன்."

சாம்பசிவய்யரும் அவருடைய பெண்ணும் பையனும் மற்றவர்களும் புறப்பட்டு வெள்ளிக்குடிக்குப் போய்விட்டார்கள்.

"பாவம். அவர் ரொம்ப வருத்தப்பட்டுவிட்டார். ஒரே பெண். அருமையாக வளர்த்து வந்தார். அது—அவள் காணமற்போனது என்றால் வருத்தமாகத்தானே இருக்கும்" என்றார் சுந்தரமய்யர்.

"பெண்ணின் தாயாரும் என்ன வருத்தப்பட்டிருப்பாள்! அதோடு கூடக் கலியாணம் ஒன்று வந்து சேர்ந்தது. அதுவும் நின்று போயிற்று. வரன் வேறு தேடவேண்டும்."

"ஆமாம். கஷ்டமென்றால் அனுபவித்துத் தானே தீரவேண்டும். விதி யாரை விட்டது? கஷ்ட காலம்." என்றார் சுந்தரமய்யர்.

சாம்பசிவய்யருடைய பெண் காணமற் போய்த் திரும்பி அகப்பட்டு விட்டாள் என்ற சங்கதி வெகு சீக்கிரம் ஊரில் பரவியது. ஆண் பெண் குழந்தை பாலியர் வயோதிகர் எல்லோரும் பெண்ணைப் பார்க்கவந்தார்கள். அவ்வூர் பெரியமனிதர்களும் வந்திருந்தார்கள். அவ்விடம் முழுவதும் இரைச்சல் மயமாய் இருந்தது. ஒவ்வொருவரும் தங்கள் மனத்தில் தோன்றியபடி யெல்லாம் வாழ்த்தலானார்கள்.

"பெண் மிகவும் இளைத்துவிட்டாள். திருடர்கள் சோறு போட்டிருப்பார்களா? போட்டாலும் அதை சாப்பிடலாமா?" "என்ன கஷ்டப்பட்டிருப்பாள்! பாவம்! சிறு குழந்தை!" "முதல் முதல் கலியாணம் செய்கிறபோது இப்படியா வரவேண்டும்?" "அவர்கள் சொன்ன சொல்லுக்கு அந்த சம்மந்தம் வேண்டாம்." "இப்பொழுதுதான் பெற்ற வயிற்றில் பால் ஊற்றினாற்போல் ஆயிற்று" "நகையெல்லாம் போயிருக்குமே?" "இல்லை இல்லை. எல்லாம் கிடைத்துவிட்டனவாம்." இவையும் இவை போல்வனவும் ஸ்திரீகள் சம்பாஷித்தார்கள்.

புருஷர்களும் பற்பலவிதமாய்ப் பேசலானார்கள். "என்னவோ போதாத வேளை, இப்படியாயிற்று" "நல்ல வேளையாய் பெண் ஒரு தொந்தரையுமடையாமல் திரும்பிவந்து சேர்ந்தாள்." "இவர் செய்த தான தருமம் எல்லாம் எங்கே போகும். இவருக்குப் பயன் படாமல் வேறு என்ன செய்ய இருக்கின்றன. அவர் செய்த அன்ன தானத்துக்குக் கணக்குவழக்குண்டா?" "ஆஹா! தர்மத்துக்கு மேலானது உண்டா? ராத்திரி பதினைந்து நாழிகை யென்றாலும் பசியென்றோர்க்கு இல்லையென மாட்டார். அவர் மனைவியும் மனம் கோணாமல், முகம் கடுக்காமல் கோபம் கொள்ளாமல் அன்னம் போட்டாள். அதற்குப்பலன் வந்த கஷ்டம் சாமானியமாய்ப் போய்விட்டது." "தானாகத் தானே அவன் கண்டுபிடித்தானாம்" "ஆமாம். ஒருவரும் சொல்லவில்லை." ஒவ்வொருவரும் பெண்ணை வாழ்த்திச் சென்றார்கள்.

# XVI அந்த ஜீவனின் விலைதானென்ன?

மறுநாட்காலையில் கோபாலன் எப்போதும்போல சௌக்கியமாய் எழுந்திருந்தான். அவனுடைய மனோவிசாரத்தையும் தேக சிரமத்தையும் அவனுடைய தூக்கமபோக்கடித்துவிட்டது. தான் முந்தியநாள் போட்டுக் கொண்ட வேஷத்தைக்கலைத்துவிட்டு பழையபடி கோபாலனுனான். சுந்தரமய்யரும் கோபாலனும் முந்தியநாள் விஷயத்தைப் பேசிக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

" இந்த வேலைக்கு எதாவது நமக்குக்கிடைக்கும்." என்றார் சுந்திரமய்யர்.

" என்?"

" சாம்பசிவய்யர் நல்லவர். எதாவது நூறு ஐம்பது கொடுப்பார்."

"ஆனால் வாங்கக்கூடாது. பணத்திற்காக வேலை செய்யவில்லையே. பணம் வேண்டுமென்று முன்னால் பேசிக்கொள்ளவில்லையே"

"ஆனால் அவர்களாகக் கொடுத்தால்?"

" கொடுத்தாலென்ன? உங்களுடைய ஸ்நேகிதர். ஆஸ்தி நகை முதலியவையல்ல. அவருடைய பெண் காணமற்போனாள். அவளைக்கண்டு பிடித்துக் கொடுத்தால் அதற்குப் பணம் வாங்குகிறதா? மற்றவை எவையாயினும் போகட்டும். அவற்றிற்குப் பணம் வாங்கலாம். ஒரு ஜீவனுக்குப் பணம் வாங்கலாமா? அந்த ஜீவனின் விலைதானென்ன? அதில் எத்தனை பங்கு நமக்குக்கிடைக்கலாம்?"

" நான் வாங்கவேண்டுமென்று சொல்லவில்லை. உன்னுடைய அபிப்பிராயம் இன்னதென்று அறிவதற்காகக் கேட்டேன்."

" கேட்டால் சொல்லிவிடுங்கள், பணப்பேச்சு வேண்டாமென்று." ஆனால் அவன் மறுத்ததற்கு வேறு காரணமுமுண்டு. பின்னர் கூறுவோம். சுந்தரமய்யரும் "சரிதான்" என்று ஒப்புக்கொண்டார்.

அன்று பகலில் சுந்தரமய்யரும் கோபாலனும் சாம்பசிவய்யரால் அழைக்கப்பட்டு வெள்ளிக்குடிக்குப் போனார்கள். அவர்கள் ஊருக்குள் சென்றதும் சாமபசிவய்யர் அவர்களைக் கண்டு தம் வீட்டுக்கு அழைத்துப் போய் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தார். சங்கரன் வீட்டின் ஓர் அறையிலிருந்து வெற்றிலை பாக்குக் கொண்டுவந்துவைத்தான்.

"கோபாலன் இவ்வளவு சிரமப்பட்டு ஞானம்பாளைக் கண்டு பிடித்த தற்கு நான் என்ன சரியான பிரதி பிரயோஜனம் செய்யப்போகிறேன். ஒரு ஜீவனுக்குப் பிரதி என்ன செய்யலாம்? ஏதோ நம்முடைய சக்தியா னுஸாரம் செய்யலாம். ஏதோ குறைவாயிருந்தாலும்—"

அவர்—(சாம்பசிவய்யர்) வெற்றிலைப்பாக்கைத் தட்டில் வைத்து அதில் சில நோட்டுகளையும் இரண்டு பவுனையும் வைத்து தட்டை சுந்தர மய்யர் முன் நீட்டினார்.

"பணமா? கூடாது. வேண்டாம். இந்த விஷயத்தில் பணம் என் கிற பேச்சே கூடாது. நாம் இருக்கிற ஸ்நேகம் என்ன? உங்களுக்கு ஓர் உபகாரம் செய்யாவிட்டால் நான் இருந்து என்ன இல்லாமல் என்ன? எதற்குப் பணம் வாங்குகிறது, எதற்கு வாங்கக்கூடாது என்பது இல்லையா?"

"என்ன நீங்கள் சொல்லுவது வேடிக்கையாக இருக்கிறதே; இதற் காக நாங்கள் கொடுக்காமலிருக்கிறதா? நாங்கள் உங்களிடத்தில் ஒரு பிரயோஜனம் அடைந்து அதைக் காட்டிக்கொள்ளாவிட்டால்—"

"இப்படித்தான் காட்டவேண்டுமா? அதுவும் இந்த சந்தர்ப் பத்திலா?" சுந்தரமய்யர் தன் மருமானுக்குச் சாடை காட்டினார்.

"நான் முதலில் பணம் வேண்டுமென்று பேசிக்கொண்டாலொழிய பணம் வாங்குகிறதில்லை."

"எப்படியும் நீபட்ட சிரமத்துக்கு ஏதாவது நாங்கள் செய்யா விட்டால்—"

"சிரமம் எது? சென்னைப்பட்டணத்தை விட்டு இங்கு வந்தேன். பொழுது போகவில்லை. அலைந்துகொண்டிருக்கும்போது இந்த விஷயங் கள் கொஞ்சம் தெரிந்தன. இவைகளைப்பற்றி ஆராய்வோம் என்று நானா கவே சிரமம்தோன்றாமல் சந்தோஷமாகவே பிரவேசித்தேன்."

"சிரமம் இல்லாமலா? உனக்கு நேற்றுக் காய்ச்சல் வந்ததே."

"அதெல்லாம் என்ன. மனம் கொஞ்சம் யோசனையாய் இருந்தாலே போதும். ஏதாவது உடம்புக்கு வரும் சகஜம்தானே."

சாம்பசிவய்யர் என்ன சொல்லியும் கேட்கவில்லை. ஒரே பிடிவாத மாய் இருந்தான் கோபாலன். சாம்பசிவய்யர் சுந்தரமய்யரைத் தனியாய் கூட்டிக்கொண்டுபோய் தன் வசப்படுத்தப் பார்த்தார். அப்படியும் ஒன்றும் முடியவில்லை.

"இன்று இராத்திரி இங்கு சாப்பாடு வைத்துக்கொள்ளலாம். அடே, யாரவன்? நல்லான்கோட்டைக்குப்போய் சுந்தரமய்யர் சாப்பிட வரவில்

லையாம் என்று சொல்லிவிடு. என் வீணை காத்துக்கொண்டிருக்க வேண்டும் வீட்டில்?" என்றார் சாம்பசிவய்யர்.

"எனக்கு சற்று உடம்பு—" என்று கோபாலன் சொல்லத் தொடங்கினான்.

"சரி, இதற்குக்கூடவா? என்ன அவ்வளவு கண்டிப்பாய் இருக்கிறாய்?"

"அதற்கல்ல. எனக்கு உடம்பு சரிப்படவில்லை."

சாம்பசிவய்யர் சுந்தரமய்யரைப்பார்த்தார். அவருக்குக்காரணம் தெரிந்தது. உடனே அவர் கோபாலனைப்பார்த்து "அப்படியெல்லாம்சொல்லாதே. சாம்பசிவய்யரை உனக்குத்தெரியாது. நமக்கு ரொம்பவேண்டியவர். அவர் வீட்டில் நாம் சங்கோஜப்படக்கூடாது. தெரியாதவர்களல்லவா அப்படிச்சொல்லுவார்கள்?" என்றார்

கோபாலன் மெதுவாய் "சரி" என்றான்.

# XVII மனம்.

ஞானாம்பாள் கோபாலனைப்பார்த்ததும் ஆச்சரியமடைந்தாள். முதனாள் பார்த்த கோபலனல்லவே. வேறுயாரோ ஒரு சுந்தரபுருஷன் உட்கார்ந்திருந்தான். அவன்தான் கோபாலன். ஆக்ஷேபமேயில்லை. அவன்மாமாவும் அப்படித்தான் சொன்னார். சாம்பசிவய்யரும் அப்படித்தான் எண்ணிப்பேசினார். அப்படியானால் முதனாள் தன்னைக்காப்பாற்றியவர் யார்? இவன்தான். அவர்கள் பேசிகொண்டிருக்கும்போது அவள் ஒருபக்கமாயிருந்து கேட்கலாமென்று எண்ணி வந்தாள். அவனைப்பாத்தாள். பார்த்ததும்—ஏதோ ஒருசக்தி அவள் மனத்தையெல்லாம் கொள்ளைகொண்டு போனதுபோலிருந்தது. அவனையேபார்த்தாள். அவன் அழகையெல்லாம் ஒருதடவை தன் மனத்தில் வருணித்தாள். அவன் உண்மையில் அழகுள்ளவனா? அல்லது தன்னைக்காப்பாற்றியதால் அவ்விதம் நினைக்கநேரிடுகிறதா? என்று எண்ணினாள்.

அவனை மறைவிலிருந்து பார்த்துக்கொண்டிருந்தாள். பார்க்கப்பார்க்க அவள் மனம் தன்னிடமில்லாமல் அவன்மேல் சென்றது. இரவிலேயே கோபாலனும் அவன் மாமனும் நல்லான்கோட்டைக்குத் திரும்பிப் போய்விட்டார்கள். அவர்கள் போகும்போதும் அவர்களைப் பார்த்துக்கொண்டே நின்றுகொண்டிருந்தாள். மறுநாள் பகலில், இரண்டுதோழிகளும் மாடியில் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"என்னைக்காப்பாற்றினாரோ அவர் மேல் என்னவோ எனக்கு ஒரு நல்ல எண்ணம் உண்டாகிறது".

"அப்படியெல்லாம் எண்ணாதே. யாரைக்கண்டாலும் நலலெண்ணம் உண்டாகலாமா? ஸ்திரீகள் தங்கள் மனத்தையடக்கவேண்டாமா?"

"என்னவோ அவர்மேல் எனக்கு ஆசையே இருக்கிறது என்னலாம். அவர்கூட என்னைக்கடைக்கண்ணால்—என்—இரண்டு மூன்றுதடவைபார்த்தார்".

"சும்மா திரும்பியிருப்பார். உன்னைப்பார்க்கவேண்டுமென்று பார்த்திருக்கமாட்டார். தற்செயலாய் உன்னைப்பார்த்திருப்பார். அப்படியே இருந்தாலும் நீ அவரைக்கண்டு ஆசைப்படலாமோ? அவருக்குக்கலியாணமாயிருந்தால் என்னசெய்வாய்?"

"அதுதான் இல்லை. அவர் சாப்பிடும்போது பார்த்தேன். பூணூல் ஒன்றுதான் இருந்தது."

"நிச்சயமாய் பார்த்தாயா?"

"நன்றாய்ப்பார்த்தேன்."

"அப்படியிருந்தாலும் நீ ஒருவனைப்பார்த்து காதல் கொள்ளலாமா? உன் அந்தஸ்தென்ன? செல்வமென்ன? எல்லாவற்றையும் கவனிக்க வேண்டாமா? அவர் ஏழையல்லவா?"

"ஏழையாயிருந்தாலென்ன?"

"அவர் என்ன ஜாதியோ?"

"அந்த சந்தேகமும் போய்விட்டது. அவர் நம்முடையஜாதிதான்."

"இருந்தாலும் திடீரென்று யோசிக்காமல் செய்யக்கூடாது."

"யோசிக்காமல் காதல் கொள்ளக்கூடாதோ? என்னயோசனையோ? இவர் யோக்கியர் அயோக்கியர் என்று அறியவேணுமோ? அப்பொழுது கலியாணம் பண்ணிக்கொள்வதாக வந்தாரே அவர் ரொம்பயோக்கியராகத்தான் முதலில் இருந்தார். அப்புறம் எங்கள்மேல் இல்லாததையெல்லாம் சொல்லிவிட்டுப் போகவில்லையா? இவரைப்பார். எனக்காகப்பணம் கூட வாங்கமாட்டேன் என்றார். என்ன கட்டாயப்படுத்தியும் சரிப்படவில்லை."

"அவர் நல்லவராக யிருக்கலாம். அவர் அழகுள்ளவர்தான். இருந்தாலும் திடீரென்று ஆசைகொள்ளலாமா?"

"அவர் முகத்தை நீ பார்த்ததில்லையே. ரொம்ப அழகு. கண்கள் குளிர்ந்தவையாய் அசடுதட்டாமல் புத்திகூர்மையாயிருக்கின்றன. கண்ணழகு ஒன்றே போதுமே. அவர் என்னுடன் பேசத்தான் இல்லை."

"நீதான் பேசினரென்றாயே?"

"அப்பொழுது பேசினார். அப்பொழுது மாறுவேஷம் பூண்டு வேறு ஆளாகப் பேசினார். என்னைத்தூக்கிக் கொண்டுபோனார். இவ்வளவு அழகுள்ளவர் என்னைத் தூக்கிக்கொண்டுபோவார் என்று நான் நினைக்கவில்லை."

"அவரும் உன்னைப் பார்த்திருப்பார் அல்லவா?"

"பார்க்காமல் என்ன. எத்தனையோ தடவை பார்த்திருக்கிறார்."

"அப்படிப் பார்த்திருந்தால், உன்மேல் அவருக்காசையிருந்தால், உன்னிடம் சொல்லியிருக்கலாம் அல்லவா?"

"அவர் எப்படிச் சொல்லியிருப்பார். நாம் என்ன வெள்ளைக்காரர்களா? நீ என்னைக்கலியாணம் செய்துகொள்வாயா என்று கேட்க."

"அவரும் உன்மேல் ஆசை கொண்டிருக்கிறார் என்று உனக்கு எப்படித் தெரியும்."

"எப்படியா?" ஞானம்பாள் யோசனை செய்யலானாள். "அதை வேறு யாராவதுதான் அறியவேண்டும். சங்கரன் இருந்தால் ஒரு சமயம் அறிந்து சொல்லுவான்."

"அவனிடந்தான் எப்படிச் சொல்லுவாய்?"

"ஜாடையாய் கோபாலய்யர் யார் என்னவென்று கேட்டால், அடிக்கடி கேட்டால்; அவருக்கு என்னைக்கொடுத்தாலென்ன என்று எண்ணியவளைக் கேட்பான் அல்லது அப்பாவிடம் சொல்லுவான்."

"அப்படியானால் என்ன? நீ அவர்மேல் ஆசைகொண்டிருக்கிறது போல அவரும் ஆசைகொண்டிருக்கிறார் என்று அறிவதெப்படி?"

ஞானம்பாள் மறுபடியும் யோசித்தாள். யாரோ வருகிற சத்தம் கூட அவர்களுக்குத் தெரியவில்லை.

"கோபாலய்யர் என்னைக் குளிர்ந்த பார்வையுடன் சாப்பிட வந்தவன்றைக்கு என்னைப்பார்த்ததைக் கொண்டுதான் சொல்லுகிறேன். அவர் என்மேல் ஆசைகொண்டிருக்கிறார். அதனால்தான் நானும் அவர்மேல் ஆசைகொண்டிருக்கிறேன். வேறு எப்படி—"

தற்செயலாய்த் திரும்பினாள். அவள் தாயார் இவர்களிடம் வந்து கொண்டிருந்தாள். உடனே பேச்சை நிறுத்திவிட்டார்கள்.

"என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?"

"ஒன்றுமில்லை. வாசித்துக்கொண்டிருந்தோம். சற்றுப்பேசிக் கொண்டிருக்கிறோம்."

அவள் காரியமாய் வந்தவளாதலால் தனக்காகவேண்டியதைச் செய்துவிட்டுக் கீழே போய்விட்டாள்.

"நாம் பேசிக்கொண்டிருப்பதை அம்மா கேட்டாளோ?"

"கேட்டால்தானென்ன. உன்னுடைய மனத்தில் இருக்கிற எண்ணமெல்லாம் தெரிந்துகொள்ளுகிறாள். அது உனக்கு நல்லதுதானே."

"தெரிந்துகொண்டால் நல்லதுதான். ஆனால்பார், நாம்பேசிக்கொண்டிருக்கும்போதெல்லாம் ஏதாவது தடை வருகிறது?"

ஆம் தடைதான். என்னசெய்வது? தடைகள் நன்மைக்காகத்தான் உண்டாகின்றன. நன்மைகள் எப்படி நமக்கு நன்மையாகவிருக்கின்றனவோ அப்படியே தடைகளும் நன்மையாகவே இருக்கின்றன. தடையில்லாவிட்டால், இராமகிருஷ்ணன் ஞானம்பாளைக் கலியாணம் செய்திருப்பான். தடையில்லாவிட்டால், கொலைபாதகர்களான கருப்பனும் சங்

கிலியும் ஓடிப்போயிருப்பார்கள். தடையில்லாவிட்டால், ஞானம்பாள் செத்துப்போயிருப்பாள். தடையில்லாவிட்டால், வீரம்மாள் இன்னும் உடந்தையாயிருப்பாள். தடையில்லாவிட்டால், சாம்பசிவய்யர் பணம் கொடுத்திருப்பார். கோபாலனும் பணம் வாங்கியிருப்பான். தடையில்லாவிட்டால், தடையில்லாவிட்டால், அப்புறம்—:

தடையிருப்பது எவ்வளவு அனுகூலம்? அதையார் அறிகிறார்கள்? தடையில்லாவிட்டால், ஞானம்பாள் தன்னுடைய எண்ணங்களையெல்லாம் தாறுமாறாக உடைத்திருப்பாள். தடையில்லாவிட்டால் பிராமணப் பெண் என்பதை மறந்து தனது காதலை வெட்கமின்றி கோபாலனிடம் கூறியிருப்பாள். தடையில்லாவிட்டால், அல்லது வேஷமென்கிற தடையில்லாவிட்டால் கோபாலனது உண்மையான உருவத்தில் மயங்கி அவன் நற்குணத்தால் மனம் கலங்கி—; அப்புறம் என்ன நடந்திருக்குமோ?

தடையினால் தான் நமக்கு விஷயங்களில் ருசி உண்டாகிறது. தடையென்பது தடுத்தலையன்றி கெட்ட சகுனம் அல்ல.

அது ஒரு நல்ல சமயத்தில் எற்பட்ட தடை தான். சரியான நேரத்தில் எற்பட்டது தான். ஒரு நிமிஷமாவது முன்பின் இருந்திருக்கக் கூடாது. ஒரு நிமிஷம் முன்னாகவிருந்தால் ஞானம்பாளின் மனம் வெளியாக்கப்பட்டிருக்காது. ஒரு நிமிஷம் பின்னாகவிருந்தால், நல்ல பெண்ணின் லக்ஷணங்கள் குறைவுறும். ஆம், தடையின் மகிமையே மகிமை. அதன் சக்தியும் அதனால் உண்டாகும் விளைவும் அளவிடக்கூடாதன.

பிற்பாடு சம்பாஷணை நன்றாக நடக்கவில்லை. அது தடைபட்டுப்போனது தான். இருவரும் கீழே இறங்கினார்கள். "அம்மா நான் சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்திருப்பாளானால்—" இந்த வாக்கியந்தான் ஞானம்பாள் கடைசியாகச்சொல்லிப்பிரிந்தது.

## XVIII கிராம சமாசாரப் பத்திரிகை.

கிராமசமாசாரப்பத்திரிகை விசித்திரமான பத்திரிகை. அவைகள் சமாசார பத்திரிகைகளே. இவற்றைப் பற்றிக் கேள்விப்பட்டதில்லையே என்று மலைக்காதீர்கள். எல்லோரும் அதன் உபயோகத்தையறிந்திருக்கிறீர்கள். உங்களில் பலரும் அதை உபயோகிக்கிறீர்கள். அவை மிகவும் பெருமைவாய்ந்த பத்திரிகைகள். அவைகள் ஆற்றங்கரையிலும், குளக்கரையிலும், அல்லது இவற்றிற்குப் போகும் வழிகளிலும் கூடும் ஸ்திரீகள் மகாஜனசபையால் வெளிப்படுத்தப்படும். அதற்காக அச்சாபீஸாவது கடிதமாவது கிடையாது. ஆதலால் இதற்கு சந்தாவேயில்லை. அதை வாசிக்கப்பிரியப்படுகிறீர்களா? அது தெய்வத்தன்மை பொருந்தியது. மாமியாரிடம் கஷ்டப்படும் நாட்டுப்பெண்ணின் துக்கசமாசாரம் ஓரிடத்தில் வெளி வரும். அது எல்லாவிடங்களுக்கும் பரவும். ஒருவனுடைய தோட்டத்தில் மற்றொருவன் போய் ஒன்றைத்திருடுவான். உடனே அது ஊரெல்லாம் பரவும். ஒரு வீட்டில் அகமுடையான் பெண்சாதி இருவரும் சண்டை செய்வார்கள். அந்த வாக்குவாதம்—(பொதுவாய் இச்சண்டைகள் சண்டையாக மதிக்கப்படுவதில்லை)—ஒரு அக்ஷரம் கூடப்பிசகாமல் வெளிவரும். நாத்தனார் தன் உடன்பிறந்தான் மனைவியைப்பற்றி ஓரிடத்தில் குறைக்கூறிகொண்டிருப்பாள். அச்செய்தியைக் கொண்டபத்திரிகைகள் பல ஒருங்கே சேர்த்து அவ்வுடன்பிறந்தான் மனைவியிடம் போய்ச்சேரும். கிராம சமாசாரப்பத்திரிகைகள் மிகவும் உபயோகமான பத்திரிகைகளே.

அன்றையதினம் ஞானம்பாள் சொன்ன விஷயங்களையெல்லாம் மீனாக்ஷி தன் தாயாரிடம் சொன்னாள். சொல்லும்போது கெட்ட எண்ணத்துடன் சொல்லவில்லை. ஊரில் உள்ளோர் எல்லாரும் இதைப்பற்றி வம்பு பேசவேண்டுமென்று சொல்லவில்லை. மீனாக்ஷியின் தாயாரிடம் அச்செய்தியை ஒருவரிடமும் சொல்லக்கூடாதென்று கண்டித்திருந்தாள். மீனாக்ஷியின் தாயார் எல்லா சங்கதியையும் சொல்லிவிடவில்லை. வேறு விதமாகச் சொன்னாள். "பாவம், கலியாணம் நின்றுபோயிற்று. எத்தனை தடவை வரன் தேடப்போகிறது? என்ன, கலியாணத்துக்காக சேகரித்துவைத்த சாமான்களெல்லாம் வீணாகவா போகிறது? பெரிய பணக்காரர்களுக்கு வரன் வேண்டுமென்றால் பணக்கார இடத்தில்தான்

பார்க்கவேணும். ஏழையிலே கொடுக்கமாட்டார்கள். கொடுப்பதாயிருந்தால் சிவனே யென்று ஞானம்பாளைத் தேடிக்கொண்டு வந்தானே அந்தப் பிள்ளையாண்டானுக்குக் கொடுத்துவிடலாம். என்னவென்றாலும் அவளுக்கு அவன்மேல் ஆசையிருக்குமல்லவா? 'தன்னைக் காப்பாற்றினானென்கிற விசுவாசம் கொஞ்சம்கூட இருக்காதா? அவனுக்குத்தானென்ன? இவள்மேல் இஷ்டமிருக்காதா? ஆனால் அவன் ஏழை."

இதை அவள் நல்ல எண்ணத்துடன்தான் சொன்னாள். ஊரு முழுவதும் இதைப்பற்றி வம்பு பேசவேண்டுமென்று எண்ணிச்சொல்லவில்லை. ஒரு சமாசாரம் கிடைத்தது. கேட்டவள் கடமை யென்ன? தனக்குத் தெரிந்ததை பிறருக்குத் தீங்குண்டாகாமல் பிறரிடம் சொல்லவேண்டியது. சொல்லவேண்டியது சொல்லிவிட்டாள். சமாசாரப் பத்திரிகை நடத்துவோரின் கடமை அதை வெளிப்படுத்தவேண்டியது. கேட்டவள் அக்கடமையையறிந்தவள்தான். உடனே ஆலோசித்தாள். "மீனாக்ஷியினிடம் ஞானம்பாள் ஏதாவது சொல்லியிருப்பாள். அதை மீனாக்ஷி தன் தாயாரிடம் சொல்லியிருப்பாள். என்ன தெரிகிறது? ஞானம்பாள் கோபாலன்மேல் ஆசைகொண்டு கலியாணம் பண்ணிக்கொள்ள விருப்பம் கொண்டிருக்கிறாள். இப்படித்தான் இருக்கவேணடும்." இதை வெளிப்படுத்தினாள். ஆனால் கிராம சமாசாரப்பத்திரிகைக்கும் பட்டணத்து சமாசாரப்பத்திரிகைக்கும் கொஞ்சம் வித்தியாசமிருக்கிறது. கிராமத்தில் ஒவ்வொருவரும் சமாசாரத்தை சீர்ப்படுத்தலாம். ஒவ்வொருவர் கையாகப் பத்திரிகை மாறியது. கடைசியில் ஒரு வைதீகப் பிராமணரிடம் போய்ச் சேர்ந்தது. "நல்லான் கோட்டை சுந்தரமய்யர் மருமான் கோபாலனுக்கு ஞானம்பாளைக் கொடுப்பதாக உத்தேசித்திருக்கிறார்களாம். ஜாதகம் பார்த்து சரியாயிருக்கிறதென்று சொன்னார்களாம். இன்னம் நாலைந்து நாளில் நடக்குமாம்." இதைவிட வைதீகப் பிராமணனுக்கு வேறென்ன வேண்டும்? கண்டிப்பாய் தக்ஷிணை கிடைக்கும். நல்ல சாப்பாடும் உண்டு. மேலும் அவர் சாம்பசிவய்யருக்குத் தெரிந்தவர். மந்திர வியவகாரங்களில் தானும் ஒரு பிராமணனாக இருந்தால்—. அதற்குப்பிறகு மனுஷ்யனுக்கு விசாரமேது? அங்கேயே ஸாயுஜ்ய பதவியடைந்துவிடலாம்! ஆனால் சனியன் வேற்றூரில் காரியமிருக்கிறது. அங்கே போயிருக்கும்போது கலியாணம் நடந்துவிட்டால், மறுபடியும் அந்த திவ்யபதவியை அடைவதற்கு என்ன பகீரதப்பிரயத்தனம் செய்யவேண்டிவரும்.!

அவர் மிகயோசனையுடன் ஆற்றுக்குப்போனார். அவர்கொண்ட யோசனையின் மகத்துவத்தால் அவர் காலில் தைத்தமுள், இவரறிந்து காலைத்

தூக்குமுன், நன்றாகப் பாய்ந்துவிட்டது. பாவம்! ஆனால் என்ன? பெரும் பதவியை அடைவதற்கு முன் எவ்வளவு கஷ்டம் நேரிடும்? அவைகள் சகஜந்தானே. மிகுந்த சிரமத்துடன் முள்ளையெடுத்தார். அருகி லிருந்த எருக்கன்செடியிலிருந்த பாலை முள் தைத்தவிடத்தில் தடவினார். அவர் இனி நன்றாய் நடக்கலானார். அப்பொழுது சாயங்கால வேளை. சூரியன் இன்னம் கால் மணி நேரம் சென்றால் கண்ணுக்குத்தெரியா மல் மறைந்துபோவான். அவனோடு அவனைவிட்டுப்பிரியாத வெளிச் சமும் போய்விடும்.

"சாம்பசிவய்யர்வாளா? ஸந்தியாவந்தனம் பண்ணியாச்சோ?" வைதீகர் பேசும்போதே தான் ஒரு பெரிய மனிதர் என்றும் தனக்குச் சமத்துவமான ஒரு பெரிய மனிதரிடம் பேசுவதாகவும் நினைத்துக்கொண் டார். இது அற்பரின் குணம். அற்பர்கள் பெரிய மனிதரிடத்தில் இரண்டொரு நாள் பழகிவிட்டால் (பழக்கமாவது, அவருடைய சாமான்க ளைத்தூக்குதல்; அவர் காலாலிட்ட வேலையைத் தலையால் செய்தல்; உண்மையில் அவருக்கு வேலைக்காரனாய் இருத்தல். இப்படி அவரிடம் பழ கிவிட்டால்) போதும். தானே எல்லாக்காரியங்களையும் செய்ததாயும் தானே அவருக்கு யோசனை சொல்லுவதாயும் தான் சொல்லும் யோசனை ப்படியெல்லாம் அவர் நடப்பதாயும் வெளியில் பெருமை பாராட்டிக்கொள் வார். ஆகவே இவ்விடத்திலும் சாஸ்திரியார் தன்னைத்தான் பெருமையாக நினைத்தது பிசகல்ல. அவர் அவ்விதம் நினைக்காவிட்டால்தான் பிசகு.

"ஆம் பண்ணியாச்சு. ஜெபம் பண்ணவேண்டும்." என்றார் சாம்ப சிவய்யர். அவர் வைதீகரிடத்திலே பேசினால் தன் அந்தஸ்து குறையுமா உயருமா அல்லது அப்படியே இருக்குமா என்று கவனிக்கவில்லை. அவ்வைதீகரை லக்ஷியம் பண்ணியாவது பண்ணாமலாவது சொல்லவில்லை. எவரிடமும் பேசுவதுபோலவே பேசினார்.

"கோடைகாலத்தினுடைய தாபம் ஆரம்பிச்சுட்டாப்பிலேயிருக்கு. இன்னம் போகப்போகக் கஷ்டமாயிருக்குமே. ஜலம் கூட வத்திப் போகும்."

"ஆமா"

சாம்பசிவய்யர் ஜபம் செய்துகொண்டிருந்தார். வைதீகர் ஜலத்தில் இறங்கி ஸந்தியாவந்தனம் செய்யலானார். செய்யும்போதே அடிக்கடி அவரைத்திரும்பிப்பார்த்தார். அன்றையதினம் சந்தியாவந்தனம் மெயில் வண்டிதான். ஜபமும் வேகமாய் ஓடிற்று. சாம்பசிவய்யர் முடிக்கும் போது வைதீகரும் ஜபத்தை முடித்துவிட்டால் இருவரும் பேசிக்கொண்

டுபோகலாம். அப்பொழுது கலியாணசமாசாரத்தைக் கேட்டுவிடலாம்.

சாம்பசிவய்யர் ஜபத்தைவிட்டெழுந்த சில நிமிஷங்களுக்கெல்லாம் வைதீகர் இராமசாஸ்திரிகளும் எழுந்துவிட்டார். சாம்பசிவய்யரும் இராமசாஸ்திரிகளும்சேர்ந்து கரையேறினார்கள்.

"பகவானுடைய காரியங்கள் நமக்கு எப்படித்தெரிகிறது? அவர் கபடநாடகஸூத்திரதாரியாய் இருக்கிறார். இல்லே, உங்கள் பெண்தான் காணமல் போவானேன்? அப்புறம் அகப்பட்டுவிட்டாள். கலியாணம் நின்றுபோயிற்று. இப்பொழுது நடந்து விடுகிறது. இல்லே, பகவானுடைய காரியங்கள் இவ்வளவு ரகசியம்."

"ஹ்ம்ம்" ஆனல் அவர் ஒன்றும் பதில்சொல்லவில்லே.

"எல்லாம் நம்முடைய பிரயோசனத்துக்காகத்தான் நடக்கின்றன. இப்படி முடிந்திருக்கிறபோது வேறுவிதமாய் நடக்குமா?"

சாம்பசிவய்யர் உடனே திரும்பி சாஸ்திரிகள் முகத்தைப்பார்த்தார். அப்பார்வை சாஸ்திரிகள் சொன்னவிஷயம் இன்னதென்று விளங்கவில்லேயென்றும் அதைவிளக்கிச்சொல்லவேண்டும் என்றும் காட்டியது. சாஸ்திரிகள் இதையறியாதவர் அல்ல.

"இல்லே, ஞானம்பாளே சுந்தரமய்யர் மருமானுக்கு நீங்கள் கொடுக்கப்போகிறதாக சொன்னார்கள். இரண்டுபேரும் ரொம்ப அன்போடு இருக்கிறார்களாம். இன்னம் ஒருவாரத்தில் கலியாணமல்லவா? அதான்யாரோ சொல்லிக்கொண்டார்கள். என்னிக்கோ?"

"கலியாணமா? இல்லேயே. கோபாலனுக்குக் கொடுப்பதாகப்பிரஸ்தாபம் கூடவில்லேயே."

"நான் கூடநம்பவில்லே. அய்யர்வாள் அந்தஸ்தென்ன. அவர்கள் யோக்கியதையென்ன. அதெல்லாம் நம்பக்கூடுமா? நான்கூடநம்பவில்லே. அதனால்தான் தங்களேக்கேட்க ஆரம்பித்தேன்."

"அப்படியொன்றுமில்லேயே. யார்சொன்னார்கள்?"

"யாரோ பேசிக்கொண்டிருந்தார்கள். ஞானம்பாளுக்கு அவன்மேல் ஆசையுண்டென்றும் அவனுக்கும் அவள்மேல் ஆசையுண்டென்றும் அதனாலே நீங்களும் சுந்தரமய்யருமாக கலியாணவிஷயமாய் ஏற்பாடு செய்தீர்கள் என்றும் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

"சரிதான். அப்படி ஒன்றுமில்லே."

இராமசாஸ்திரிகள் முகத்தில் அதிருப்திக்குறிகள் விளங்குவதைக் காணலாம். இவ்வளவுதூரம் எமர்றினதைவிட வேறு என்னவேண்டும்.? என்ன செய்வார்? மிகவும் துக்கப்பட்டார். தன்பெற்றோர் இருந்தபோ

தும் இவ்வளவு துக்கப்பட்டிருக்கமாட்டார். ஆனால் அவருடன்கூட வெகுதூரம் போகவேண்டியிருந்ததால் அவருடன் ஏதாவதுபேசவேண்டியது அவசியமாயிற்று.

"இந்தவருஷம் கலியாணம் நடக்குமோ"?

"ஸ்வாமிகிருபையிருந்தால் எல்லாம்நடக்கும்."

"ஏதாவது வரன் தேடியிருக்கிறீர்களோ?"

"இல்லை. ஒன்றையுங்காணோம்."

"சுந்தரமய்யர் மருமான் கோபாலன்?"

"இதுவரையில் எங்களுக்கு அவனைப்பற்றி யோசனையேயில்லை. அனேகமாய் இருக்காது"

இராமாசாஸ்திரிகள் பெரிய மனிதர் போலவே பற்பல பெரிய விவகாரங்களைப்பற்றி யவரிடம் பேசிக்கொண்டிருந்தார். சாம்பசிவய்யரும் தக்கபடி விடையளித்துக்கொண்டு வந்தார். சிறிதுநேரம் சென்றதும் சாம்பசிவய்யர் தமது வீட்டுக்கு வந்து தனிமையாய் வாயிற்றிண்ணையில் உட்கார்ந்து கொண்டார். அடிக்கடி கேள்விகள்கேட்கும் இராமாசாஸ்திரிகளும் வீட்டுக்குப்போய் விட்டார். அவரைத்தொந்தரை செய்வோர் ஒருவருமில்லை.

"இராமாசாஸ்திரிகள் சொல்லியவிஷயங்கள் வாஸ்தவமானவையா? அவர் பொய் சொல்லக்கூடியவரல்ல. யாராவது இதைப்பற்றி பிரஸ்தாபித்திருக்கவேண்டும். யார் இவ்விதம் கட்டிவிட்டிருக்கவேண்டும். ஒருக்கால் நமது மனைவி நம் உத்தரவைக் கேட்காமல் சொல்லியிருக்கிறாளோ. அல்லது அவ்விதம் ஞானம்பாளை கோபாலனுக்கு கொடுக்கலாம் என்று அபிப்பிராயங்கொண்டு அவ்வபிப்பிராயத்தை வெளியிட்டிருப்பாளோ. இல்லாவிட்டால் வேறு யார் சொல்லக்கூடியவர்கள். அப்படித்தான் இருக்கவேண்டும். அவளைக்கேட்போம்" என்று எண்ணி உள்ளே சென்று "ஏய், உன்னைத்தான், இங்கேவா." என்று தன் மனைவியைக் கூப்பிட்டார். அவர் மனைவியும் வந்து நின்றாள்.

"நம்ம ஞானம்பாளை சுந்தரமய்யர் மருமான்—அவன்தான் கோபாலன். ஞானம்பாளைத் தேடிப்பிடிக்கவில்லையா, அவன்தான். அவனுக்குக் கொடுக்கலாமென்று எண்ணுகிறேன். என்ன சொல்லுகிறாய்? உனக்குப் பிடித்திருக்கிறதா."

ஞானம்பாள் தூரத்தில் நின்றுகொண்டு கேட்டுக்கொண்டிருந்தாள். "என்னசொல்லுகிறது. படிப்பும் போதாது. மெட்ரிக்குலேஷன்தானே, ஆஸ்தியுமில்லை. என்னத்தை நான் சொல்லுகிறது?"

"அவன் மேல் ரொம்ப ஆசையாமே ஞானம்பாளுக்கு?"

"என்னவோ எனக்குத் தெரியாது"

"இல்லை. ஊரிலே யெல்லாரும் பேசிக்கொள்ளுகிறார்களாம். ராமா சாஸ்திரிகள்கூட சாயந்திரம் சொன்னார். நாம் கலியாணத்தைக்கூட நிச்சயம்பண்ணிவிட்டோமாம், கோபாலனுக்கும் ஞானம்பாளுக்கும். அவர் இரண்டு பேரும் ஒருத்தருக்கு ஒருத்தர் ரொம்ப நேசம் உண்டாம். ஊரெல்லாம் பேச்சாயிருக்கிறது. நீ ஏதாவது சொன்னாயோ என்று கேட்கலாம் என்று கேட்டேன்."

"நான் ஒன்றும் சொல்லவில்லையே."

"ஞானம்பாள் ஏதாவது சொன்னாளோ. ஞானம்பாள். இங்கே வா." ஞானம்பாள் வந்து தந்தையின் பக்கத்தில் நின்றாள்.

"உனக்கும் கோபாலனுக்கும் கலியாணமென்று சொல்லுகிறார்களே. உனக்குத்தெரியுமா?" என்றார் சாம்பசிவய்யர்.

"எனக்கொன்றும் தெரியாதே."

"ஒருவரிடமும் ஒன்றும் சொல்லவிலலையே?"

"இல்லை."

"சரி போகிறது. அவன்மேல் உனக்கு ஆசையுண்டென்று சொல்லுகிறார்களே. நிஜந்தானா? இல்லாவிட்டால் பொய்யா?" ஞானம்பாள் தலைகுனிந்துகொண்டு நின்றாள்.

"ஏண்டி, சொல்லேண்டி. என்ன ஸங்கோசம். எங்களிடத்தில்கூட" என்றாள் தாயார்.

"எல்லாம் இருக்கும். ஆசைஇல்லையெனறால் நன்றாய்இல்லையென்று சொல்லிவிடுவாள். இருக்கும். அதான் வாயை மூடிக்கொண்டு இருக்கிறாள்." இன்னம் ஞானம்பாள் ஒன்றும் பேசவில்லை. கடைசியில் அவளைப் போகச்சொல்லிவிட்டார்கள். அவளும் போய்விட்டாள்.

"இருக்கிற ஜாடையைப் பார்த்தால் அவன்மேல் ஆசைதானே."

"என்னவோ இருக்கும். அவன் இங்கு வந்தபோது அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்தாள். அப்போதே எனக்குத் தெரியும். என்னவோ சும்மாயிருந்துவிட்டேன். இல்லாவிட்டால்மீனாட்சியைக் கேட்டுச் சொல்லுகிறேன்."

"இருக்கட்டும். அப்படியே இருந்தால் அவனுக்கா கலியாணம் பண்ணிக் கொடுக்கிறது. அவன் ஏழை. படிப்பும் போதாது."

"அதுதான் யோஜனையாயிருக்கிறது. ஆனால் அவன் எப்படியும் சம்பாதிப்பான். படிப்பிலே என்ன இருக்கிறது? படித்தவர்களெல்லாம்

10ரூபாய்க்குத் தாளம் போடுகிறார்கள். படிக்காதவன் பெரிய உத்தியோகம் பண்ணவில்லையா? என்ன? கொடுக்கிறதானால் கொடுக்கலாம். அவனுக்கு அழகில்லையா? புத்திசாலித்தனம் இல்லையா? குணம் இல்லையா? என்ன சொல்லியும் மாட்டேனென்று சொல்லிவிட்டானே, பணம்கொடுத்தபோது. அப்பொழுதே யோசித்தேன். அவன் கலியாணம் பண்ணிக் கொள்ளத்தான் இந்தமாதிரி வேண்டாமென்று சொல்லியிருப்பான் என்று. உங்களுக்கு இஷ்டமிருந்தால் எனக்கு ஆக்ஷேபமில்லை''

''சரிதான் நாளைக்கு சுந்தரமய்யரைக்கண்டு பேசுகிறேன்.''

சாம்பசிவய்யர் யோசிக்க யோசிக்க வேறு வழி அவருக்குத் தோன்றவில்லை. ''கோபாலன் படிக்கவில்லை. ஆனால் புத்தி எப்பேர்ப்பட்டது? ஏழை; ஆனால் சம்பாதிக்கக்கூடியவன். ஒருவர்கீழ் வேலை செய்து அவர் சொன்னபடியெல்லாம் கேட்டுநடக்கவேண்டியவேலையல்ல. சுயேச்சையாய் நடக்கக்கூடியவேலை. ஆஸ்தியில்லை. நாமே ஏதாவது அவனுக்குகொடுத்தால்—.ஆனால் வாங்கிக்கொள்பவன் அல்ல. அன்றையதினம் என்ன சொல்லியும் பணத்தை வாங்கிக்கொள்ள மாட்டேனென்றான. மிகவும் பிடிவாதக்காரன். நியாயந்தானே. பணத்துக்காகவா அந்தக்காரியத்தில் பிரவேசித்தான்? இல்லை. அப்படியானால் பணம்வாங்குவதுபிசகுதானே? ஏழையாய் இருக்கிறவர்கள்கூட கஷ்டப்பட்டாவது பணம்கொடுக்கவருவார்கள். பிற்பாடு சிரமப்படுவார்கள். ஆகையால்தான் எல்லாருக்கும் ஒரேபதிலாய் வேண்டாமென்கிறான். அப்படியே நமதுமனைவிசொல்லுகிறபடி அவன் அவள்மேல் இஷ்டம் கொண்டான் என்றால், நியாயம் தானே. தான் காப்பாற்றிய பெண்ணல்லவா? அவன் தூக்கிக்கொண்டு வந்தானல்லவா? மனுஷ்யன்தானே. அதிலும் அவன் வயதுக்கு—''

சம்பாஷணையை எல்லாம் ஞானம்பாள் கேட்டுக்கொண்டிருந்தாள். அவளுக்கு இந்தப்பேச்சு எப்படி உண்டாயிற்றென்று தெரியாது. யார் இந்த சம்பாஷணையை ஆரம்பித்தார்களென்றும் தெரியாது. தன்னைப்பற்றியும் கோபாலனைப்பற்றியும் பேசியபோது அவளுக்குச் சந்தோஷந்தான். சுந்தரமய்யரைக்கண்டு பேசுகிறேன் என்றபோது தன் கலியாணம் நிச்சயமாய் நடக்கும் என்று எண்ணினாள். அவள் மனத்தில் வேறு விஷயம் ஒன்றும் சொல்லவில்லை. எப்பொழுதும் கோபாலனைப்பற்றிய நினைவுதான். நினைக்க நினைக்க அவன் அதிக அழகாய்த் தோன்றினான். தன் மனத்தால் அவனை ஸ்தோத்திரம்செய்தாள். அவனை வர்ணித்தாள். தன் போன்ற பாக்கியசாலி யொருவருமில்லையென்று எண்ணினாள். இவ்விதம் அவ்விரவு கழிந்தது.

# XIX வாலிபனுடைய காதல்

கோபாலன் தான் இதுவரையில் பிரவேசித்திருந்த காரியத்தின் சிரமத்தால் எங்கும் போகாமல் வீட்டிலேயே தங்கினான். தன்னுடைய தொழிலைப்பற்றி நினைக்க இஷ்டமேயில்லை. எவ்வளவு கஷ்டத்துடன் தன் மூளையைத் தொந்தரை செய்கிறது என்று எண்ணினான். ஞானம்பாள் விஷயமாக அவன் மனம் பாடுபட்டது இவ்வளவு அவ்வளவு என்பதல்ல. ஆகவே அவன் விடுமுறை கொண்டாடினான். அவன் வீட்டை விட்டசையவில்லை. தன்னுடைய சாய்மான நாற்காலியில் சாய்ந்து கொண்டு ஒன்றும் பேசாமலும் செய்யாமலும் படுத்துக்கொண்டிருப்பான். எவ்வளவு தன் மனத்தைச் சுத்தமாய் யாதொரு விசாரமும் யோசனையும் இல்லாமல் வைத்துக்கொள்ள பிரியப்பட்டானோ அவ்வளவுக்கு வேறு எண்ணங்கள் அவன் மனத்தில் குடிகொண்டன. அவைகளைத் துரத்த எண்ணங்கொண்டால் அவைகள் போவதில்லை. அவைகள் இன்னம் பலமாய் வேரூன்றிக்கொண்டன.

ஞானம்பாள் கோவிலுக்குப் போவாளென்றும் அங்கேபோய் அவள் பாதகர்கள்கையில் அகப்படுவாளென்றும் அறிந்தவுடன் அவன் தொழிலுக்கேற்ற கடமை அவளைக்காப்பாற்றவேண்டும் என்று எண்ணினான். இதைத்தவிர வேறுஎண்ணம் முதலில் அவன் மனத்தில் உதிக்கவில்லை. அவள் ஸ்தானத்தில் வேறு எவரேனும் இருந்தால் அவரும் காப்பாற்றப்பட்டிருப்பார். அவ்விதம் ஒரு பெண்ணைக் காப்பாற்றுவதால் அல்லது காப்பாற்ற முயலுவதால் என்னவிளையும் என்று நினைத்தவனல்ல. ஆனால் அவளைப் பார்த்தவுடன், அவளை ஆச்சர்யத்துடன் மனத்தில் எண்ணினான். அவளைத் தூக்கிக்கொண்டு போனபோதும் அவளது பேரழகையும் அவளது தேகத்தின் மென்மையையும் கண்டு ஆனந்தங்கொண்டான். அவளுடைய கலியாணம் நின்றுபோய், "அவள் கன்னிகையாக இருக்கிறாள்" என்பதையறிந்ததும் அவள் மனத்தில் வேறு எண்ணங்கள் புகுந்தன. இதுவரையவனிடமிருந்த எண்ணங்கள் எல்லாம் ஓடிவிட்டன. "அவளுடைய கலியாணம் தடைபட்டுவிட்டது. இன்னம் வேறு வரன் தேடவில்லை. ஆகையால்—எனக்கு இன்னம் கலியாணம் ஆகவில்லை. ஆகவில்லையென்று அவர்களுக்குத் தெரியுமோ தெரியாதோ. தெரிந்தால்—தெரிந்

தால்—, தெரிந்தாலென்ன? நான் ஏழை. அவர்கள் பணக்காரர். நான் தாய் தந்தையில்லாத பையன். படிப்பும் அதிகமில்லை. வேறு என்ன இருக்கிறது. அவளை நான் கலியாணம் பண்ணிக்கொள்ளலாம் என்று நினைப்பது முடவன் கொம்புத்தேனுக் காசைப்பட்டதுபோல் தான். நான் அப்படி எண்ணங்கொண்டால் மூடனாவேன்.—ஆனால் அவள் என்னை அன்றைய தினம் பார்த்தாள். பார்வை திருப்திகரமாகத்தான் இருந்தது. ஆனால் நிச்சயமாய் ஒன்றும் சொல்லமுடியாது. அவள் சிறு பெண். அவளுக்குக் காதலென்பதே தெரியாது. ஒரு வாலிபன் தன்னை நேசிக்கிறான் என்பது தெரியாது. அது அவளுடைய குற்றமன்று. ஆனால் ஏன் அடிக்கடி என்னைப் பார்த்தாள்? என்மேல் விசுவாசம் இருக்கலாம். தன்னைக் காப்பாற்றினதற்காக விசுவாசமும் நன்றியறிவும் இருப்பது நியாயந்தான். ஆனால் என்னைக் கலியாணம் செய்துகொள்ளவேண்டுமென்பது என்ன நியாயம்? என்மேல் காதல் தானாக ஏற்படவேண்டியதேயன்றி அவளுக்கு பகாரம் செய்ததனால் ஏற்படுமா? அல்லது தன்னைக் காப்பாற்றியபோது நான் இருந்த ரூபத்துக்கும் இப்பொழுதிருக்கும் ரூபத்துக்கும் வித்தியாசம் அதிகம் உண்டு ஆகலால் அதற்காக விநோதமாய் என்னைப் பார்த்திருக்கலாம். அடிக்கடி பார்ப்பதற்கும் இடமுண்டு. ஏன்? என்னைக் காதலித்தும் பார்க்கலாம், காதலின் தன்மையை அறிந்து மிருக்கலாம். சிறு பெண் அறியக்கூடாதென்று எங்கேனும் சாஸ்திரம் உண்டா? அப்படியிருந்தால் எப்படி யறிகிறது? ஐரோப்பியர்களா, ஒரு விசாரமுமில்லை. நேரில் பெண்ணை கண்டு பேசலாம். வாய் கூசாமல் மெய்சிலிர்க்காமல் பெண்ணிடம் 'நீ என்னைக் கலியாணம் செய்துகொள்வாயா? நீ என் பெண்சாதியாயிருக்க இஷ்டப்படுகிறாயா? என்று தாராளமாய்க் கேட்கலாம். அதனால் குற்றமில்லை. பெண்ணும் குற்றமாக எடுத்துக்கொள்ளமாட்டாள். பிறரும் அப்படி நினைக்கமாட்டார். ஆனால் இந்தியாவிலா? அதிலும் பிராமண ஜாதியிலா? அது முடியாத காரியம். நாம் கண்டு கேட்டால் நம்மைப்படாதபாடு படுத்துவார்கள். என்ன செய்வது? கடவுள் விட்டவழி விடட்டும்."

இப்படி இருக்க சாம்பசிவய்யர் சுந்தரமய்யர் வரும்படி சொல்லியனுப்பினார். சாம்பசிவய்யர் பெரிய மனிதர். அதிலும் சுந்தரமய்யருடைய ஸ்நேகிதர். அவர் சொல்லியனுப்பியதும் சுந்தரமய்யர் வெள்ளிக்குடிக்குப் போய்ப் பார்த்தார். சாம்பசிவய்யர் ஊரில் தங்களையறியாமல் உண்டான வதந்தியையும் தம் மனைவி ஞானம்பாளின் தோழியாகிய மீனாக்ஷி என்னும் பெண்ணின் மூலமாய் ஞானம்பாள் கோபாலன் மேல்

கொண்ட காதலைப்பற்றி அறிந்ததையும் கூறினார். அன்றியும் தன் பெண் கோபாலனைக்கலியாணம் செய்துகொள்ள இஷ்டப்படுவதால் அப்படியே இருவருக்கும் கலியாணம் செய்வித்தல்மிகவும் நலம்என்றும் அப்படிப்பட்ட கலியாணம் நல்லசம்பந்தமாய் இருவருக்கும் உள்ள அன்பை விருத்திசெய்ய ஏதுவாகும் என்றும் சொன்னார்.

"கோபாலனுக்கு ஞானம்பாளைக் கலியாணம் செய்துகொள்ள விருப்பம் இருந்தால் இந்தக்கலியாணத்தைப்போல நல்லக்கலியாணமே கிடையாதென்பேன்." என்று சொன்னார்.

சுந்தரமய்யர் மிகவும் சந்தோஷமடைந்தாலும் ஆசைக்காட்டிக் கொள்ளவில்லை. தம்மைப்போல் ஒரு ஏழைக்குடும்பத்தில் சம்மந்தம் செய்வது எத்தனையோ காரியங்களுக்கு அனுகூலமென்று எண்ணித் தம் கலியாண விஷயத்தில் மிக ஜாக்கிரதையா யிருந்தார். தான் மணந்த பெண்ணை முதலில் பார்த்துக் காதலித்துப் பிறகு கலியாணம் செய்ய வில்லை. எப்படியோ, நல்ல சம்பந்தம் நேர்ந்தது. இப்பொழுதோ— அதாவது கோபாலன் விஷயத்திலோ—பெண் வீட்டார் மிகவும் பணக் காரர். தானோ அல்லது கோபாலனோ மிகவும் ஏழை. அதிலும் கோபாலன் படிக்காதவன். இனி மேலே படிப்பதென்றாலும் முடியாத காரியம். தொழிலோ அபாயகரமான தொழில்.

"நீங்கள் சொல்வதை யறிந்துகொண்டேன். ஆனால் கோபாலன் மிகவும் ஏழை. உங்களுக்கு அந்த விஷயம் தெரியாது. நான்தான் அவனைக் காப்பாற்றிவருகிறேன். படிப்போ பூஜ்ஜியம், மேலே படிப்ப தற்கு பணமும் இல்லை. அவனுக்கு மனமும் இல்லை, படிப்பை நிறுத்தி விட்டேன். அவன் என்மேலேயே பாரத்தைப் போட்டுவிட்டான். என் வேலையை கற்றுக்கொள்ளவேண்டுமென்றான். சரி, கற்றுக்கொள், என் றேன். அந்த வேலையென்ன—ஒரு கால் சுடுகாட்டிலும் ஒரு கால் வீட் டிலும் வைத்துக்கொண்டு வேலை செய்யவேண்டும். எத்தனை தடவை நான் நம்பிக்கையில்லாமல் என் விஷயத்தைக் கைவிட்டுவிட்டு என் மனை விக்கும் மருமானுக்கும் நான் அடையப்போகும் கதியைச் சொல்லக்கூட முடியாதென்று எண்ணினேன். நீந்துபவனுக்கு நீரிலே சாவு என்கிற படி எங்கள் பாடு, எப்பொழுதும் அபாயமானதுதான். ஆகையால் நீங் கள் சம்பந்த விஷயத்தில் சிறிது யோசனை செய்துதான் சொல்லவேண் டும். ஏன் இந்த விஷயத்தை உங்களிடம் சொல்லுகிறேன் என்றால் நீங் கள் எனக்கு வேண்டியவர். உங்களிடத்தில் இவற்றைச் சொல்லாமல் எப்படி யிருப்பேன்? ஆகையினால்தான் நான் உங்களை எச்சரிக்கை செய்கிறேன்."

"சுந்தரமய்யர், அதெல்லாம் என்னிடத்தில் சொல்லாதேயும். ஏழை யாவது பணக்காரனாவது. ஏழையாயிருக்கிறவன் ஒரு நிமிஷம் பணக்கார னாகிறான். பணக்காரன் ஒரு நிமிஷம் ஏழையாகிறான். அதிலெல்லாம் என்னவிருக்கிறது? படிப்புக்கு என்ன? புத்தி அபாரமான புத்தி யிருக்கி றது. குற்றம் கொலை கொள்ளை இவைகளெல்லாம் கண்டுபிடிப்பது சாமா னியமா? எவ்வளவு சிரமம்? எவ்வளவு புத்தி நுட்பம் வேண்டியிருக்கும்? வேலைக்கென்ன? இங்கிருந்தால் அபாயமில்லையா? எங்கும் அபாயந் தான். நடந்தால்கூட எங்கு தடுக்கிக் கீழேவிழுந்து பல் உடையுமோ என்ற அபாயம் இருக்கிறது. அவைகளையெல்லாம் யோசித்துப்பார்த்துத் தான் உம்மைக் கேட்கிறேன். உங்களுக்கு இஷ்டமானால் எல்லாம் இஷ் டந்தான். அவனுக்கு அவள்மேல் இஷ்டமிருக்கிறதா என்பதை யறிந்து சொல்லும்."

"அவன் ஏழையாயிற்றே. சோற்றுக்குத் துணிக்குக்கூட கிடை யாதே. அப்படிப்பட்ட இடத்தில் சம்மந்தம் செய்ய விரும்புகிறீர்களே என்றுதான் மலைக்கிறேன்."

"ஆஸ்தி எவ்வளவு இருக்கும்?"

"ஆஸ்தியுமில்லை. நானாக என் வருமானத்தில் சிறிது அவனுக் கென்று எடுத்துவைக்கிறேன். அவனாகச்சம்பாதித்தது ஒரு ஆயிர ரூபாய் வரையில் சேர்ந்திருக்கும். அவன் ஒரு மடையன். பணம் வந் தால்கூட வாங்கிக்கொள்ள மாட்டேன் என்கிறான். இப்படியிருந்தால் ஏழையாகவேதானே இருக்கவேண்டும்."

"அதனாலென்ன. கலியாணமென்று ஒன்று செய்துவிட்டால் அவன் பாடு எங்கள் பாடு. அவனை நாங்கள் கைவிடவா போகிறோம்?"

"அதற்கில்லை. உங்கள் ஸ்திதிக்கும் எங்கள் நிலைமைக்கும் எண்ணி வைத்துப்பார்த்தாலும் முடியாத காரியமே, என்றுதான் சொல்லு றேன்."

"ஆனால் பெண்ணின் மனம் ஒன்றிருக்கிறதே. அவள் மனம் கோணாமல் இருக்கவேண்டுமென்பது என் கருத்து. அவள் இச்சித்த புருஷனைக்கலியாணம் செய்துவைக்கவேண்டியது. அவனிஷ்டமென் னவென்று கேட்டுத் தகவல் சொல்லுங்கள்."

"அதற்கென்ன சொல்லுகிறேன்." என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டுபோய்விட்டார்."

இச்சம்பாஷணை காலையில் நடந்தது. சுந்தரமய்யர் தமதூருக்குச் சென்றார். செல்லும் வழியில் பின் வருமாறு யோசனை தோன்றிற்று.

"சாம்பசிவய்யர் நமக்கு வேண்டியவர். பணக்காரர். நாமோ ஏழை. ஏழை சம்பந்தம் வேண்டாம் என்றேன். கேட்கவில்லை. படிப்பில்லை என்றேன். அதற்கும் கேட்கவில்லை. உத்தியோகமும் நல்ல உத்தியோகமில்லையென்றேன், மிகவும் அபாயகரமானது என்றேன். அப்பொழுதும் ஒரே பிடிவாதமாயிருக்கிறார். ஞானம்பாள் கோபாலனைக் கலியாணம் பண்ணிக்கொள்ளவேண்டுமென்றாள் என்கிறார். அப்படியே கோபாலனுக்கும் ஆசையிருக்குமா? அவனுக்கு வயதாயிற்று. சீக்கிரம் கலியாணம் செய்துவைக்கவேண்டியது நமது கடமை. அதற்குத்தான் பிரயத்தனப்படுகிறோம். ஆனால் சம்பந்தம் உயர்ந்ததாயிருக்கிறது. அவரே மாப்பிள்ளை ஏழையாயிருக்கிறான் என்று எண்ணித் தன்னிஷ்டப்படி நடக்க எண்ணினால், கோபாலன் பிடிவாதக்காரனாயிற்றே. என்ன சொன்னாலும் கேட்கமாட்டானே. ஏதாவது செய்யவேண்டுமென்று எண்ணினால் ஒரே பிடிவாதமாயிருப்பானே. ஒருவருக்கொருவர் சற்று கோபம் உண்டாகிவிட்டால் அப்புறம் அனர்த்தந்தானே. போகிறது. எல்லாவற்றையும் நல்லதாகவே எண்ணுவோம். அவனுக்கு இஷ்டமிருக்கிறதா? ஞானம்பாள் ஜாதகம் சரியாயிருக்கிறதா? இவற்றையறிந்து கொண்டல்லவா எல்லாம் மேல் பேசவேண்டும்?"

வீட்டிற்குச்சென்றதும் கோபாலனை யழைத்து தான் போய் வந்த சமாசாரமனைத்தையும் சொன்னார். "இந்த மாதிரியிருக்கிறது. அவர் உனக்குப்பெண்ணைக்கொடுக்க இஷ்டப்படுகிறார். பெண்ணும் உன்னைக்கலியாணம் பண்ணிக்கொள்ள இஷ்டந்தானாம். அதையும் விசாரித்தார்களாம். உன்னபிப்பிராயத்தைச் சொல்லு" என்று முடித்தார்.

கோபாலன் அவர் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தான். அவர் மனைவி ஒரு பக்கமாய் நின்றுகொண்டிருந்தாள். கோபாலன் சற்று நேரம் யோசித்தான். என்ன சொல்லுகிறது என்று தோன்றவில்லை. தனக்குக் கிடைக்கவேண்டும் கிடைக்கவேண்டும் என்று தவமிருந்த பொருள் தனக்குக் கிடைப்பதாயிருக்கிறது. வேண்டுமென்றால் இவனுடையதுதான். இல்லையென்றால் இவனுக்கு இனி பாத்தியமில்லை. வேறு எவரேனும் கொண்டுபோய் விடுவார்.

"என்னபிப்பிராயத்தைச் சொல்லுமுன் நான் தங்களையொரு சந்தேகம் கேட்க விரும்புகிறேன்."

"என்ன சந்தேகம்?"

"இதுவரையில் என்னைக் காப்பாற்றி வருகிறீர்கள். இன்னம் காப்பாற்றுவர் உங்களைத்தவிர வேறு சிநேகிதர்கள், பந்துக்கள் ஒருவ

ரும் பூவுலகில் இல்லை. என்னுடைய நன்மையைக் கோறுவார் நீங்கள் ஒருவரே. எனக்காகப் பாடுபடுவோரும் நீங்கள் ஒருவரே. ஆகையால் நீங்கள் செய்கின்ற காரியங்கள் எல்லாம் எனது நன்மைக்காகத்தான். ஆனால் ஒரு சந்தேகம் உண்டாகிறது."

"என்ன சந்தேகம்? சொல்லேன்."

"கலியாண விஷயமாய் எல்லாரும் இல்லாததை யெல்லாம் இருக்கிறதென்றும், முட்டாளை வித்வானென்றும் கையாலாகாதவனை சாமர்த்தியவானென்றும் சொல்லி ஏமாற்றுவார்கள். நீங்கள் உள்ளது உள்ளபடியே சொன்னதுமன்றி சம்பந்தம் அவ்வளவு உசிதமில்லையென்றும் சொன்னீர்கள். உசிதமில்லையென்று நேரிடையாகச் சொல்லாவிட்டாலும் ஊகித்தறியும்படிச் சொன்னீர்கள். ஏன் அவ்விதம் சொன்னீர்கள் என்பது தெரிந்தால், பிறகு என்னபிப்பிராயத்தைச் சொல்லுகிறேன்."

"ஏனா? நாம் ஏழை—அவர்கள் பணக்காரர்கள். ஏழைக்கும் பணக்காரருக்கும் சம்பந்தம் திருப்திகரமாயிருக்காது. பிறகு நமக்குத்தான் கஷ்டம். ஒரு சமயம் நாமே சரியாயிருக்கவில்லை. பெண்ணையனுப்பமாட்டேனென்று சொன்னார்கள். நம்மைத் தொந்தரை செய்தார்கள். நாமென்ன செய்கிறது? அவர்கள் மனம் கோணுதபடி நாம் நடக்கவேண்டும். சற்று ஏறத்தாழ என்றிருக்க முடியாது. அவர்களுக்குத் தகுந்த மரியாதைகள் செய்வது என்றால் நம்மால் முடியாது. நம்முடைய வரும்படி நம்முடைய செலவுக்கே போதாது. அது உனக்குத் தெரிந்த விஷயம். அதோடுகூட இன்னொரு விஷயம் இருக்கிறது. நீ ஒரு போக்குக்காரன். உன் சுபாவம் அறிந்தாலொழிய உன்னுடன் அவர்கள் நடந்துகொள்வது நன்றாயிராது. உனக்குக் கோபம் வந்துவிட்டால் நன்றாயிராது. ஒரு ஏழைக்குடும்பமா யிருந்தால் ஒன்றுக்கொன்று சரிக்கட்டிக்கொள்ளும். அதனால்தான் சொன்னேன். ஆனால் நான் உன்னைக் குறைவாய்ச் சொன்னேன் என்று எண்ணாதே. உன்னுடைய அறிவு சாமர்த்தியம் எவ்வளவு என்று எனக்குத் தெரியாததல்ல. உன்னுடைய குற்றம் குறைகள் என்னவென்பது எனக்குத் தெரியும். உன்னை அவமானப்படுத்த வேண்டுமென்பதல்ல. உன்னை நானே ஸ்தோத்திரம் செய்யக்கூடாதல்லவா? நீ இன்னம் கெட்டிக்காரனாய் இருக்கவேண்டுமென்றல்லவா என்னபிப்பிராயம்? ஆனால் நான் சொல்லக்கூடாது, நீ கெட்டிக்காரனென்று, உலகம் சொல்லவேண்டும். அப்பொழுதுதான் கியாதி உனக்கு."

"ஆகையால், இந்த சம்பந்தம் உங்களுக்குப்பிடிக்கவில்லை?"

"பிடிக்கவில்லையென்று சொல்லவில்லை. பின்னால் ஒரு சமயம் கஷ்டம் நேரிடுமோ என்று எண்ணிச்சொன்னேன்."

"அப்படியானால் வேண்டாம்."

"உனக்குப் பெண் பிடித்திருக்கிறதா?"

"அதைப்பற்றியென்ன?"

"பிடித்திருந்தால் ஒரு சமயம் கலியாணம் நடக்கலாம் அல்லவா?"

"சம்பந்தந்தான் நல்லதில்லையே."

"நல்லதில்லையென்று சொல்லமுடியுமா? அவர்கள் பணக்காரர்கள், நமக்குப் பிடிக்குமா என்றேன்."

"உங்களுக்கிஷ்டமிருந்தால் எனக்கிஷ்டம். இல்லாவிட்டால் எனக்கு இல்லை."

"சரி நீ போ" என்று சொன்னார். கோபாலன் வெளியில் போனான். அவர் மனைவி தன் புருஷன் அருகில் வந்து நின்றாள்.

"அந்தப்பெண்ணைப் பார்த்தாயா?"

"பார்த்தேன். நல்ல அழகுள்ளவள் தான்."

"சம்பந்தம் செய்யலாமா?"

"செய்யாமலென்ன? செய்யலாம்."

"அதற்கில்லை. அவர்கள் பணக்காரர்கள். நாம் ஏழை. அதனால் தான் சொன்னேன். நான் ஏழையென்றுதானே உன்னை ஒரு ஏழைக்காட்டில் பிடித்துவந்தேன். நீயே தினந்தோறும் என்னுடன் சண்டைசெய்கிறாய். பணக்காரப்பெண்ணானால் அகம்பாவம், கர்வம், முதலிய துர்க்குணம் எல்லாம் வந்துவிடுமே?"

"அதெல்லாம் அந்தப்பெண்ணிடத்தில் இல்லையென்று சொல்வேன். சிவனேயென்று கலியாணத்திற்கேற்பாடு செய்யுங்கள். அதுதான் நல்லது. அவனுக்கும் வயது ஆயிற்று. இன்னம் கலியாணம் செய்யாமல் இருந்தால் நன்றாயிராது. நம்முடைய இஷ்டப்படியா உலகம் நடக்கிறது. விதிபோல் எல்லாம் நடக்கும். நம்முடைய ஜாக்கிரதையில் ஒன்றுமில்லை."

தம் மனைவியினுடைய யோசனை நல்லதென்று கொண்டார். "விதியொன்று இருக்கிறது. எவர் கையிலும் அகப்படக்கூடியது அது ஒன்றுதான். அதன்படி நடத்தலே சரி," என்று எண்ணினார்.

மறுபடியும் கோபாலனைக் கூப்பிட்டு தனக்குச் சம்பந்தமிஷ்டந்தான் என்றும் அவனுக்கு பெண்ணைக்கலியாணம் செய்துகொள்ள மனமிருக்குமானால் தாம் அன்றையதினமே வெள்ளிக்குடிக்குப்போய்த் தகவலைச்சொல்லுவதாயும் சொன்னார். கோபாலன் தனக்கு யாதொரு ஆக்ஷேபமும் இல்லை யென்றான்.

# XX. "அது வரினும் வந்தெய்தும்."

சுந்தரமய்யர் தாம் வாக்களித்தபடியே சாம்பசிவய்யரிடம் போய் கலியாணத்திற்கு தமது சம்மதத்தைக் கொடுத்துவிட்டு வந்தார். சாம்பசிவய்யரும் கலியாணத்தை சீக்கிரம் நடத்துவது மேல் என்றெண்ணி தமது பந்துக்களுக்கும் ஸ்நேகிதர்களுக்கும் கடிதம் முதலானவை யெழுதலானார். சங்கரனும் சென்னையிலிருந்து சீக்கிரம் வருவதாகக் கடிதம் எழுதியிருந்தான். கலியாணம் நிச்சயமாய் இரண்டு நாளாயிற்று. சாம்பசிவய்யர் தன் மாப்பிள்ளையினிடம் பேசவேண்டி அவனைவர வழைத்தார். அதற்காக கோபாலன் வெள்ளிக்குடிக்குப்போனான். அவன் எண்ணங்கள் எல்லாம் ஞானாம்பாளைப்பற்றியே. அவ்வளவு அழகும் புத்தியும்வாய்ந்த ஒரு பெண் தனக்குக்கிடைக்கமாட்டாள் என்று எண்ணியிருக்கத்திடீரென்று அவனுக்குக்கிடைத்தது, முடவன் ஆசைப்பட்ட கொம்புத்தேன் அம்முடவனுக்குக்கிடைத்துவிட்டது போலாயிற்று. அவன் தன்னைக் காதலித்துத் தன் காதலைத் தன் தந்தையிடம் தெரிவித்துத் தன்னைக் கலியாணம் செய்துகொள்ள ஏற்பாடு செய்தாள் என்பதை நினைக்க அவனுக்கு அடங்கவொண்ணா ஆனந்தம் உண்டாயிற்று. அவள் தன்னைக் காதலிக்கக் கூடிய வயது அவளுக்கு இன்னம் ஆகவில்லை என்று நினைத்தது பிசகென்று எண்ணினான். அவ்வளவு வயதும் புத்தியும் உடைய பெண் தன்னைக் கலியாணம் செய்ய இருக்கிறாள் என்று எண்ணி மகிழ்ச்சியடைந்தான். அவனை யறியாமலே யவள் முகத்தில் பிரகாசமும் உதடுகளில் புன் சிரிப்பும் உண்டாயின. அவன் தன்னை யறியாமலே நடந்துகொண்டிருந்தான். அவன் திடீரென நிமிர்ந்தான். மேல் மாடியில் ஒரு பெண் இருந்தாள். மேல் மாடியில் உள்ள கைப்பிடிச்சுவரில் சாய்ந்துகொண்டு தன் இடது கையை மடித்து சுவரின்மேல் வைத்து மற்ற கையால் தன் கன்னத்தைத் தாங்கிக்கொண்டிருந்தாள். அவள் அழகுள்ளவளாயிருந்தாள் என்று நாம் சொல்லவேண்டியதில்லை. அவளைப் பார்த்ததும் அவன் இன்னம் அதிக ஆனந்தங்கொண்டான். அப்பெண்மணியும் அவனைப்பார்த்துப் புன்சிரிப்புக்கொண்டாள். கால் நிமிஷ நேரம் இருவரும் ஒருவரையொருவர் பார்த்தார்கள். இருவரும் புன்சிரிப்புடன் இருந்தார்கள். அப்பெண்மணி நாணமிகுந்தவளாய் திடீ

ரென மறைந்துவிட்டாள். அவள் தான் நின்றுகொண்டிருந்த இடத்தை விட்டகலும்போதே அவள் மனத்தில் பல எண்ணங்கள் உண்டாயின. கோபாலனைப்பார்த்ததும் ஏதோ ஞாபகம் உண்டாயிற்று. நன்றாய் யோசித்துப்பார்த்தாள். ஆம், தானும் மீனாக்ஷியும் ஒருநாள் பேசிக்கொண்டிருந்து பின் யோசனையிலாழ்ந்து மாடியின் கைப்பிடிச் சுவரின்மேல் சாய்ந்து கொண்டிருந்தபோது தான் பார்த்த வாலிபன் தான் இவன் என்று தோன்றிற்று. நினைக்க நினைக்க அது வாஸ்தவமான காட்சிதான், என்றும் தோன்றிற்று. அடங்கவொண்ணா ஆனந்தங்கொண்டாள். கோபாலன் கீழே வருவான் என்று எண்ணிச்சென்றாள். அவன் தன் தங்கையினுடன் பேசுவதிலும் அவன் உட்காரும் நிலைமையிலும், தன் தலையை அசைப்பதிலும், கையை யாட்டுவதிலும் அவன் செய்யும் ஒவ்வொரு காரியங்களிலும் ஓரழகு தோன்றுவதைக் கண்டாள். அவனைப் பார்க்கப் பார்க்க அவன் மேலிருந்த ஆசையதிகமாயிற்று. அவள் அவனுடன் தனிமையில் பேசி அவனை யாலிங்கனம் செய்து முத்தமிட எண்ணினாள். ஆனால் அதற்குச் சமயம் வாய்க்கவில்லை. அதனால் காதல் இன்னும் அதிகரித்தது. கோபாலன் ஞானம்பாளைப்போல் காதல் கொள்ளாமலிருக்கவில்லை. அவனுக்கும் இவ்விதம் எண்ணங்கள் உதித்தன.

கலியாண காலம் நெருங்கிற்று. பந்துக்களெல்லோரும் வந்துவிட்டார்கள். கோபாலன் தனக்குக் கலியாணம் நடக்குமென்பது உண்மையோ அல்லது கனவோ என்று எண்ணினான். ஒருகால் இது என் கனவாயிருக்கக் கூடாதென்று ஆலோசித்தான். "ஆயினும் இது கனவல்ல, ஒருகால் இக்கலியாணம் இவ்வளவு சீருஞ்சிறப்புடன் ஆரம்பமாயிற்றே, நாளையதினம் கலியாண நாளாயிற்றே; முன்போல் அவள் கோயிலுக்குப்போய் மறுபடியும் ஏதாவது கஷ்டமடைந்தால்—; ஆனால் முன்பு வந்த அந்தப் பாதகர்கள் போலீஸாரால் பிடிக்கப்பட்டு அநேக குற்றங்கள் செய்ததாகத் தீர்மானிக்கப்பட்டு கொடுந்தண்டனையடைந்து விட்டார்கள். வீரம்மாளும் அவர்களுக்குப் பலதடவை உடந்தையாய் இருந்ததாக (அப்பாதகர்களால் காட்டிக்கொடுக்கப்பட்டு) குற்றஞ் சாட்டப்பட்டு தக்க தண்டனையடைந்து விட்டாள். தான் அறிந்த வரையில் யாதொரு பயமுமில்லை. ஆனாலும் வேறுயாராவது வந்தால்,—' அவன் வேகமாய் சாம்பசிவய்யர் வீட்டிற்குள் நுழைந்து மேல் மாடியில் ஏறி அங்கிருந்த அறைக்குள் புகுந்தான். ஞானம்பாள் அங்கு சுவரில் இருந்த ஒரு படத்தைப்பார்த்துக்கொண்டிருந்தாள். கோபாலன் நுழைந்ததும் அவள் திரும்பிப் பார்த்தாள். கோபாலனையிருக்கக்கண்டு தலை குனிந்து நாணத்துடன் நின்றாள். ஆயி

னும் கடைக்கண்ணுல் சிறிதுப் பார்க்கப்பிரயத்தினப்பட்டுக்கொண்டிருந தாள் என்று சொல்லலாம்.

"ஞானும்பாள்—;"

அவள் ஒன்றும் பதில் சொல்லவில்லை.

"ஞானும்பாள், உன்னைப்பார்க்கவந்தேன்."

மறுபடியும் மௌனமாய் இருந்தாள்.

"என் இன்னம் பேசாமலிருக்கிருய்? என் இங்கு வந்தேன் என்று கேட்பாயோ? என் விசாரம் எனக்குத் தெரியும். அன்றைய ஞாபகம் வந்தது. உன் பக்கத்திலேயே இருந்தால்—"

சிறிது சிறிப்பும் மந்தமான சப்தமும் ஞானும்பாளிடம் உண்டாயிற்று.

"நாளையதினம் என் மனைவியாவாய். சாஸ்திரோக்தமாய் மனைவியாவாய். ஆனுல் இப்பொழுதே உன்னை மனைவியாக வரித்துவிட்டேன்."

ஞானும்பாள் கால் கட்டைவிரலைப் பார்த்துக் கொண்டே நின்றுள்.

"என்ன கதையில் நடிப்பதுபோல் நடிக்கிருயே. நீ என்ன பேசாமடந்தையா? மௌனம் சம்மதம் என்பார்கள். நான் சொல்வதெல்லாம் உனக்குச் சம்மதந்தானு? நீ பேசாமலிருக்கத்தான்வேண்டும். பிராமணப் பெண். நாணம் அச்சம் முதலிய குணங்கள் இருக்க வேண்டியதுதான் ஆனுலும்—(அவன் கிட்டப்போனுன்.) நான் என்ன செய்யப்போகிறேன் தெரியுமா? உன் கையைப்பிடிக்கப் போகிறேன். நான் உன் கையைப் பிடிப்பது உனக்கிஷ்டமில்லை யென்றுல் நான் உன்னைத் தொடுமுன் சொல்லிவிடு. கூச்சலிடாதே. சொல்லிவிட்டால் நான் வெளியில் போயிவிடுகிறேன்." என்று சொல்லிக்கொண்டே, அவள் கையை எடுத்தான். அவள் இன்னம் அதிகமாக ஆனந்தமும் புன்சிரிப்பும் கொண்டாள். அவளைத் தன் னிரண்டு கையாலும் கட்டியணைத்து ஒரு முத்தமிட்டான்.

"ஞானும்பாள்! இப்பொழுதாவது ஒரு வார்த்தை சொல்லமாட்டாயா? உன் வாயிலுள்ள முத்து உதிர்ந்துபோமா? என்மேல்தயவில்லையா?"

"நாதா!" என்று மேன்மையான குரலில் சொன்னுள்.

"அவ்வளவுதான் எனக்கு வேண்டியது." மறுபடியும் முத்தமிட்டான்.

"நான் உன்னை முதலில் கண்டபோது உன்னைக் கலியாணம் செய்ய வேண்டும், என்று எண்ணவில்லை. உன்னைப்பார்த்து உன்னைத்தூக்கிக் கொண்டு வந்தவுடன்,—அதிலும் உனக்குக் கலியாணமாகவில்லை, நீ

ஒரு கன்னிகை. நான் அடையப் பிரயத்தினப்பட பாத்தியதையுண்டு. என்று எண்ணினவுடன் உன்மேல் எனக்காசையுண்டாயிற்று. இப்பொழுது தான் அந்த ஆசை நிறைவேறிற்று."

அவன் சிறிது நேரம் நின்றான். "உட்காருவோம் வா" என்று ஒரு பெஞ்சியில் உட்கார்ந்தான். ஆனால் அவள் உட்காராமல் பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள்.

"ஞானம்பாள் உன்னை ஆபத்தினின்றும் தப்புவித்தப்பின்பு உன்னையே காதலித்து அக்காதல் என் மனத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் போதே உனக்காக நான் பணம் வாங்கலாமோ. உன்னை காதலிக்காவிட்டால் வேறுமாதிரி. நான் செய்தவேலையின் கூலி பணம் அல்ல. பின் என்ன தெரியுமோ?—,

அவளை இருகத்தழுவி முத்தமிட்டுச் சொன்னான்.

"உன் காதலும் உன்னை ஆலிங்கனம் செய்து முத்தமிட சாச்வதமான பாத்தியதையும் தான் எனக்கு வேண்டியவை. அவைதான் நான் உனக்காகச் சிரமப்பட்டுச் செய்த வேலையின் கூலி. அக்கூலி எனக்குப் போதும்."

"நாதா. அவைதான் நானும் விரும்புவது. அவைகளே எனக்குப் போதுமானவை. உங்களுடைய அன்பும் உங்களுடைய ஆலிங்கனமும் முத்தமும் நான் உங்களை ஆலிங்கனம் செய்து முத்தமிடப் பாத்தியமுடையவள் என்பதும் எனக்கிருந்தால் போதும்."

கோபாலனும் அடங்காத மகிழ்ச்சிகொண்டு அவளுடன் கொஞ்சி விளையாடிக்கொண்டிருந்தான். அவர்களிருவரும் தங்களைப் பற்றிய ஞாபகத்திலேயே மூழ்கியிருந்தமையால் பக்கத்தில் என்ன நடந்ததென்றாவது யார் வந்து போயினார் என்றாவது கவனிக்கவில்லை. ஞானம்பாளின் தாயார் அங்கு வந்து அவர்களை ஜாடையாய் பார்த்துவிட்டுப் போய்விட்டாள். சங்கரன் கோபாலனைக் காணவேண்டி உயரச்சென்று பார்த்து, தான் அங்கு வந்தது தவறென்று எண்ணி கீழே இறங்கிப் போய்விட்டான். அவன் தந்தை மாடிக்குப்போக எண்ணங்கொண்டிருப்பதை யறிந்து தடுத்துவிட்டான். கோபாலனையும் ஞானம்பாளையும் அறியாமலே எத்தனையோ காரியங்கள் நடந்துகொண்டிருந்தன. நம்மையறியாமல் எத்தனையோ காரியங்கள் நடக்கின்றன. எல்லாம் நமக்குத் தெரிவதென்றால் எவ்வளவு சிரமமும் கவலையும் உண்டாகும்?

மறுநாள் நல்ல முகூர்த்தத்தில் சிரஞ்சீவி கோபாலனுக்கும் சௌபாக்கியவதி ஞானம்பாளுக்கும் கலியாணம் யாதொரு தடையுமின்றி நடந்தே

றியது. எல்லோரும் சந்தோஷமடைந்தார்கள். வைதீகர்கள் சாம்பசி வய்யரை வாழ்த்திச் சென்றார்கள். ஊரிலுள்ளோ ரெல்லாம் இன்னம் சில நாளைக்கு அடுப்பு எக்கேடு கெட்டாலென்ன வென்றிருந்தார்கள். இராமசாஸ்திரிகள் மிகவும் சந்தோஷமடைந்தார். அவருக்குத் தக்ஷிணை யதிகமாய் கிடைத்தது. சாப்பாடும் முதல்கட்டு சாப்பாடுதான். அவர் மிகவும் திருப்தியடைந்தார். அவரைப்போல் தம்பதிகளை மனமாற வாழ்த்தினவர் வைதீகர்களில் ஒருவரும் இல்லையென்னலாம்.

மீனாக்ஷி இந்த சம்பந்தத்தைக் கண்டு மிகவும் சந்தோஷங்கொண்டாள். இரண்டாம் நாள் ஞானம்பாளிடம், "எப்படியோ உன் எண்ணத்தை நீ சாதித்துவிட்டாய். உன்னிஷ்டப்படியே அவரைக் கலியாணம் செய்துகொண்டாய். இனி என்னுடன் அதிகமாய்ப் பேசுவாயா? உன்னுடன் பேச ஒருவர் வந்து விட்டார் அல்லவா? என்னை மறக்காதே." என்று கேலி செய்தாள்.

சாம்பசிவய்யர் மனைவி நல்ல மாப்பிள்ளை தனக்குக் கிடைத்ததைப் பற்றி அகமகிழ்ந்தாள். சாம்பசிவய்யர் கோபாலனின் குணங்களையும் அறிவையும் பேசுந்திறமையையுங் கண்டு தேகம் பூரித்தார். சுந்தரமய்யரும் அவர் மனைவியும் ஞானம்பாளின் குணத்தையும் அழகையும் கண்டு மனமகிழ்ந்தார்கள். ஊரிலுள்ளோ ரெல்லாம் இந்த சம்பந்தத்தைப் பற்றிப் புகழ்ந்து பேசினார்கள். எல்லாம் மங்களமாக நான்குநாளும் கலியாணம் நடந்தேறிற்று.

கோபாலனுக்கும் ஞானம்பாளுக்கும் உண்டான ஆனந்தத்தை யளவிட நம்மால் முடியாது. அவ்வளவு சந்தோஷங்கொண்டார்கள். ஆம், சந்தோஷந்தான். முன்பின் அறியாத இவர்கள் ஏதோ ஒரு தற்செயலான சம்பவத்தால் ஒருவரை ஒருவர் அறிந்துகொண்டார்கள். பெருங்காடுபோன்ற இவ்வுலகத்தில் உள்ள அநேகம் பாதையில் இரண்டில் இவர்கள் நடந்துபோய்க் கொண்டிருந்து திடீரென இருவரும் சந்தித்து அச்சந்திப்பால் காதலுண்டாகி அதனால் அவர்களுக்கு விவாகமுண்டாய் இருவரும் ஒருகாலும் பிரியக்கூடாத கட்டுப்பாட்டிற்குள்ளாய் அவ்வுலகமாகிய ஆரண்யத்தில் தமக்கென்று ஒரு வழி ஏற்படுத்திக்கொண்டு ஒருவரை யொருவர் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு அவ்வழியில் சென்று கொண்டிருக்கிறார்கள். முன்பின் அறியாதவர்களை யறியச்செய்து அவ்வறிவால் அன்புண்டாக்கி விருத்திசெய்து அதை நல்வழியில் நடத்தும் கால புருஷனுடைய மகிமையை என்னென்று விவரிப்பது!

## சீக்கிரம் வெளிவரும்.

வேலையின் கூலியின் ஆசிரியர் எழுதியவை.

1 அன்பின் வலிமை.

2. காணாமற்போன மரணசாஸனம்.

இரண்டும் துப்பறியும் நாவல்கள்.

துப்பறியும் சுந்தரமய்யருடைய அற்புத செய்கைகள் எழுதப்பட்டிருக்கின்றன.

---

The first four formes of வேலையின் கூலி (pages 1—32) printed at the Krishna Vilas Press, and the rest at the Wednesday Review Press.